**காணி சுவீகரிப்புக்கு எதிராக முல்லையில் உணவு தவிர்ப்பு**
*காணி உரிமையாளர்கள் நாளை ஏற்பாடு*
பக்.08

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 கதிர் 152 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 13, செவ்வாய்க்கிழமை 26.04.2016

## மாங்குளத்தில் கோர விபத்து; முதியவர் சாவு

மாங்குளம், ஏப். 26
மாங்குளம் ஏ-9 வீதி, மாங்குளம் மகா வித்தியாலயம் முன்பாக நேற்று மாலை சைக்கிளில் பயணித்த ஒருவரை ஹைஏஸ் வாகனம் மோதியதில், சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பக். 25

## மின்வேலியில் சிக்கி குடும்பஸ்தர் சாவு

வவுனியா. ஏப். 26
கிணறு ஒன்றைச் சுற்றிக் காட்டுப் பன்றிக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு, இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு வவுனியா-வெள்ளையன் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வவுனியா பணிக்கர் பக். 25

### வடக்கு அரசின் இணக்கத்துடன்

# காங்கேசன் சிமெந்து ஆலை மீள ஆரம்பம்

## அமைச்சர் ரிசாத்தின் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
வடக்கு மாகாண அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு கொழும்பு அரசின் வர்த்தக வாணிப அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
'சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படாமல், மூலப்பொருளான கிளிங்கரை இறக்குமதி செய்து, அதனூடாகச் சிமெந்து பொதி செய்யப்பட்டு, விற்பனை செய்யும் வகையில் எதிர்காலத்தில், சிமெந்துத் தொழிற்சாலை இயங்கவுள்ளது' என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாக, காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையை பக். 25



# தடையேதுமின்றித் தொடர்கின்றது கொக்கிளாயில் விகாரை அமைப்பு

## காணி அமைச்சின் அறிவுறுத்தல் உதாசீனம்

யாழ்ப்பாணம், ஏப். 26
கொக்கிளாயில் தனியார் காணிக்குள் விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு காணி அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் பணிகளுக்கு எதிராக எந்தவொரு தரப்பினராலும் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
கொக்கிளாயில் தனியார் காணியில், பக். 25



# சிமெந்து ஆலையில் இரும்பு திருடியோர் குறித்து விசாரணை

## குற்றவாளிகள் யாராக இருப்பினும் தண்டனை உறுதி என்கிறார் ரிசாத்

யாழ்ப்பாணம், ஏப். 26
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து, அதன் இயந்திரங்கள் இரும்புக்காக வெட்டிக் கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில், ஜனாதிபதி - பிரதமரின் கவனத் பக். 25

# பெற்றோல் விநியோகம் யாழில் இன்று வழமைக்கு



யாழ்.நகரில் நேற்று மாலை பெற்றோல் நிரப்ப வரிசையில் காத்திருந்தோர்

யாழ்ப்பாணம், ஏப். 26
யாழ். குடாநாட்டில் பெற்றோலுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை மற்றும் தட்டுப்பாடு இன்றுடன் நீங்கிவிடும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய காரியாலய வட்டாரங்கள் தெரிவித்தன.
பெற்றோல் கப்பலின் வருகையில் பக். 25

## ரி.ஐ.டியினரின் பிடியில் ராம்

கொழும்பு, ஏப். 26
கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்த, தமிழீழ விடு பக். 25

# குற்றப் புலனாய்வு அதிகாரியை கடுமையாக எச்சரித்த நீதிவான்

## வித்தியா படுகொலை வழக்கில்

யாழ்ப்பாணம், ஏப். 26
நீதிவான் கூறியிராத விடயத்தை, அவர் கூறியதாகச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத் தெரிவித்த குற்றப் புலனாய்வு அதிகாரியைத் திறந்த நீதிமன்றில் வைத்துக் கடிந்து கொண்ட ஊர் பக். 25

# காணாமற்போன உறவுகளுக்காக கடவுளிடம் மன்றாடும் பரணகம

கிளிநொச்சி. ஏப். 26
காணாமற்போனவர்கள் உயிருடன் இருக்கவேண்டும் என்று தாம் இறைவனிடம் மன்றாடுவதாகக் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பக். 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொக்கிளாய் களப்பில் இறால் பிடிக்க டிசெம்பர் மாதம் வரையிலும் அனுமதி

## கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.26

முல்லைத்தீவு - கொக்கிளாய் களப்பில் மேற்கொள்கொள்ளப்படும் கூட்டு வலை இறால் பிடித் தொழிலுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களப்பணிப்பாளர் நாயகம் கிறிஸ்ரிலால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொக்கிளாய் களப்புப் பகுதியில் கடற்றொழில் ஈடுபடும் திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டத் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அமைக்கப்பட்ட 14 முகாமைத்துவக் குழுக்களின் 5ஆவது கலந்துரையாடல் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்திருந்த பணிப்பாளர், குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டார். அங்கு மீனவர்களுடைய கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது களப்பினுள் பயன்படுத்த செய்யக்கூடாத விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் களப்பு முகாமைத்துவக் குழுக்களால் எட்டப்பட்டது. கலந்துரையாடலில் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அதற்கமைவாக கொக்கிளாய் களப்பினுள் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்குச் சொந்தமான பாரம்பரிய இயந்திர மயமாக்கப்படாத மீன்படிக் கலன்கள் இருப்பின் அவற்றை மீன்பிடி அதிகாரியிடம் பதிவு செய்து பதிவு இலக்கத்தை உரிய மீன்பிடிக் கலன்களில் தெளிவாகத் தெரியும் வகையில் அடையாளமிடல் வேண்டும்.

களப்பினுள் மீன்பிடியில் ஈடுபடும் ஒவ்வொரு மீனவரும் தம்மால் பயன்படுத்தப்படும் மீன்பிடி முறைக்கான அனுமதியை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடமிருந்து செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும்.

பிரதேசத்தினுள் மணல் அகழ்வு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. கடல் விமானம் களப்பினுள் பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது, கழிவுப் பொருள்கள் போடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

களப்பு முகாமைத்துவப் பிரதேசத்தினுள்ளும் அதனை அண்டிய பிரதேசத்தினுள்ளும் இறால் பண்ணை அமைப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முகாமைத்துவப் பிரதேசத்தை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் கண்டல் தாவரங்களைச் சட்ட விரோதமாகக் கையாள்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

களப்பு முகாமைத்துவப் பிரதேசத்தை அண்டியபிரதேசங்களிலும் களப்பினுள்ளும் இயந்திரப் படகு பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இயந்திரப் படகுகள் களப்பு முகத்துவாரப் பகுதியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை களப்பினுள் பாவனையில் ஈடுபட முடியும். அத்துடன் அதிகாரமிக்க உத்தியோகத்தர்களின் பாவனைக்காக இயந்திரப் படகு அனுமதிக்கப்படும்.

களப்பு முகாமைத்துவப் பிரதேசத்தை அண்டிய பிரதேசங்களிலும் களப்பினுள்ளும் கூட்டு வலை பாவனை, கரவலை, தங்கூசி வலை பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது போன்ற தீர் மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்போது பாரம்பரியமாக தாங்கள் செய்துவரும் கூட்டு வலைக்கு அனுமதி வழங்கப் படாமையால், திருகோணமலையைச் சேர்ந்த ஆயிரத்து 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவதாகவும், கூட்டு வலைக்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர். அத்துடன் இயந்திரப் படகுகளை பாவிப்பதற்கும் அனுமதி தரும்படி கேட்டிருந்தனர்.

மீனவர்களுடைய கோரிக்கைக்கு பதிலளித்த கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர்- நாட்டில் உள்ள 116 களப்புக்களிலும், நாங்கள் இதனைக் கவனத்தில் கொள்கிறோம். அதேவேளை 30 களப்புகளில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். நீங்கள் இப்போது வாழும் வாழ்க்கையை விட சுபீட்சமான வாழ்க்கை வாழவேண்டும் என்றுதான் நாங்கள் ஆசைப்படுகின்றோம். வளத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முகாமைத்துவத்தை நாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு சிலர் 40க்கும் மேற்பட்ட கூட்டுவலையைப் பாவிக்கிறார்கள். அதனால் பல அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர். உங்களுடைய நாடாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை நீங்கள் உங்களுடைய தொழிலை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய மாவட்ட அதிகாரிகளுடன் இணைந்து ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவரக் கூடிய திட்டத்தை நீங்கள் வகுத்துக் கொள்ளவேண்டும். டிசெம்பர் மாதம் வரை அனுமதி என்று எண்ணி எல்லாவற்றையும் செய்து உங்கள் வளத்தை நீங்களே அழிக்க வேண்டாம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தௌபிக் மற்றும் கடற்றொழில் நீரியல் வள அதிகாரிகள், மீன்பிடி சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

(ற-ஐ-ரி7,21)

## பாடசாலைகளில் சிரமதானம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி, ஏப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக நேற்றுத் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து பாடசாலை வளாகத்தைப் பெற்றோர் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளனர்.

முதலாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் காலப் பகுதியில் மழை பெய்துள்ளதாலும், பிரதேசத்தில் கோடை மழை பெய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாலும் பாடசாலை வளாகங்களைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்காகப் பெற்றோர்கள் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் பாடசாலை வளாகத்தில் காணப்படும் சிறு பற்றைகள் மற்றும் குப்பைகளைத் துப்புரவு செய்து அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கு அறிவித்து குப்பைகளை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் அல்லது மே மாத முற்பகுதியளவில் மழை பெய்யக்கூடிய வாய்ப்புகள் பிரதேசத்தில் காணப்படுவதால், உறக்க நிலையில் காணப்படும் டெங்குக் குடம்பிகள் மழை பெய்தால் மீண்டும் வளர்ச்சியடைந்து மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாடசாலை வளாகக் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-9)

## சிறுமிக்கு ஆபாசப் படம் காட்டி அத்துமீற முயன்றவர் கைது

மன்னார்,ஏப்.26

5 வயதுச் சிறுமிக்கு ஆபாசக் காணொலியைக் காட்டி சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முற்பட்டார் என்று தெரிவித்துச் சந்தேக நபர் ஒருவரைப் பேசாலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று மன்னார் – பேசாலைப் பகுதியில் நடந்துள்ளது.

5 வயதுடைய சிறுமி பிரத்தியேக வகுப்பொன்றுக்காகச் சென்றிருந்தவேளை, அந்தச் சிறுமிக்குச் சந்தேக நபர் ஆபாசக் காணொலியைக் காட்டி துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவேளை, சிறுமி தப்பிச்சென்று குறித்த விடயத்தைப் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த விடயம் தொடர்பாக பெற்றோர்களால் பேசாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பேசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-21)



கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் உதயனுக்கு நேற்று வந்தனர். உதயன் மீதான கடந்த காலத் தாக்குதல்களின் ஒளிப்படங்களை அவர்கள் பார்வையிட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கையை, உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் கையளித்தார். கடந்த காலத்தில் ஆயுததாரிகளால் எரியூட்டப்பட்ட உதயனின் இயந்திரப் பகுதியையும் அமைச்சர் ரிசாத் பார்வையிட்டார். (ற-ஐ-5-21)

# காணாமற்போன ஆசிரியரின் சம்பளத்தை இறப்புச் சான்றிதழ் பெற்றால் பெற முடியும்

## மனைவியிடம் காணாமற் போனோர்ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 26

ஆசிரியராகக் கடமையாற்றிய போது காணாமற்போன கணவனின் சம்பளத்தை தற்போது பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தற்காலிக இறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று காணாமற் போனோர் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

காணாமற் போனோர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பரணகம ஆணைக் குழுவின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான சாட்சியப் பதிவுகள் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் சாட்சியமளித்த சாந்தகுமார் வாசுகி என்பவர் தனது சாட்சியத்தில் –

எனது கணவர் ஒரு ஆசிரியர். ஆசிரியராக இருப்பதோடு மட்டுமல்லாது விடுதலைப்புலிகள் அமைப்பின் கல்வித்துறை மற்றும் நிதித்துறை போன்றவற்றில் பணியாற்றியிருந்தார். இறுதி யுத்தத்தின் போது தாயாரை அழைத்துவரச் சென்றபோது நாம் பிரிந்து விட்டோம். பின்னர் 2009ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 17ஆம் திகதி காலை எனது மாமியார் என் கணவரை வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். இதுவரை எனது கணவர் எங்கு இருக்கின்றார் என எனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார்.

மூன்று பிள்ளைகளுடன் பெரிதும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றேன், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் எனது கணவனின் சம்பளம் கிடைக்கவில்லை. மாதாந்த உதவிப் பணம் மற்றும் சமுர்த்தி ஆகியவற்றைப் பயன்படுத்தியே வாழ்ந்து வருகின்றேன். கணவரின் சம்பளம் தொடர்பாக துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது கணவனின் இறப்புச் சான்றிதழை அல்லது கையெழுத்து வைக்கப்பட்ட கடிதத்தை பெற்றுத் தரும் பட்சத்தில் சம்பளம் பெறலாம் எனத் தெரிவித்தார்கள்.

– எனவும் அவர் குறிப் பிட்டார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம –

தற்காலிக இறப்புச் சான்றிதழை பெறும் பட்சத்தில் நிலுவையில் உள்ள சம்பளம் முதல் தற்காலம் வரையான சம்பளத்தைப் பெற முடியும். அத்தோடு ஓய்வூதியம் போன்றவற்றையும் பெறமுடியும். இறப்புச் சான்றிதழ் பெற்றாலும் கணவன் பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இறப்புச் சான்றிதழ் வேண்டுமானால் உடனடியாகப் பதில் கூறத்தேவையில்லை நாளைய தினமோ அல்லது அடுத்த நாளே பதிலைத் தெரிவிக்கலாம் என்றார். (ற-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலரால் சங்கானைப் பிரதேச செயலக மூன்று மாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம் - III, பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் - I, யாழ்ப்பாணப் பிரதேச செயலக இரண்டு மாடி நிர்வாகக் கட்டடம் கட்டம் - I, தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் -V, கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் -IV, மாவட்டச் செயலக மேல் தள ஆண் மலசலகூட புனரமைப்பு, மாவட்டச் செயலக தகவல் தொழில்நுட்ப பிரிவு புனரமைப்பு வேலை ஆகிய கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் "நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியில் 26.04.2016 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 26.04.2016 முதல் 11.05.2016 வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 2000/= கட்டடணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 12.05.2016 திகதியன்று பிற்பகல் 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 12.05.2016 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகளின் மூலப் பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணை பொறுப்பு 120 நாள்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.
8. Prebid Meeting 06.05.2016 முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/ Con.Work/ CHAN-III/11/02/2016 | சங்கானைப் பிரதேச செயலக மூன்றுமாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம் - III | 12.20 | 06 | C 6 | 122,100.00 | 2000/= |
| JF/ADM/ Con.Work/ Point Pedro - 11/10/2016 | பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் -I | 13.04 | 06 | C 6 | 130,500.00 | 2000/= |
| JF/ADM/ Con.Work/ Jaffna-11/07/2016 | யாழ்ப்பாண பிரதேச செயலக இரண்டு நிர்வாகக் கட்டடம் கட்டம் -I | 12.28 | 06 | C 6 | 122.850.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C T/01/17/2016 | தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV | 3.55 | 03 | C 7 | 35,500.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C P/01/16/2016 | பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் -V | 5.27 | 03 | C 7 | 52,700.00 | 2000/= |
| JF/CDA/ E,C.C K/01/15/2016 | கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV | 3.51 | 03 | C 7 | 35,200.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C CH/01/14/2016 | சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV | 4.34 | 03 | C 7 | 43,400.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/16 | மாவட்டச் செயலக மேல்தள ஆண் மலசல கூட புனரமைப்பு வேலை | 2.31 | 03 | C 8 | 23,140.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/17 | தகவல் தொழில்நுட்ப பிரிவு புனரமைப்பு வேலை | 0.83 | 03 | C 8 | 8,400.00 | 2000/= |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

(தி/21274)
(11,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லியடி பொலிஸ் நிலைய முன்னாள் அதிகாரி மறியலில்

### தாஜுதீன் கொலைத் தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஏப். 26

நெல்லியடிப் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா, தாஜுதீன் கொலை வழக்கில் தகவல்களை மறைத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சுமித் பெரேரா, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரியாக இருந்தபோது, தாஜுதீன் கொல்லப்பட்டார். குறித்த கொலை தொடர்பான வழக்கை மூடி மறைத்து, அதனை விபத்துச் சாவு என வழக்கை முடிக்குமாறு, மேலதிகாரிகளால் தனக்கு அறிவுறுத்தப்பட்டதாக, அவர் கைதாவதற்கு முன்னர் இடம்பெற்ற விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியிலிருந்து வேறு பல இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்று, வடக்கில் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தார். அங்கு தனது மகன் மற்றும் பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு என்று தையல் கடைகளில் ஆடைகள், ஜன்னல் சீலைகள் தைத்துவிட்டு, அதற்குரிய பணத்தை திணைக்களத்திடமிருந்தும் பெற்றுவிட்டு அதனைத் தையல் கடைக்காரருக்கு வழங்காது பணத்தை மோசடி செய்திருந்தார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அதன் பின்னர் அவர் மன்னாருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த நிலையில், மீண்டும் பருத்தித்துறை பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரியாக இருந்தார். பின்னர் அவர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், தாஜுதீன் வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-4)

## போதையில் சாரத்தியம் ஒரு மாத கடூழியச் சிறை

### சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 26

மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு ஒருமாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிமன்று 8 மாதங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை இடை நிறுத்தம் செய்ததுடன், அபராதமும் விதித்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த நபர் மது போதையில் வாகனம் செலுத்தியதான குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு ஒருமாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தவிர அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை 8 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்ட நீதிமன்று, ஏழாயிரம் ரூபா அபராதமும் விதித்தது. (ஐ-4)

தவறிவிட்டது
கதிர்காமநாதன் மதீஸ்வரன் ஆகிய எனது 963112416V இலக்க தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ATM தவறிவிட்டது.
077 683 4542

காணி தேவை
கோப்பாய், உரும்பிராய், ஊரெழு ஆகிய பகுதியில் 3-4 பரப்புக்காணி விலைக்கு தேவை.
தொடர்பு: 076 613 3801

விற்பனைக்கு உண்டு
45 நாள்கள் நிரம்பிய நல்லின ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
077 474 3973

# கிராமங்களை இணைக்காதவர்கள் வடக்கு, கிழக்கை இணைப்பார்களா?

## பிரதியமைச்சர் அமீர் அலி கேள்வி

கொழும்பு,ஏப்.26



இரண்டு கிராமங்களை இணைக்க முடியாதவர்களுக்கு வட கிழக்கை எவ்வாறு இணைக்க முடியும் என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அமீர் அலி கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பு நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய பிரதியமைச்சர், வெறும் வீராப்புப் பேசி எனது நாடாளுமன்றக் கதிரையை வீணடிக்க விரும்பாத அரசியல்வாதி நான் ஒரு கிராமத்துக்குள் இருக்கும் களுவாஞ்சிக்குடியும், பட்டிருப்பும் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாது என்றால், எதிர்காலத்தில் வடக்கையும், கிழக்கையும் நீங்கள் எவ்வாறு இணைக்கபோகின்றீர்கள் என்று குறிப்பிட்டார். (ற-ஐ-5)

## துயர் பகிர்கின்றோம்



அமரர் நாகேந்திர
பாலசுப்பிரமணியக் குருக்கள்



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள்
சாந்தஸ்வரூபக் குருக்கள்

கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமான நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் திடீர் மறைவினைக் கேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அவர்களின் பிரிவினால் மீளாத்துயரில் மூழ்கியிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


K.K.V. குலரெத்தினம் குடும்பம்
பாராவோடை, களபூமி, காரைநகர்.

(ஜெ/690)
(11,17)

## மரண அறிவித்தல்

### சொர்ணலிங்கம் கணேசநாதன்

மண்ணுலகில்
1939 . 08 . 28



விண்ணுலகில்
2016 . 04 . 25

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சொர்ணலிங்கம் - கணேசநாதன்(முன்னைநாள் பிரதம செயலாளர் ஆளுநரின் செயலாளர் - வடக்கு கிழக்கு மாகாணம்) 23.04.2016 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம் - உமாதேவி தம்பதியரின் மகனும் முத்துபாலசூரியர் - கற்பகம் தம்பதியரின் மருமகனும் ரூபராணியின் பாசமிகு கணவரும் காயத்திரி(ஆஸ்திரேலியா), கீதிகா(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன்(ஆஸ்திரேலியா), பாலசசீந்திரன்(அமெரிக்கா) ஆகி யோரின் அன்பு மாமனும் ஹர்சினி, சஜீவா, சஞ்சிதா, சரண்ணியா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கைலைநாதன் மற்றும் கமலா (கனடா), விமலா(கனடா), துவாரகன்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.04.2016 வியாழக்கிழமை ஜியோங் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு : 0061 4999 94349
மின்னஞ்சல்: soganesha1939@gmail.com

# இந்திய அரசின் நிதியுதவியில் மலையக மக்களுக்கு வீடமைப்பு

## இந்தியத் தூதுவர் சிங்ஹா அடிக்கல் நட்டார்

கொழும்பு,ஏப்.26

இந்திய அரசின் நிதியுதவியில் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4 ஆயிரம் தனி வீடமைப்புத் திட்டத்துக்கான முதலாவது வேலைத்திட்டத்துக்கு அடிக்கல் நடும் வைபவம் நுவரெலியா பூண்டுலோயா டன் சினன் தோட்டத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

மலையகப் புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சிங்ஹா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு 404 வீடுகளை நிர்மாணிப்பதற்காக முதல் அடிக்கல்லை நட்டார்.

அத்தோடு இலங்கைக்கான கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் இராதா வெங்கட்ராமன் உள்ளிட்ட தேசிய சுக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் ஆகியோருடன் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், எம்.உதயகுமார், சரஸ்வதி சிவகுரு அடங்கலாக மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வீ.புத்திரசிகாமணி, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் எனப் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர். (ற-ஐ-4)

## க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு - 2018க்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பாகி நடைபெறுகின்றன எனக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தெரிவித்துள்ளார்.

புதிய வகுப்புக்களுக்கு இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத மாணவர்கள் நாளை 27 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறும் அவர் தெரி வித்துள்ளார். (ற-ஐ-ரி)

## அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி பெரியமாவடி உளுத்தம்புலம் பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

திருவிழா தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுவதுடன், எதிர்வரும் மே மூன்றாம் திகதி விசேட அபிசேகம் நடைபெற்று திருவிழா நிறைவு பெறும். (ற-ஐ-9)

## வரி அறவீடுகளுக்கான நடமாடும் சேவை இன்று

சாவகச்சேரி,ஏப்.26

சாவகச்சேரி நகரசபையின் வட்டார ரீதியிலான வரி அறவீடுகள் தொடர்பான நடமாடும் சேவை இன்று செவ்வாய்க் கிழமை நகரசபையின் ஆறாம் வட்டாரமான நுணாவில் மத்தியில் நடைபெறவுள்ளது.

நுணாவில்- மத்தி கிராம அலுவலரின் அலுவலகத்தில் இடம்பெறும் நடமாடும் சேவையில் , ஆறாம் வட்டார மக்கள் தமது ஆதனவரி, வியாபாரவரி மற்றும் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளுக்கான கட்டணங்களைச் செலுத்த முடியும் என்று சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

அதேவேளை சபையின் ஏழாம் வட்டாரமான நுணாவில் கிழக்குப் பிரிவுக்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் வியாழக்கிழமை நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும் என்றும் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாவதி சந்திரசேகரன்



ஏழாலை மத்தியைப் பிறப்பிட மாகவும் கொக்குவில் மேற்கை வதி விடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி சந்திரசேகரன் நேற்று (25.04. 2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பி ஐயா - ரத்தினவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்திரசேகரனின் மனைவியும் சுஜாதா, சுதர்ஸன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோபல கிருஸ்னன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷ்ன ஜினா, கஜலக்ஷன், சாயிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கலாவதி, சந்திரபூபதி காலஞ்சென்ற சொக்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜவாகு, நளாயினி, தயமந்தி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 601 1969

## கண்ணீர் அஞ்சலி

யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்
திருமதி நித்தியகலா குணராஜா
(யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)
அவர்களின் தாயார்
திருமதி சரஸ்வதி சரவணபவானந்தனின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இசை ஆசிரியர் கழகம்,
யாழ் கல்வி வலயம்.

## சுற்றாடல் சட்ட நடைமுறைக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்ப்பாண மாவட்ட சுற்றாடல் சட்ட நடைமுறைக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம், சுத்திகரிப்பு நிலையம், நீர்வள முகாமைத்துவம், பொலித்தின் பாவனைக் கட்டுப்பாடு, ஒலிமாசு, மணல் அகழ்வு உட்பட 10க்கும் மேற்பட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

மேற்படி கூட்டத்துக்கு மாவட்ட மட்டத்தில் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள், செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கைப் புலனாய்வுத் துறை சிறப்பாகச் செயற்படுகிறது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.26

மலேசியா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையுடன் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து வருகின்றன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புலனாய்வுச் சேவை, அரசின் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளது என்று கூறிப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள அவர், புலனாய்வுத்துறை பல்வேறு நாடுகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது என்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகளுடன் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டைப் பிளவுபடுத்தவோ, தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கவோ அரசு இடமளிக்காது.

இலங்கை அரசும், வடக்கில் உள்ள அரசியல்வாதிகளும், அதிகாரப்பகிர்வு பற்றிக் கலந்துரையாடலாம். அதன்போது, நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்புஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ளப்படும்.

நல்லிணக்கச் செயல்முறைகளை முன்னெடுக்கின்றபோது, இலங்கையின் ஒற்றுமையைப் பாதுகாக்கின்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் - என்றார். (ற-ஜ-5)

# அம்பாறை முஸ்லிம் மக்களுக்கு தனி நிர்வாக மாவட்டம் தேவை

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, ஏப்.26

**இலங்கையில் அம்பாறை** மாவட்டக் கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கி, முஸ்லிம் மக்களுக்கான தனி நிர்வாக மாவட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த நிர்வாக மாவட்டம் தற்போது நாட்டில் இருக்கும் 25 நிர்வாக மாவட்டங்களுக்கு அப்பாற்பட்டு 26 ஆவது மாவட்டமாகவோ அல்லது தென்கிழக்குக் கரையோரம் தனியான நிர்வாக மாவட்டமாகவோ இருக்கலாம் என்று அந்தக் கட்சியின் உயர்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நிர்வாக நடவடிக்கைகள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடைபெற்று வருகின்றன. தென்கிழக்குக் கரையோர மாவட்ட மக்களுக்கான தனி நிர்வாக மாவட்டம் ஏற்படுமாயின், அங்குள்ள மக்கள் இலகுவாகத் தமிழ்மொழியில் நிர்வாகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கிழக்கு மாகாணம் தனி மாகாணமாக இருக்கவேண்டும் என்று சில முஸ்லிம் கட்சிகள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையின் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ள நிலையில், வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் இணைந்த ஒரு மாகாணமாக இருக்க வேண்டும் என்று வட மாகாண சபை நிறைவேற்றியுள்ள தீர்மானம், ஒரு தலைபட்சமானது என விமர்சித்துள்ள முஸ்லிம் கட்சிகள் சில, அவை தனித்தனி மாகாணங்களாகவே இருக்க வேண்டும் எனக் கூறி வருகின்றன. (ற-ஜ-5)

# கடும் போக்கு இனவாத அமைப்புக்கள் நல்லாட்சியிலும் தலை தூக்கியுள்ளன

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை, ஏப்.26

மகிந்த ஆட்சியில் கொட்டமடித்த கடும் போக்கு இனவாத அமைப்புக்கள் இன்றைய நல்லாட்சிக் காலத்திலும் தலை தூக்கத் தொடங்கியுள்ளமை கவலை தரும் விடயமாகும். - இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக்கூட்டம் கல்முனையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த மகிந்த ஆட்சிக் காலத்தில் உரமூட்டி வளர்க்கப்பட்ட கடும்போக்குச் சிங்கள இனவாத அமைப்புக்கள் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களுக்கு அச்ச மூட்டும் வகையில் கொட்டமடித்துச் செயற்பட்ட வரலாற்றை எளிதில் மறந்துவிடமுடியாது.

இத்தகைய அமைப்புக்களின் கொட்டங்களை அடக்கவும், மகிந்தவின் அராஜக ஆட்சியை ஒழிக்கவுமே ஆட்சி மாற்றம் ஒன்றுக்காகச் சிறுபான்மையின மக்கள் முழு மூச்சுடன் செயற்பட்டனர்.

சிறுபான்மையின மக்களின் ஒருமித்த ஆதரவு காரணமாக ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு வழி கோலப்பட்டதுடன் இன்றைய நல்லாட்சியும் மலர்ந்தது.

நல்லாட்சி மலர்ந்து சகல இன மக்களும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் மீண்டும் இனவாத கடும் போக்கு பௌத்த அமைப்புக்கள் தலை தூக்கத் தொடங்கியுள்ளன. நல்லாட்சியின் செயற்பாடுகளுக்கும், நல்லிணக்க முனைப்புக்களுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இத்தகைய அமைப்புக்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

சிறுபான்மைச் சமூகங்களை மீண்டும் அச்சமூட்டிப் பேரினவாத அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கும் வகையிலான சமிக்ஞைகளை இந்த அமைப்புக்கள் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இத்தகைய விசமச் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை கைது செய்ய வேண்டுமெனவும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற கருத்துக்களும் வெளிவந்துள்ளன.

கடும்போக்கு இனவாத அமைப்புக்களான பொதுபல சேனா, சிங்கள ராவய ராவணபலய, எனும் அமைப்புக்கள் இத்தகைய விசக் கருத்துக்களைக் கக்கியுள்ளன. நல்லாட்சியிலும் இத்தகைய கும்பல்களின் தலையெடுப்புக்கள் சிறுபான்மை மக்கள் மத்தியில் அதிருப்தியையே ஏற்படுத்தும். நல்லாட்சி அரசு மீண்டும் மகிந்த யுக இனவாதக் கொட்டங்கள் மேலோங்க இடமளிக்காது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இன்று முக்கிய காலகட்டத்தில் நாம் இருந்து வருகின்றோம். நல்லாட்சி அரசு அரசமைப்பு மாற்றத்தினூடாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் முனைப்பிலுள்ளது.

இது சிறுபான்மைச் சமூகங்களுக்குக் கிடைத்துள்ள பெரும் வாய்ப்பு மட்டுமன்றி இறுதிச் சந்தர்ப்பமுமாகும்.

எனவே நாம் இந்தச் சந்தர்ப்பத்தை மிகச் சாதுரியமாகப் பயன்படுத்த வேண்டும். இதற்குக் குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயான புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்புக்களுடனான ஒற்றுமையும் அவசியமாகும்.

இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையே அதிகாரப் பகிர்வின் முழுமையைத்தரும் என்ற எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனின் அறைகூவலை எம் இரு சமூகங்களும் முக்கிய கவனத்திற் கொண்டு செயற்படவேண்டும் - என்றார். (ற-ஜ-30)

# கூட்டுப் பயிற்சிகள் தொடர்பாகவே அமெ. கடற்படைத் தளபதி பேச்சு

கொழும்பு, ஏப்.26

கடற்படையின் சிறப்புப் படைப் பிரிவுக்கும், அமெரிக்க கடற்படையின் சீல் படைப்பிரிவுகளுக்கும் இடையில், கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான பேச்சு நடத்தவே, அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் சிறப்பு நடவடிக்கைத் தளபதி இலங்கைக்கு வந்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் சிறப்பு நடவடிக்கைத் தளபதியான, ரியர் அட்மிரல் கொலின் கில்ரெய்ன், கடற்படைத் தளபதி, வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ரியர் அட்மிரல் கொலின் கில்ரெய்ன், அமெரிக்கக் கடற்படையின் சீல் படைப் பிரிவின் முன்னாள் கொமாண்டோ ஆவார். இவர், கடற்படைத் தளபதியுடன், கடற்படையின் எஸ்.பி.எஸ் எனப்படும், சிறப்புப் படகுப் படையணி மற்றும் அமெரிக்கக் கடற்படையின் சீல் படையணிக்கும் இடையிலான கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வது தொடர்பாகவே பேச்சு நடத்தியுள்ளார்.

1995 ஆம் ஆண்டு பலன்ஸ் ஸ்ரைல் பயிற்சி என்ற பெயரில், படைகளுக்கு அமெரிக்காவின் சீல் படைப்பிரிவு பயிற்சிகளை வழங்கி வந்தது.

இலங்கையின் மனித உரிமை மீறல் பிரச்சினைகளை அடுத்து, அந்தப் பயிற்சிகள், பின்னர் இடை நிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் இந்தப் பயிற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவே தற்போது பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவே, 1993 ஆம் ஆண்டு, எஸ்.பி.எஸ் எனப்படும் சிறப்புப் படகுப் படையணியை உருவாக்கியவராவார். இரண்டு தடவைகள் அதன் கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். (ற-ஜ-5)

**பெயர் மாற்றம்**

ஆச்சிரம வீதி. இணுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த **வயித்தியன் செல்வராசன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வைத்தி செல்வராசா** என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**வை.செல்வராசா**

**யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழையமாணவர் சங்கம் பொதுக்கூட்ட மறு அறிவித்தல்**

எதிர் வரும் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சங்க பொதுக்கூட்டமானது தொழிலாளர் தினம் காரணமாக 08.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன்.

அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்பட மாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்ளும்இவ்வேளையில் அனைத்து அங்கத்தவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**இராசநாயகம் ஸ்ரீரங்கன்**
**செயலாளர்.**

**வீடு வாடகைக்கு உண்டு**

பலாலி றோட் சிவராஜா வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**077 436 4068**

**தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் ஹாட்வெயர் பொருள்கள் மற்றும் காஸ் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள கணக்காளர் மற்றும் வேலையாள்கள் தேவை. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**077 225 0149**

**வேலையாள்கள் தேவை**

ஹோட்டல் ஒன்றுக்கு கொத்து ரொட்டி தயாரிப்பவரும் உதவியாளரும், வெயிட்டரும் உடன் தேவை.

**076 897 2849**

**மணமகன் தேவை**

யாழ் இந்து 1989.10.03, நேரம் 9.27 a.m கிழமை - செவ்வாய், நட்சத்திரம் விசாகம் 1ஆம் பாதம், ராசி துலாம் கிரகபாவம் 4 ½ ஜாதகத்தில் சூரியன் செவ்வாய் உண்டு. உயரம் 5' 1" , பொது நிறம் படிப்பு BBA (1st Class) AAT முடித்த CA இறுதியாண்டில் உள்ள 26 வயதுடைய மணமகளுக்கு அரச மற்றும் வங்கிகளில் பணிபுரியும்

**தொடர்பு: 075 068 6819**
**076 918 2683** (மாலை 6.00 பின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



தட்டுவன் கொட்டி ஆனையிறவை நிரந்தர முகவரியாகவும் கண்ணகி நகர் புன்னை நீராவியை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வம்

**சுப்பிரமணியம் பாலச்சந்திரன்**

கடந்த 30.03.2016 காலமாகியதனை இட்டு உடன் வந்து ஆவன மேற்கொண்ட நல்லுள்ளங்களுக்கும் ஒவ்வொரு பணிகளிலும் தமது பங்களிப்பை நல்கிய உறவுகள், நண்பர்கள், சுற்றத்தாருக்கும் அஞ்சலிப்பிரசுரம் பதாகைகள் அச்சிட்டோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 27.04.2016 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 29.04.2016 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகிநகர்,
புன்னை நீராவி.

பா.சிவச்சந்திரன்
(மகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**அமரர் திருமதி இராசமலர் செல்வநாயகம்**



மண்ணுலகு 11.04.1950

விண்ணுலகு 27.03.2016

கடந்த 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.115, பிரதானவீதி,
கோமாங்குளம், வவுனியா (வி/17) (11,17)

குடும்பத்தினர்.
077 446 9412

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்



பிறப்பு 26 . 04 . 1938

இறப்பு 26 . 04 . 2003

வண்ணார்பண்ணை தட்டாதெரு

அமரர் **கனகசபை அரசரட்ணம்**

(றிப்போட்டர்)

எமது வாழ்வில் மிளிர்ந்த ஒளி
வானத்து நிலவாய் வானகம் சென்றது
உங்களைக் காண ஏங்கும் பொழுதெல்லாம்
உங்கள் நினைவுகள் மௌன மொழியாய்
எம் இதயத் துடிப்பாய் நித்தம் ஒலிக்கின்றது
அனைவரையும் அன்பு மொழியாய்
ஆனந்த மழையாய் மகிழ வைத்தீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

56,Thorndon gardens,
EPSOM SURREY
KT 19 OQ W, U.K. (ஜெ/657) (11,17,18)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# நீங்கள் அரசியல் வாதியா? வர்த்தகரா? முதலமைச்சரிடம் கேட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.26

ஐந்து விரல்களிலும் தங்க மோதிரம் அணிந்திருந்த முதலமைச்சர் ஒருவரைப் பார்த்து, நீங்கள் அரசியல்வாதியா ? வர்த்தகரா ? என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வாரம், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது என்று தெரியவருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து கட்சி நிலவரங்கள் குறித்து உரையாடுவதற்கு அண்மையில் முதலமைச்சர் ஒருவர் வந்திருந்தார்.

அவரது கைவிரல்கள் அனைத்திலும் தங்க மோதிரங்கள் மின்னியுள்ளன. இதனைக் கண்ட ஜனாதிபதி மைத்திரிபால, 'என்ன முதலமைச்சரே, எல்லா விரல்களிலும் மோதிரங்கள் மின்னுகின்றனவே? தங்கம் தானா ? கழற்றுங்கள். பார்க்கலாம்' என்று கேட்டவுடன் குறித்த முதலமைச்சர் அனைத்து மோதிரங்களையும் கழற்றி ஜனாதிபதி முன்னிலையில் காட்சிப்படுத்தியுள்ளார். அதிலிருந்து ஒரு மோதிரத்தை ஜனாதிபதி கையில் எடுத்துப் பார்த்துள்ளார்.

அதன் பின்னர் முதலமைச்சரை நோக்கித் திரும்பிய ஜனாதிபதி, இவ்வாறு அனைத்து விரல்களிலும் மோதிரங்கள் போடுவது வர்த்தகர்களின் அடையாளம். நாங்கள் அரசியல்வாதிகள். எங்களுக்கு அநாவசிய ஆடம்பரங்கள் கூடாது. இதோ பார்த்தீர்களா? நானே இரண்டு மோதிரங்கள் தான் போட்டுக் கொண்டுள்ளேன் என்று இதமாக அறிவுரை கூறியுள்ளார். (ற-ஜ-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் **சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை**



பிறப்பு 16.11.1951

இறப்பு 30.03.2016

கடந்த 30.03.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்களது இறுதிச் சடங்குகளில் உடன் வந்து ஆவன செய்த அன்புள்ளங்களுக்கும், ஒவ்வொரு பணிகளிலும் தமது பங்களிப்பைச் செய்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், அஞ்சலிப் பிரசுரம்,பதாகைகள் அச்சிட்டோருக்கும், தொலை பேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகள். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.04.2016) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 29.04.2016 வெள்ளிக்கிழமை அவரது இல்லமான முள்ளியான், வடமராட்சி கிழக்கிலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேவில், முள்ளியான்,
வடமராட்சி கிழக்கு (கே/25) (11,17)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ வியாவில் சைவ வித்தியாலய அதிபர் திரு. க. சுந்தரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும்,
கோட்டக் கல்வி அலுவலகம், காரைநகர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர் **திரு சி.இளங்கோ** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கந்தையா சிவகுரு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளரும்,
அதிபர்களும், கோட்டக்கல்வி
அலுவலகம், காரைநகர்.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் காணி சுவீகரிப்பு உதவியாளராகக் கடமையாற்றும் **செல்வி இ.புஸ்பமாலா** அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் இரத்தினவேலு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்
நலன்புரி சங்கம்.

## கண்ணீர்அஞ்சலி



அமரர் நாகேந்திர
பாலசுப்பிரமணியக் குருக்கள்



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள்
சாந்தஸ்வரூபக் குருக்கள்

கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமடைந்த நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய அறங்காவலர் சபை,
(கே/680) (11.17) ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோயில், பாலாவோடை, களபூமி, காரைநகர்


# தந்தையை உலக்கையால் தாக்கியவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஏப்.26

தந்தையை உலக்கையால் தாக்கி காயப்படுத்திய மகனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கைதடி மத்தியில் தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக, மகன் தந்தையை உலக்கையால் தாக்கி காயப்படுத்தியுள்ளார். காயமடைந்த தந்தை சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மகனைக் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இவரை மே மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஜ-9)

# பருத்தித்துறைக் கோட்ட கல்வி அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய மா.நவநீதமணி நேற்று முதல் வடமராட்சிக் கல்வி வலயத்தின் பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவருக்கு வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் வழங்கப்பட்டு நேற்று திங்கட்கிழமை கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இது வரைகாலமும் பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய ச.ஸ்ரீஇராமச்சந்திரன் ஓய்வு பெற்றதையடுத்தே புதிதாக இவர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (ற-ஜ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையக் காணி விடயம்; முதலமைச்சருடன் வன்னி எம்.பிக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கான காணி அடையாளப்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருடன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை, கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான இடத்தை அடையாளப்படுத்துவதிலேயே இழுபறி நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஓமந்தையில் அமைக்குமாறு முதலமைச்சர் பரிந்துரைத்துள்ளார். ஆனால் அங்கு அமைக்க முடியாது என்று கிராமிய பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளதால் அங்கு அமைக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதனால் நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தாண்டிக் குளத்தில் அமைப்பதற்கு காணிகோரப்பட்டபோதும் அதற்கு முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

> வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு வரவு – செலவுத் திட்டத்தில் 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான இடத்தை அடையாளப்படுத்துவதிலேயே இழுபறி நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஓமந்தையில் அமைக்குமாறு முதலமைச்சர் பரிந்துரைத்துள்ளார். ஆனால் அங்கு அமைக்க முடியாது என்று கிராமிய பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் இந்தத் திட்டம் ஆரம்பிப்பதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்டத்தில், மக்கள் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கூடிக் கலந்துரையாடியுள்ளனர். திட்டத்தை ஓமந்தையில் செயற்படுத்த கிராமிய பொருளாதார அமைச்சரை, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சம்மதிக்கச் செய்வது அல்லது தாண்டிக் குளம் காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்க முதலமைச்சர் சம்மதிப்பது என்ற இரண்டில் ஓர் தீர்மானத்தை முதலமைச்சர் நிறைவேற்ற வேண்டும் என்றும் இதனை நேரடியாக முதலமைச்சருடன் பேசுவது என்றும் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமையவே நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது மேற்படி இரண்டு தீர்மானத்தையும் வலியுறுத்திய மக்கள் பிரதிநிதிகள், எந்தக் காரணத்தைக் கொண்டும் திட்டம் வவுனியாவை விட்டு வெளியில் செல்லக்கூடாதுஎன்றுதெரிவித்துள்ளனர்.

இதன் போது பதிலளித்துள்ள முதலமைச்சர், இந்தத் திட்டம் வவுனியாவை விட்டு வெளியில் செல்லாது என்றும், தான் நடவடிக்கை எடுக்கின்றேன் என்றும் பதிலளித்துள்ளார். (ற-ஜ-5)

## மரத்திலிருந்து தவறி வீழந்தவர் காயம்

சாவகச்சேரி,ஏப்.26

மாமரத்தில் காணப்பட்ட குருவிச்சைக் கிளைகளை வெட்டிய வர்த்தகர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் இடுப்பு எலும்பில் பாதிப்பு எற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை அல்லாரையில் இடம்பெற்றது. வீட்டு முற்றத்தில் காணப்பட்ட மாமரத்தில் வளர்ந்திருந்த குருவிச்சைக் கிளைகளை வெட்டிய வேளையிலேயே அவர் தவறி வீழந்துள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது.

இடுப்புப் பகுதியில் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-9)

## திருவடி நிலை தீர்த்தக்கரை விரைவில் மீள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட திருவடி நிலை புனித தீர்த்தக்கரை விரைவில் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு, சுற்றுலாத்துறை வசதிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பல நவீன வசதிகள் கொண்ட வேலைகள் நான்கு மில்லியன் ரூபாவில் முன்னெடுக்கப் படவுள்ளன.

இதற்கான ஆலோசனைகளையும், ஆவணங்களையும் வலி. மேற்கு பிரதேசசபைச் செயலாளர் வழங்கியுள்ளார்.

இதன்மூலம்பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயம், பறாளாய் சிவசுப்பிரமணியர் ஆலயம், பறாளாய் சித்தி விநாயகர் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயில், திருவடிநிலை வைரவர் ஆலயம் போன்ற பகுதிகள் என்பன நன்மை அடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதிய சுற்றுலாத்துறை பிரதேசமாக இந்த இடம் வலி.மேற்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

## ஓட்டோவுக்குள்ளிருந்த 13,500 ரூபா திருட்டு

கிளிநொச்சி, ஏப். 26

கிளிநொச்சி வைத்திய சாலைக்கு நோயாளரை ஏற்றிச் சென்ற ஓட்டோ, தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அதன் முன்பகுதி (டாஸ்போட்) போலித் திறப்பால் திறக்கப்பட்டு அதனுள்ளிருந்த 13 ஆயிரத்து 500 ரூபா திருடப்பட்டுள்ளது.

இதனைத் திருடியவர்களில் ஒருவர் தப்பியோட மற்றையவர் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி வைத்திய சாலைக்கு நேற்றுமுன் தினம் நோயாளரை ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி ஓட்டோவை தரிப்பிடத்தில் நிறுத்தி விட்டு, நோயாளரை வெளிநோயாளர் பிரிவுக்கு கூட்டிச் சென்றுவிட்டு திரும்பியுள்ளார்.

சாரதி வைத்தியசாலையினுள் செல்வதை அவதானித்த 2 பேர், ஓட்டோவின் டாஸ்போட்டுக்கு போலியான திறப்பிட்டுத் திறந்து அதற்குள் இருந்த 13 ஆயிரத்து 500 ரூபாவினை திருடியுள்ளனர். அவர்களின் செயலில் சந்தேகம் கொண்டவர்கள், அவர்களை அணுக முற்பட்டவேளையில், இருவரும் தப்பி ஓடியுள்ளனர்.

இருப்பினும் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு, கிளிநொச்சி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மற்றையவர் பணத்துடன் தப்பியோடியுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதுதவிர கிளிநொச்சி வைத்தியசாலையில் கடந்த ஆண்டில் மட்டும் ஆறு துவிச்சக்கர வண்டிகளும் ஒரு மோட்டார் சைக்கிளும் திருட்டு போயிருந்தன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-வ-4,101)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி சுவீகரிப்புக்கு எதிராக முல்லையில் உணவு தவிர்ப்பு

## காணி உரிமையாளர்கள் நாளை ஏற்பாடு

முல்லைத்தீவு,ஏப்.26
முல்லைத்தீவில் இடம்பெறவுள்ள காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நாளை சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் என்று இராணுவத்தால் சுவீகரிக்கப்படவுள்ள காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் வியாழக்கிழமை வரை தொடர்ச்சியாக மக்களுடைய காணிகள் சுவீகரிக்கப்பட இருக்கின்றது என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அடாவடித்தனமான முறையில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் காணிகளை மக்களிடம் இருந்து பறித்தெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும், மறுநாள் வியாழக்கிழமையும் புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம், விசுவமடு, நாயாறு பிரதேசங்களில் உள்ள மக்களுடைய காணிகளை இராணுவத்தினர் சுவீகரிக்கவுள்ளனர் என்று குறித்த காணிகளின் உரிமையாளர்களுக்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

எமது காணிகளை மீட்பதற்கு தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடத்தியும் பயனில்லை. இதற்கு நிரந்தர முடிவை எட்டும் வகையில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்- என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக இறுதியான முடிவு எடுப்பதற்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் ஒன்று கூடிய மக்கள், அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. எமது உரிமைகளை கோரி அகிம்சை வழியில் போராடுவதற்கு முடிவெடுத்துள்ளோம்- என்று தெரிவித்தனர்.



உணவு தவிர்ப்புப் போராட்டமானது நாளை காலை 9 மணி முதல் முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்னால் இடம்பெற உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட அனைவரையும் தமக்கு ஆதரவு தந்து அடாவடித் தனமாக சுவீகரிக்கப்படவுள்ள தமது காணிகளை மீட்டுத் தர வேண்டும்- என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களுடைய தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனை தொடர்பு கொண்டு கேட்ட போது; இது இராணுவத்தின் ஒரு அநியாயமான செயல். இதற்கு உடந்தையாக அரசு செயற்படுகிறது. இன நல்லிணக்கம் பற்றி பேசும் அரசின் செயலை கேலிக் கூத்தாக்கும் செயலாகவே இந்தக் காணி சுவீகரிப்புப் பார்க்கப்படும். அரசு, இராணுவ அதிகாரிகளின் செயல்களுக்கு செவிசாய்க்காது, மக்களின் மன எண்ணங்களுக்கு ஆதரவு கொடுக்க அரசு முன் வரவேண்டும். மக்களுடைய போராட்டத்துக்கு எனது முழு ஆதரவை வழங்குவேன்- என்றார். (ற-ஐ-21)

### பனையிலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் சாவு

முல்லைத்தீவு. ஏப். 26
இராணுவத்தால் நடத்தப்பட்ட புதுவருட நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகச் சென்று, வீடு திரும்பும் போது பனைமரத்தில் ஏறிய இளைஞர் ஒருவர், தவறுதலாக கீழே விழுந்து சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு முல்லைத்தீவு நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு -முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் வராகன் (வயது - 20) என்ற இளைஞனே இவ்வாறு சாவடைந்தவராவார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் புதுவருட நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளனர். இந்த நிகழ்வுக்காக முள்ளியவளையில்இருந்து 4 பேர் கொண்ட குழுவினர் சென்று புதுவருட நிகழ்வை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர்.

பனையிலிருந்து கள்ளு இறக்குவதற்காக ஏறிய போதே, அந்த இளைஞர் மரத்தில் இருந்து தவறுதலாக கிழே விழுந்து சாவடைந்துள்ளார் என்று முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-வ-4,21,102)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோ.ந.சங்கத்தை உருவாக்கியவர் நவம்

## முன்னாள் வைத்திய அத்தியட்சகர் உமாசங்கர் பெருமிதம்

வலி.வடக்கு,ஏப்.26
தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தை ஓர் குட்டி அரசாக உருவாக்கிய பெருமை மறைந்த ஊடகவியலாளர் ந.நவரட்ண ராஜாவையே சாரும். - இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.உமா சங்கர்.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் ஸ்தாபகச் செய லாளராக இருந்து அமரத்துவ மடைந்த ஊடகவியலாளர் ந.நவ ரட்ண ராஜாவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக் கேட்போர் கூடத்தில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் " ந.நவரட்ணராஜாவும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையும் - ஓர் நினைவுப் பகிர்வு" என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றும் போதே வைத்திய கலாநிதி மு.உமா சங்கர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது நினைவுப் பேருரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் வாழ்ந்துவிட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் - திக்குத் தெரியாத காட்டில் - தன்னந்தனியாக வைத்திய அத்தியட்சகராகப் பதவியேற்று வந்த எனக்கு கிடைத்த நல்ல மனிதராக - நல்ல வழிகாட்டியாக - நவரட்ண ராஜா விளங்கினார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவை மீள ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமாறு நவரட்ணராஜா கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக நான் அப்போதைய பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் ஆலோசித்ததன் பயனாக அவரால் உருவாக்கப்பட்டதே நோயாளர் நலன் புரி சங்கம்.

அந்தக் காலப்பகுதியில் வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கம் என்ற தனி அமைப்பின் பெயரில் அபிவிருத்திப் பணிகள் எவையும் இடம்பெறக் கூடாது என்ற பெரும் அழுத்தம் அப்போதைய ஆட்சியாளர்களால் இருந்தது.

அதாவது, வெளிநாடுகளிலிருந்தோ அன்றி தனியார் நிறுவனங்களிலிருந்தோ எந்தவிதமான நிதியும் வைத்திய சாலைக்குக் கிடைக்கக்கூடாது என்று அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இதற்கு மாற்றீடாக நோயாளர் நலனில் அக்கறை செலுத்தி, நோயாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்ற பெரு நோக்கோடு அப்போதைய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக யாப்பு உருவாக்கப் பெற்று, பிரதேச செயலக சமூகசேவைத் திணைக்களத்தில் பதியப்பெற்று சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக நோயாளர் நலன்புரி சங்கம் உருவாக்கம் பெற்றது.

இந்த சங்க உருவாக்கத்துக்கு பக்கபலமாகத் திகழ்ந்தவர் ஊடகவியலாளர் நவம். நோயாளர் நலன்புரி சங்கம் உருவாக்கப்படும் போது அவரே அதன் ஸ்தாபகச் செயலாளராக பொதுச்சபை உறுப்பினர்களால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்றைக்கு எமது வைத்திய சாலையைப் பொறுத்தவரை நோயாளர் நலன்புரி சங்கம் நாடாளுமன்றம், மாகாணசபை, பிரதேச சபை போன்று ஒரு குட்டி அரசாக வைத்தியசாலையில் திகழ்கின்றது. வைத்தியசாலையில் ஏதாவது ஒரு பொருள் பழுதடைந்தால் திணைக்களத்திடம் பணம் பெறுவதற்கு முன்னர் உடனடியாக அந்த இடத்தை ஈடுசெய்வது நோயாளர் நலன்புரி சங்கமே. இன்றைக்கு ஒரு சில பணியாளர்களைக் கூட எமது சங்கம் கடமைக்கு அமர்த்தி அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்குகின்ற ஒரு பெரும் அமைப்பாக - குட்டி அரசாக - வளர்ச்சி பெற்றுள்ளது.

எமது சங்கம், நோயாளர்களுக்கும் வைத்தியசாலைக்கும் பல்வேறுபட்ட சேவைத்திட்டங்களை வழங்குவதற்காக அது வருமான மூலங்களை உருவாக்கியுள்ளது. அந்த வருமானத்தினூடாக வைத்தியசாலையை அபிவிருத்தி செய்து வருகின்றது. இதற்கு வித்திட்ட பெருமை சமூகசேவையாளர் ஊடகவியலாளர் நவம் ஐயாவையே சாரும் என்று பெருமையாகக் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் க.இளங்கோ, தாதியர், தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரன், நோயாளர் நலன்புரிச் சங்க உபசெயலாளர் சோ.செல்வரத்தினம், வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். அவரின் ஞாபகார்த்தமாக தென்னம்பிள்ளையும் வைத்தியசாலை வளாகத்தில் நடப்பட்டது. (ற-ஐ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி - வேலணை கடற்பாதையை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

தீவகத்தையும், வலிகாமத்தையும் இணைக்கும் அராலி – வேலணை ஊடான கடற்பாதை விரைவில் மீள்புனரமைப்புச் செய்யப்படும். அதற்கான கருத்திட்டத்தை மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளேன். அதனைவிட ஏனைய இரு பிரதான வீதிகளின் மீள் புனரமைப்புக்கான திட்டங்களையும் மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ளேன்.- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

வலி.மேற்கு, வலி.தென்மேற்கு பிரதேசங்களின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் நிதி ஒதுக்கீடு குறித்த முன்உபாயக் கூட்டம் வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது.

அதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

> மத்திய அரசின் அமைச்சர் ஒருவரிடம் மேற்படி சந்தையின் தேவை குறித்து ஏற்கனவே பேசியுள்ளேன். அதற்கான ஆவணங்களையும், வரைபடத்தையும் முன் வரைவுப் பத்திரத்தையும் பெற்றுள்ளேன். விரைவில் நல்லதொரு பதிலை சங்கானை வாழ் மக்களுக்கு வழங்கவுள்ளேன்.

பிரதேசங்கள் முழுமையான அபிவிருத்தி இலக்கை அடைய வேண்டுமாயின் அந்தப் பிரதேச நிர்வாக அலகைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேச சபையும், பிரதேச செயலகங்களும் ஒருங்கிணைந்த வகையில் பங்காற்ற வேண்டும். மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி உட்கட்டுமான சேவைகளை, பொதுப் பயன்பாட்டு சேவைகளை முன்னெடுக்கவேண்டும் – என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அதன் போது சுட்டிக்காட்டினார்.

அங்குஅவர்மேலும் குறிப்பிட்டதாவது- பிரதேச சபையும், பிரதேச செயலகங்களும் ஒருங்கிணைந்த வகையில் செயற்பட்டால் உண்மையான அபிவிருத்தியை அடைய முடியும்.

நீண்ட காலமாகச் சங்கானை நகரப் பகுதியில் அமைந்துள்ள மரக்கறிச் சந்தையும், கடைத் தொகுதியும்பழையகட்டடத்திலேயே இயங்கி வருகின்றன.

மத்திய அரசின் அமைச்சர் ஒருவரிடம்மேற்படிசந்தையின்தேவை குறித்துஏற்கனவேபேசியுள்ளேன். அதற்கான ஆவணங்களையும், வரைபடத்தையும் முன் வரைவுப் பத்திரத்தையும் பெற்றுள்ளேன். விரைவில்நல்லதொருபதிலை சங்கானை வாழ் மக்களுக்கு வழங்கவுள்ளேன்.-என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டப் பயனாளிகள் தமது தேவை குறித்த விளக்கத்தையும், கடந்த காலங்களில் தாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் உதவிகள் குறித்தும் விளக்கமளித்தனர்.

பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் ச.செல்வரத்தினம், அராலி – வேலணை கடற்பாதை திட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றி தெரிவித்தார். (ற-ஜ-50)

---

## ஓட்டோச் சாரதி மீது தாக்குதல்

கிளிநொச்சி,ஏப்.26

கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளியை இறக்கிவிட்டு திரும்பிய ஓட்டோச் சாரதி ஒருவர், பிறிதொரு ஓட்டோச் சாரதியால் தாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின் போது கிளிநொச்சியைச்சேர்ந்த ஓட்டோசாரதிபலத்தகாயங்களுக்கு உள்ளாகினார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த சாரதியின் ஒட்டோவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஓட்டோவை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படியான சம்பவங்களால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும், கிளிநொச்சி மருத்துவமனையில் பிரசவத்துக்காகச் சென்ற பெண்ணையும், குழந்தையையும் ஏற்றிச் செல்வதற்காகச் தமது சொந்த ஓட்டோவில் சென்ற உறவினரை அந்த ஓட்டோவில் ஏற்ற விடாது வேறு ஓட்டோ சாரதிகள் தகராற்றில் ஈடுபட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-21,426)

---

## ஆரியம்பிட்டி மயானப் புனரமைப்பில் பிரதேச சபை பங்களிப்பு வழங்கும்

### மானிப்பாய் பிரதேச சபையின் புதிய செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

மக்கள் பங்கேற்புடன் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் மீள் புனரமைப்புப் பணி இடம் பெறும் போது வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை பூரண பங்களிப்பை வழங்கும்.- இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபையின் புதிய செயலாளர் தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்துக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான அபிவிருத்திக் கூட்டம் உப அலுவலக பொறுப்பதிகாரி நா.ஆதித்தன் தலைமையில் நடைபெற்றது

இதில் கலந்து கொண்ட போதே பிரதேச சபைச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் நீண்ட காலம் மீள்புனரமைப்புப் பணி இடம் பெறாமல் உள்ளது.

இந்த மயான அபிவிருத்திக்கு நவாலியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனசமூக நிலையங்கள் முன்வந்து மக்கள் பங்களிப்பை வழங்க வேண்டும். அந்தப் பங்களிப்புக்கு இணையாக வலி. தென்மேற்கு பிரதேச சபையும் பூரணமான ஒத்துழைப்பை வழங்கும். அதனைத் தொடர்ந்து நிலஅளவை செய்தல், சுற்றுமதில் அமைத்தல், மயானஅபிவிருத்திச்சபை அமைத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம்.


அத்துடன் நவீன சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஏற்பாடும் உண்டு. பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் காணிகள் வழங்கும் பட்சத்தில் இந்தத் தேவைப்பாடு பூரணப்படுத்தப்படும் –என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-50)

---

## பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இந்த வருடம் மீள ஆரம்பிக்கப்படும்

### 525 மில்லியன் ரூபா முதலீட்டுடன்

கிளிநொச்சி,ஏப்.26



525 மில்லியன் ரூபா முதலீட்டில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இந்த வருடம் மீள ஆரம்பிக்கப்படும் என்று கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பரந்தனில் அமைந் துள்ள இரசாயனத் தொழிற்சாலைக்குச் சென்ற அமைச்சர், ரிஷாத் பதியுதீன் இராசாயனத் தொழிற்சாலைஅமையஉள்ளஇடங்களை பார்வையிட்ட பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்குஅவர்மேலும்தெரிவித்துள்ளதாவது- புதிய அரசின் தேசிய நல்லாட்சியிலே சமூக முன்னேற்றத்தோடு கூடிய அபிவிருத்தி என்ற பெயரிலே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. தனியார் முதலீட்டாளர்களையும் இணைத்துக் கொண்டு இந்த அரச வளங்களையும், ஏற்கனவே இருக்கின்ற வளங்களையும் பயன்படுத்தி இரசாயனத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறோம்.

மீளவும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்ற இராசயனங்களை நிறுத்தி பொருளாதார மேம்பாட்டை எட்ட முடியும். அதேவேளை பல இளைஞர் யுவதிகளுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு பிரதேசத்தின் பொருளாதார மேம்பாடும் அதிகரிக்கும்.

இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் தற்போது இராணுவம் இருப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோரிடம் கலந்துரையாடப்படும்.

இந்த இடங்களில் 2 ஆயிரம் மரக் கன்றுகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 திகதிக்கு முன்னர் நட்டு சுற்றாடலையும் பாதுகாப்பதற்கான முயற்சியையும் மேற்கொண்டுள்ளோம்.- என்றார்.(ற-ஜ-21)

---

## மருத்துவ முகாம்

வவுனியா, ஏப்.26

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு நெடுங்கேணி வடக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் 10 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள முடியும். இந்த மருத்துவ முகாமில் உயர் குருதியமுக்கம், நீரிழிவுக் குருதிப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை போன்றனவும் இடம் பெறவுள்ளன.

நீரிழிவு நோய் பரிசோதனைக்காக வருபவர்கள் 10 மணித்தியாலத்துக்கு முன்னர் உணவு அல்லது பானம் என்பவற்றைத் தவிர்த்து விட்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரம் தேவைப்படின் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையில்அல்லதுநெடுங்கேணிபொதுச் சுகாதார பணிமனையிலோ தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-422)

---

## இயக்குநர் சபை தெரிவு

வட்டுக்கோட்டை,ஏப்.26

வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. இதன் போது இயக்குநர் சபைதெரிவுசெய்யப்பட்டது. தலைவராக சி.தவராசா, உபதலைவராக நா.சண்முகசுந்தரம், செயலாளர் மா.சற்குணசிங்கம், இயக்குநர்சபை உறுப்பினர்களாக செ.பொன்குணரத்தினம், த.விஜிதரன், நா.டியோனி, ம.முரளிதாஸ் ஆகியோர் உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ற-ஜ)

---

## யாழ்ப்பாணத்தில் சில வீதிகள் விரைவில் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.26

நிதி அமைச்சர்மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருடன் கலந்துரையாடியதற்கமைய முன்னுரிமை அடிப்படையில் யாழில் குறிப்பிடப்பட்ட வீதிகள் விரைவில் மீள்புனரமைப்புச் செய்யப்படும்என நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வீதிகளை மீள் புனரமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> வீதிகளை மீள் புனரமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மருதங்கேணி வீதி முதற்கட்டமாகவும், இதனைத் தொடர்ந்து வழுக்கையாறு புங்குடு தீவு குறிகாட்டுவான் வீதி, யாழ்ப் பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி, புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி என்பனவும் தொடர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்பு செய்யப் படவுள்ளன.

இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண திட்டப்பணிப் [illegible] நான்கு பிரதான வீதிகள் மீள்புனரமைப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி புலோலி வீதி, புத்தூர் கந்த ரோடை வீதி, காரைநகர் சுற்று வட்டவீதி, யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி புனரமைக்கும் போது தென்மராட்சி, வடமராட்சி மக்களின்பொதுப் போக்கு வரத்தைக் கருதி நெல்லியடி கொடிகாமம் கச்சாய் வீதியாக மூன்று கிலோ மீற்றர் தூரத்தை சேர்த்துப் புனரமைத்துத் தருமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் அரச அதிபரைக் கோரியுள்ளார். (ற-ஜ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் சம்பந்தனை பிடியுங்கள்

## பொலிஸ்மா அதிபருக்கு கம்மன்பில சவால்

கொழும்பு, ஏப்.26
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைந்ததுடன், இராணுவ அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்திருக்கின்றார். இதற்காக முடிந்தால், இரா.சம்பந்தனைக் கைது செய்து காட்டுங்கள்- இவ்வாறு பொலிஸ்மா அதிபருக்கு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் 34 ஆவது பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தரவை தனக்கு ஏற்றவாறு நல்லாட்சி அரசு நியமித்துள்ளது. அவர் தனது பதவியேற்பின்போது பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் வீர வசனங்களையும் கதைத்திருந்தார். இதனால் அவருக்கு நான் சவால்ஒன்றை இந்தச்சந்தர்ப்பத்தில் விடுக்கின்றேன்.

கடந்த 16 ஆம் திகதி, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பரவிப்பாஞ்சானில் கஜபாகு இராணுவப் படை யணிக்குச் சொந்தமான முகாமுக்குள் அத்து மீறி பிரவேசித்திருந்தார். அத்துடன் அவர் இராணுவ அதிகாரிகளின் கடமைக்கும் இடையூறு விளைவித்திருந்தார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினால் சிறு தவறுகள் ஏற்பட்டாலும், சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு ஒரு சவால் விடுக்கின்றேன். முடிந்தால் இரா.சம்பந்தனைக் கைது செய்யுங்கள் - என்றார். (ந-ஜ-5)

# மே தினக் கூட்டத்துக்கு ஆள் ஏற்றும் பஸ்களுக்கு கட்டணம் செலுத்துக

## ரணில் விக்கிரமசிங்க உத்தரவு

கொழும்பு, ஏப்.26
ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு ஆள்களை ஏற்றிவரும் இலங்கைபோக்குவரத்துச் சபை பஸ்களுக்குரிய முழுக் கட்டணங்களும் கட்டாயம் செலுத்தப்பட வேண்டும் என்று அந்தக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். இந்த விடயத்தில் எந்த விதமான சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. ஏனைய கட்சிகளுக்கு முன்னுதாரணமாக இந்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இதேவேளை - கட்சியின் மேதின ஊர்வலம் மற்றும் மேதினக் கூட்டம் போன்றவற்றை இணையதளங்களில் வெளியிட வேண்டுமானால் அதற்குரிய கட்டணங்களையும் கட்டாயம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ந-ஜ-5)

# எதிரணியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பது ஒழுக்க விதி மீறலல்ல

## டலஸ் அழகப்பெரும கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.26
கிருலப்பனையில் நடைபெறவுள்ள கூட்டு எதிர்க் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்க விதி மீறலாக கருதப்பட முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கட்சித் தலைவருக்கு தெரிந்து கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் காலியில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்காது, கிருலப்பனையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயமாக கனவில் கூட நினைக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. அரசுக்கு ஆதரவான குழுவொன்றும் எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் குழுவொன்றும் காணப்படுகின்றன. கூட்டு எதிர்க் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பது பிழை என்றால், நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் அமர்வதும் பிழையானதேயாகும்.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் மத்திய் செயற் குழு உள்ளிட்ட குழுக்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன், எதிர்க் கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்கின்றமை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி செய்யும் தரப்பு காலியில் நடத்தும் கூட்டத்தில் எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பினரால் பங்கேற்க முடியாது - என்று தெரிவித்துள்ளார். (ந-ஜ-5)

# பிரதமர் அடுத்த மாதம் இந்தியா பயணிப்பார்

புதுடில்லியின் அழைப்பின் பேரில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத இறுதியில், இந்தியாவுக் குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்துக்குப் பின்னர், ஏற்பட்டுள்ள சூழ் நிலைகளை அடுத்தே, அவரைப் புதுடில்லி வருமாறு இந்திய அரசு அழைத்துள்ளது என்று கூறப்படுகிறது.

இரண்டு நாள்கள் புதுடில்லியில் தங்கியிருக்கும், ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்கள், உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்த விருக்கிறார்.

பிரதமருடன், அபிவிருத்தி மூலோபாய மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

துறைமுக நகரத் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டமை, ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய சீனப் பயணத்தின்போது எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் என்பன குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது.

இதுகுறித்த விவரங்களை அறிந்து கொள்வதில் இந்தியா ஆர்வத்துடன் இருக்கின்றது என்றும் - இந்த விடயங்களை நிறைவேற்றுவது தொடர்பான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எண்ணத்துடன் இருக்கின்றது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை அடிப்படையாக கொண்டே, பிரதமருக்கு புதுடில்லி அழைப்பு விடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ந-ஜ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை முடிவுக்கு கொண்டு வந்தும் ஈழக் கோரிக்கை தோற்கவில்லை

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.26

முப்பதாண்டு கால கொடிய போர் இராணுவத்தினரின் துப்பாக்கியால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும், ஈழக் கொள்கையைத் தோற்கடிக்க முடியாமல் போயுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொட சிறிலங்கா சுதந்திர கட்சியின், தொகுதி மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடல் கடந்து வாழும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையைத் தோற்கடிப்பதற்கு நாம் மறந்து போயுள்ளோம். எவ்வாறாயினும், போரின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

அவற்றை நிறைவேற்றாது போனால் நாட்டில் மீண்டுமொரு முறை போர் ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது போகும்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் குறித்து 2014 ஆம் ஆண்டே பேசப்பட்டது. இதன் போது அரசியல், பொருளாதாரம், கட்சி ஆகியவற்றின் மறுசீரமைப்பை வலியுறுத்தி எழுத்து மூலமான ஆவணம் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளித்தேன்.

> போரின் பின்னர் மேற் கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக் கைகள் காணப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றாது போனால் நாட் டில் மீண்டு மொரு முறை போர் ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது போகும்.

அத்துடன், அனைத்து தலைவர்களிடமும் குறித்த ஆவணத்தை கையளித்து, தேர்



தலை நடத்த வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்திருந்தேன். எனினும், எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த அரசில் இருந்து வெளியேறிய போது, வேறு கட்சியின் உறுப்பினராக ஒரு போதும் வெளியேறவில்லை. சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலாளராக, ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட 49 கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டேன். நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படாது, அனைத்து சமூகத்தின் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதாக அப்போது பிரதானமாக கூறியிருந்தேன்.- என்றார். (ற-ஜ-5)

# மின்சார கொள்வனவு கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,ஏப்.26

அவசர மின்சார பெறுகைக்காக தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து 55 மெகாவோட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கையைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

தனியார் துறையிடமிருந்து மின்சாரம் பெறுவது மின்சார சபையின் யாப்பை மீறும் செயல் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கும், நுகர்வோர் அதிகார சபையிடம் முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே குறித்த கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5)

# காங்கேசன்துறையில் புதிய எண்ணெய்க் களஞ்சியம்

கொழும்பு, ஏப்.26

காங்கேசன்துறையில் புதிய எண்ணெய்க் களஞ்சியம் அமைக்கப்பட உள்ளது என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறையில் புதிய எண்ணெய்க்களஞ்சியம் அமைப்பதனால் வருடாந்தம் 300 மில்லியன் ரூபாவை அரசால் சேமிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரயில் ஊடாக கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குளி பொருள்களை எடுத்துச் செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# தாஜுதீன் கொலை வழக்கில் 6 அதிகாரிகளிடம் விசாரணை

## விரைவில் நடத்தப்படவுள்ளது

கொழும்பு, ஏப்.26

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் உயர் பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேரிடம் அடுத்துவரும் ஓரிரு தினங்களில் விசாரணை மேற்கொள்ளவுள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றவியல் திணைக்களத்தால் இதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தாஜுதீனின் கொலை தொடர்பான சாட்சிகளை மறைத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தாஜுதீனின் உயிரிழப்பை ஒருவிபத்தாகக் கருதி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தனக்குப் பொலிஸ் மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது என்று விசாரணையின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பீ அறிக்கையொன்றின் மூலம் இந்தத் தகவல் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5)

# கோத்தா கைது கோரிக்கைக்கு இலங்கை அரசு ஆதரவளிக்காது

## அமைச்சர் கபீர் காசிம் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.26

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்யுமாறு அமெரிக்காவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, இலங்கை அரசு ஆதரவளிக்காது என்று அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

இலங்கை குடிமகன் ஒருவர் மீது உள்நாட்டு விவகாரம் தொடர்பாக எத்தகைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தாலும், அந்த விவகாரம், உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் தான் கையாளப்பட வேண்டும். உள்நாட்டு விவகாரங்களை சர்வதேச சக்திகள் கையாள்வதற்கு அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்ற மீறல்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் கோத்தபாய ராஜபக்ச தற்போது, அமெரிக்கா சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் இரண்டு தமிழ் அமைப்புகள், வேண்டுகோள் விடுத்திருந்தன. (ற-ஜ-5)

# விரைவில் தீர்வு வழங்காவிடில் நாட்டில் பெரும் புரட்சி ஏற்படும்

## விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.26

எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், தமிழீழ விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தித் தனது கருத்தை வெளியிட்டிருந்தால் அது, இந்த அரசின் மீது ஏற்பட்ட விரக்தியாகத்தான் இருக்கும். விரைவில் தீர்வை வழங்க வேண்டும். இல்லாவிடில் நாட்டில் மீண்டும் பெரிய புரட்சி ஏற்படக் கூடும். - இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்தவர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இதனாலேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. தற்போது அந்தப் போராட்டம் தோல்வியடைந்து அவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த அரசு தமிழ் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை வழங்கத் தவறியது. அதனாலேயே மகிந்த அரசின் ஆட்சியை தமிழ் மக்கள் முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

ஆனால் மைத்திரிபால சிறிசேனா மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள்.

மைத்திரிபால சிறிசேனா தீர்வை வழங்க முற்படும் போது அந்தக் கட்சியில் உள்ள இனவாத செயற்பாட்டாளர்கள் அதனை செய்ய விடாது தடுத்து வருகின்றனர். இவர்கள் சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு மறைமுகமாக ஒன்றிணைந்த எதிர்கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகின்றனர். ஜனாதிபதி இவர் களுக்கு எதிராக உறுதியான தீர்மானம் எடுக்கவில்லை.

அதனாலேயே தமிழ் தலைவர்கள், தீர்வு விடயத்தில் நம்பிக்கை இழந்து வருகின்றனர். இதனால் தான் இரா.சம்பந்தன் தமிழீழ விடுதலைப் புலிகளை நியாயப் படுத்தி பேசியிருக்கக் கூடும்.

இனி நாட்டில் தனி நாடு என்பது சாத்தியமில்லை. அதனை இந்தியாவும் விரும்பாது. ஆனால் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். சுயாட்சி - சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வார்த்தைகளால் மகிழ்விக்கும் மாயா ஜாலம் வேண்டாமே...!

இலங்கையில் இருந்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மீன் வகைகளை ஏற்றுமதி செய்ய முடியும் என்ற அரசின் தகவல், பழங்கதையாகி விடுமோ என்ற அச்சம் மேலெழுந்து உள்ளது.

அதற்கான காரணத்தை, ஐரோப்பிய ஒன்றியம் எமது நாட்டு அரசுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

உள்ளார்ந்து நோக்கின், ஐ.நாவின் அறிவிப்பை இந்த நாட்டு ரணில் அரசு, அவசரப்பட்டு வெளியிட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதி, எதிர்வரும் ஜூலை மாதம் மீள ஆரம்பிக்கப்படும்என எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீன்பிடித் தடையை நீக்குவதற்கு எவ்வாறு செயற்பட்டோமோ, அதேபோன்று, வரிச்சலுகையைப் பெறுவதற்குத் திட்டம் இட்டுள்ளதாக, பிரதமர் கடந்த வாரத்தில் கூறியமையும் இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஜனநாயக நாடு ஒன்றிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் தராதரங்களை, இலங்கை பின்பற்றுகிறது என்பதையும் பிரதமர், நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்படக் கூடியது.

இத்தனைக்கும், ஐரோப்பிய நாடுகள், ஜனநாயக நாடுகளிடம் இருந்து எதிர்பார்க்கும் தராதரங்களை இலங்கை பின்பற்றுவதாகவும்--

அதனால், மீன் ஏற்றுமதிக்கான தடை நீங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எனினும் ஐரோப்பிய ஒன்றிய அமைச்சரவையின் அனுமதி கிடைத்தால் மட்டுமே, மீன் ஏற்றுமதிக்கான தடை நீங்கும் என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறியப்படுகிறது.

ஜனநாயகத்துக்கான தராதரங்கள், இலங்கையில் முழு அளவில் பின்பற்றப்படுவதாக,பிரதமர் தெரிவித்துள்ள போதிலும்;

மறுபுறத்தில், ஜனநாயகத்துக்கு உரிய தராதரங்கள் பின்பற்றப்படுவதாக, அனைத்துலக நாடுகளுக்குக் காட்டுவதற்குப் பிரதமர் வெளியிட்ட அறிக்கையின் மை காயும் முன்னர்--

இலங்கை அரசின் அவசரத் தனத்துக்கு குட்டு ஒன்றை வைத்தால் போன்று, தனது விசனத்தை ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படுத்தி உள்ளது என்றும் கொள்ளலாம் அல்லவா?

ஒட்டுமொத்தத்தில், நாட்டு மக்களை, அரசியல்தலைவர்கள் வெறும் வார்த்தைகளால் மகிழ்வுறவும், ஏன் ஏமாற்றவும் செய்யலாம்.

ஆனால், அனைத்துலக நாடுகளை வெறும் சொற்களாலோ, அறிக்கை விடுவதாலோ, திருப்தி செய்ய இயலாது; ஏமாற்றவும் முடியாது.

தமிழ் மக்களை ஏமாற்றுவது போன்றது அல்லவே, அது...?

# அதிகாரப் பகிர்வும் தமிழ் - முஸ்லிம்களின் நிலைப்பாடும்

எம்.ஐ.முபாறக்



புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான அரசின் முயற்சி தொடங்கப்பட்டவுடனேயே சிறுபான்மை இன மக்களும் அதற்குத் தயாராகி விட்டனர். அந்த அறிவிப்பு வெளியான நாளில் இருந்து தங்களின் செயற்பாடுகளை அவர்கள் தீவிரப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

புதிய அரசமைப்பில் இருக்க வேண்டிய ஏனைய விடயங்களை விடவும் அதில் உள்ளடங்கப்போகும் அரசியற் தீர்வின் மீதுதான் சிறுபான்மை இன மக்களின் முழுக் கவனமும் உள்ளது. எப்படியாவது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரப் பகிர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் ஒரே நோக்காக இருக்கின்றது.

இந்த நாட்டின் மூவின மக்களும் கணிசமான அளவு தங்களின் யோசனைகளை புதிய அரசமைப்புக்கு சமர்ப்பித்துள்ளனர். வடக்கு மாகாண சபை ஒரு படி மேலே சென்று தமக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வு இவ்வாறுதான் அமைய வேண்டும் என்ற ஒரு முன்மொழிவைக் கடந்த வெள்ளிக்கிழமை சபையில் நிறைவேற்றியுள்ளது.

தமிழர்களதும் முஸ்லிம்களதும் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும்சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இன்னும் யோசனைகளை முன்வைக்கவில்லை. இருந்தாலும், அது தொடர்பில் அந்த இரு கட்சிகளும் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தத் தொடங்கியுள்ளன.

அந்தவகையில், அதிகாரப் பகிர்வு தொடர்பில் - ஒட்டுமொத்த அரசமைப்பு தொடர்பில் சிறுபான்மை இன மக்களின் நிலைப்பாடு என்னவென்று அறிவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் ஒரு செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது. அந்தச் செயலமர்வில் முஸ்லிம் அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு அரசமைப்பு தொடர்பான அவர்களது யோசனைகளை முன்வைத்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பிலும் முஸ்லிம் மக்களுக்கான தீர்வு விடயத்தில தமிழர்களின் நிலைப்பாடு என்னவென்பதையும் விளக்கினார்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் - முஸ்லிம் மக்களின் நிலைப்பாடுகளை ஒரே மேடையில் பிரதிபலிக்கச் செய்த - தமிழருக்கான தீர்வு தொடர்பில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னவென்பதையும் முஸ்லிம்களுக்கான தீர்வு தொடர்பில் தமிழர்களின் நிலைப்பாடு என்னவென்பதையும் தெட்டத் தெளிவாக எடுத்துவைத்த ஒரு முக்கியமான நிகழ்வாக அந்தச் செயலமர்வு அமைந்திருந்ததால் அது சம்பந்தமாக நாம் ஆராய வேண்டியது கட்டாயமாகின்றது. அங்கு வைக்கப்பட்ட கருத்துக்களைஒட்டுமொத்தமாகஆராய்ந்து பார்த்தால் 99 வீதமான கருத்துக்களுடன் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நிற்பதைக் காணலாம். வடக்கு - கிழக்கு மீளிணைப்பு என்ற சர்ச்சைக்குரிய விடயத்தில்தான் இரண்டு சமூகங்களும் இரு வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அதற்காக முன்வைக்கப்பட்ட காரணங்கள் தொடர்பிலும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

### முஸ்லிம்களுக்கான தீர்வு

அரசியல் தீர்வு என்பது போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கே பிரதானமாகத் தேவை என்ற போதிலும், நாட்டில் ஏனைய இடங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகளையும் புறந்தள்ளிவிட முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இது அனைவரினதும் சரியான நிலைப்பாடும் கூட.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்தவகையில், வடக்கு – கிழக்கில் இடம்பெற்ற போரால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களும் தீர்வு முயற்சிக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை மறுக்க முடியாது.

அதற்காக வடக்கு – கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம்களின் மீது மாத்திரம் கவனம் செலுத்தி வடக்கு – கிழக்குக்கு வெளியில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. போரால் பாதிக்கப்படாவிட்டாலும் அவர்கள் நீண்ட காலமாக வெவ்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆகவே, அவர்களைப் புறக்கணித்து விட்டு வடக்கு – கிழக்கு முஸ்லிம்களை மாத்திரம் தீர்வுத் திட்டத்துக்குள் உள்வாங்கவே முடியாது.

ஒட்டுமொத்த முஸ்லிம்களும் இந்த நிலைப்பாட்டில் இருக்கின்றமை அந்த நிகழ்வில் பிரதிபலிக்கப்பட்டது. வடக்கு – கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் தீர்வு வடக்கு – கிழக்கு வெளியில் உள்ள முஸ்லிம் – சிங்கள மக்களின் உறவில் பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடாது என்ற கருத்தும் அங்கு தெரிவிக்கப்பட்டது..

ஆகவே, முஸ்லிம்களின் சார்பில் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு யோசனையானது நாடு பூராகவும் வாழும் முஸ்லிம்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் முன்வைக்கப்பட்டது.

அதுபோக, நாடு பூராகவும் உள்ள முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி, தொழிலின்மை, மார்க்கத்துக்கு எதிரான சவால்கள், இருப்பு மற்றும் அரசியல் உரிமைகள் போன்ற பிரச்சினைகள் அங்கு பட்டியலிடப்பட்டு அந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வைக் கோரும் வகையில் மு.காவின் தீர்வு யோசனை அமையவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

### தமிழர்களின் நிலைப்பாடு

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அங்கு தெளிவாக எடுத்துவைத்தார். ஒற்றையாட்சி, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை மற்றும் நாடாளுமன்றத்துக்கு உச்ச அதிகாரம் போன்றவை நீக்கப்பட்ட புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதனூடாக தமிழருக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தமிழர்களின் நிலைப்பாட்டை அவர் மிகவும் தெளிவாக விளக்கிக் கூறினார். அரசமைப்பே உச்ச அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு பேரினவாதிகளின் ஆட்சிக்கு வித்திடுவதற்காக உருவாக்கப்பட்டதே தவிர பெரும்பான்மை இன மக்கள் ஆள்வதற்காக அல்ல என்றும் அவர் கூறினார்.

சுமந்திரன் முன்வைத்த மேற்படி நிலைபாட்டையே மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் முன்வைத்தனர். இதன் மூலம் அரசியல் தீர்வு தொடர்பில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றனர் என்ற நற்செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியல் தீர்வைப் பெறுவதற்கான பயணத்தில் இரண்டு சமூகங்களும் ஒன்றிணைந்து நிற்கவேண்டியதன் தேவை உணரப்பட்டுள்ளது.

### சிக்கலான வடக்கு - கிழக்கு மீளிணைப்பு

அதிகாரப் பகிர்வில் உள்வாங்கப்படும் அனைத்து விடயங்களிலும் தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டநிலைப்பாட்டில் உள்ளபோதிலும், வடக்கு – கிழக்கு மீளிணைப்பு தொடர்பில் அவர்கள் இரு வெவ்வேறு நிலைப்பாட்டில் உள்ளமையை நீண்ட காலமாக நாம் அவதானித்து வருகின்றோம்.

வடக்கு – கிழக்கு மீளிணைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழர்களும் இணைக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டில் முஸ்லிம்களும் உள்ளனர். அவ்வாறு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாக அலகு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது.

வடக்கு – கிழக்கு மீளிணைக்கப்பட்டால் கிழக்கில் முஸ்லிம்களின் சனத்தொகை விகிதாசாரம் குறைந்து முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்ற அச்சமே முஸ்லிம்கள் வடக்கு –கிழக்கு மீளிணைப்பை எதிர்ப்பதற்குக் காரணம்.

> சுமந்திரன் முன்வைத்த மேற்படி நிலைபாட்டையே மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஏனைய முஸ்லிம் அரசியல் வாதிகளும் பொதுமக் களும் முன்வைத்தனர். இதன் மூலம் அரசியல் தீர்வு தொடர்பில் முஸ் லிம்களும் தமிழர்களும் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக் கின்றனர் என்ற நற்செய்தி வெளிப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியல் தீர்வைப் பெறுவதற்கான பயணத்தில் இரண்டு சமூகங்களும் ஒன்றிணைந்து நிற்கவேண் டியதன் தேவை உணரப்பட்டுள்ளது.

இதேவேளை, இதை எதிர்ப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைக் குழப்பினார்கள் என்ற பழிச்சொல்லுக்கு முஸ்லிம்கள் ஆளாகிவிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் முஸ்லிம்கள் இருப்பதும் தெரிகின்றது.

இந்த விடயத்தில் இரண்டு இனங்களையும் திருப்திப்படும் வகையில், வேறொரு ஏற்பாடு பற்றியும் இரண்டு இனங்களும் யோசிக்க வேண்டும் என்றும் செயலமர்வில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை, முஸ்லிம்களின் அனுமதியுடனேயே வடக்கு – கிழக்கு மீளிணைக்கப்படும் என்றும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துத்தான் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர் என்றும் சுமந்திரன் அங்கு தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வில் உள்ளடக்கப்படும் விடயங்கள் அனைத்திலும் தமிழ் – முஸ்லிம்கள் ஒன்றிணைந்து நிற்கின்றபோதிலும், வடக்கு – கிழக்கு மீளிணைப்பு விடயத்தில்தான் அவர்கள் முரண்பட்டு நிற்கின்றனர். இது பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயம். இரண்டு இனங்களின் அரசியல் பிரதிநிகளும் ஒன்றிணைந்து இரண்டு சமூகங்களும் திருப்திப்படக் கூடிய ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டியது காலத் தின் கட்டாயமாகும்.

அதுபோக, இந்த விடயத்தில் சிங்கள புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் போன்றோரின் நிலைப்பாடும் கருத்துக்களும் அறியப்பட வேண்டியது அவசியமாகும்.

எதிர்வரும் காலங்களில் அவர்களையும் உள்ளடக்கியதான செயலமர்வுகளை நடத்துவது பற்றி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரிசீலிக்க வேண்டும்.

## நீர் விநியோகக் குழாயைச் சீர்செய்யுங்கள்

மானிப்பாய் வீதியில் யாழ்.வணிகர் கழகத்துக்கும் வைத்தீஸ்வராச் சந்திக்கும் இடையில் உள்ள பகுதியில் யாழ்.மாநகர சபையினரது குடிதண்ணீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட சேதத்தால் அதிலிருந்து நீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது.

முன்னர் நீர் விநியோகத்துக்கான குழாய் பொருத்தப்பட்டுப் பின்னர் சேதமடைந்ததாலோ அல்லது கழற்றி விடப்பட்டதனாலோ அந்தக் குறிப்பிட்டபகுதியூடாகதினமும்பலலீற்றர்கணக்கான குடிதண்ணீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் பக்கத்தில் உள்ள வடிகாலில் விழுந்து செல்வதால் தெருவில் போவோர் வருவோருக்குத் தெரிவதில்லைப்போலும்.

இந்த விடயம் தொடர்பாக அந்தப் பிரதேச சுற்றாடலில்இருக்கும்வர்த்தகநிலையத்தவர்களோ, பொதுமக்களோ யாழ்.மாநகர சபைக்கு ஏற்கனவே அறியத்தந்திருக்காமல் இருக்க முடியாது. தாம் ஏற்கனவே உரிய பகுதியினருக்கு அறிவித்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என்ற மக்களின் ஆதங்கமாக இருக்கலாம்; அல்லது அறிவித்துத்தான் என்ன என்ற சலிப்பு மனநிலையும் காரணமாகியிருக்கலாம்; அல்லது, எது எப்படிப் போனால் என்ன என்ற அலட்சியப்போக்காகவும் இருக்கலாம். ஆனால் இதனை இப்படியே விட்டு விடக்கூடாது? ஒவ்வொருவருக்கும் சமூகப் பொறுப்பு இருக்க வேண்டும் என்பது உணர்த்தப்பட வேண்டும்.

வழமைபோல் உலக நீர்த்தினமானது கடந்த மாதம் 22 ஆம் திகதி வந்துபோனது. அது இந்தமுறை யாழ்.மாவட்டத்திலும் சமூக விழிப்பூட்டலை ஏற்படுத்தும் வகையில் உயிரூட்டத்துடன், உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

எமது யாழ்.மாவட்டத்தில் குடிதண்ணீரைப் பெறுவதற்கும், அதனை மக்களுக்கு வழங்குவதற்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தினமும் அல்லாடுகின்றன.

புதிய புதிய நன்னீர் வளங்களைக் கண்டறிந்து அவற்றைப் பொதுமக்களுக்கு விநியோகிக்க ஆர்வத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளையில், இருக்கும் நன்னீர் (இப்போது பொதுமக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும்) வளங்களையும் பேணிக் கொள்வதிலும் அக்கறையாகச் செயற்படுவதும் கண்கூடு. ஏற்கனவே கழிவு ஒயில் கலப்பு என்று நன்னீர் பெறுவதற்கு மாவட்டத்தின் ஒரு பகுதியினர் திண்டாடிவரும் நிலையில், நாளாந்தம் இவ்வாறு குடிதண்ணீர் வீண்விரயமாகிக் கொண்டிருப்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

சேதமடைந்த குடிதண்ணீர் விநியோகக் குழாயைச் சீராக்கி நீர் வீணாவதைத் தடுக்க சம்பந்தப்பட்ட பகுதியினர் முன்வர வேண்டும் என்பதை உதயன் வாசகர் திருமுகம் பகுதியூடாகத் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[illegible]ணானந்தன்
சிவன்பண்ணை வீதி, யாழ்.

## கழிவு வாய்க்காலின் துர்நாற்றத்தினால் அவலப்படும் ஓட்டுமடம் வீதி மக்கள்

ஓட்டுமடம் வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் துப்புரவு செய்யப்படாத நிலையில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது.

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள உணவகங்களின் கழிவு நீர் இந்த வாய்க்காலின் ஊடாகவே காக்கைத்தீவை நோக்கிச் செல்கின்றது. ஆனால் இந்த வாய்க்காலை மாநகரசபை ஊழியர்கள் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. காற்றினால் அள்ளுண்டு வருகின்ற குப்பைகள் இந்த வாய்க்காலில் தேங்கிக் கிடப்பதன் காரணமாகவே கழிவு நீர் வழிந்தோட முடியாத அவலநிலை தோன்றியுள்ளது. இதில் நுளம்புகளின் பெருக்கமும் காணப்படுகின்றது.சிவலிங்கப்புளியடிச்சந்தியில் இருந்து ஓட்டுமடம் சந்திவரையான பகுதியில் ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த வாய்க்காலில் இருந்து எழுகின்ற துர்நாற்றம் காரணமாக இந்தப் பகுதி மக்கள் அருவருப்பு அடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

மேலும் இந்தக் கழிவு வாய்க்கால் ஆங்காங்கு உடைந்தநிலையிலும்காணப்படுவதால்கழிவுநீர் வீதியில் தேங்கி நின்று அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது.யாழ்.மாநகரசபை இதைக்கவனிக்குமா?

– பொ.ராஜினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4500 வருடங்கள் பழைமையான மம்மி பெருவில் கண்டுபிடிப்பு

லிமா, ஏப்.26
பெரு நாட்டின் வடக்குப் பகுதியில் 4 ஆயிரத்து 500 வருடங்கள் பழைமையான மம்மியை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அஸ்பெரோ எனும் புராதன மீன்பிடி நகரத்தில் இந்தக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மம்மி பெண்ணுடைய உடல் என்றும் அவர் இறக்கும்போது 40 இலிருந்து 50 வயதுக்குள் இருக்கும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.
மேலும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் முறையில் இவர் சமூகத்தில் பெரியவராக இருந்திருக்கக் கூடும் எனவும் ஆய்வாளர்கள் கூறினர்..
இந்தப் பெண்ணின் கல்லறையில் எலும்புகளால் கடையப்பட்ட 4 சிற்பங்களும், வேறு கலைப் பொருள்களும் காணப்பட்டன. அத்துடன் பாத்திரம் ஒன்றில் மரக்கறித் துண்டுகளும், தாவர விதைகளும் இருந்தன. கடல் சிப்பிகளால் ஆன ஆபரணத்தையும் அவர் அணிந்திருந்தார். இவற்றின் மூலம் புராதன மனித நாகரிகத்தையும், சமுதாயப் பரம்பலையும் அறியக் கூடியதாக வுள்ளது.
இந்த பெண்ணுக்கு வழங்கப்பட்ட மரியாதை மூலம் புராதன காலத்தில் பாலின சமத்துவம் நிலவியமைக்கு ஆதாரம் உள்ளது என தொல்பொருளியலாளர்கள் தெரிவித்தனர். (து-ரி4)





சிரியத் தலைநகர் டமஸ்கஸ்சில் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. டமஸ்கஸ்சின் சியாம்பியா பகு
பட்டுள்ளது. இந்தக் கார்க் குண்டுத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர். போர் நிறுத்த உடன்படிக்
நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய ஐ.எஸ். தலைவர் அமெ. குண்டுவீச்சில் சாவு

## இந்திய அதிகாரிகள் தகவல்

புதுடில்லி, ஏப்.26
இந்தியாவுக்குப் பொறுப்பான இந்திய ஐ.எஸ். போராளி அமெரிக்க வான் படைத் தாக்குதலில் உயிரிழந்தார் என இந்திய உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். அவரின் இறப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. வேறு சில தகவல்களும் பெறப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முகமத்-பி-அர்மர் எனும் இந்தியப் போராளி ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபு-பக்கர்-அல்-பக்தாதிக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவர். இந்தியாவில் ஐ.எஸ். பிரசாரம் மேற்கொள்ளவும், அங்கு தமது அமைப்பின் செயற்பாடுகளை நிறைவேற்றவும் முகமத் பியைப் பயன்படுத்தி வந்துள்ளார்.
கர்நாடகா, பட்கால் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட முகமத் பி, தனது குழுவில் 30 போராளிகளை இணைத்துள்ளார் என இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். போராளிகள் தெரிவித்தனர்.
இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஐ.எஸ். அமைப்பை உருவாக்குவது முகமத் பியின் திட்டம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
26 வயதான முகமத் பி, ஐ.எஸ். அமைப்புக்கான இந்தியத்



தலைவர் ஆவார். முன்னதாக அவரது சகோதரன் சுல்தான் அர்மர் அந்தப் பதவியில் இருந்தார். அவரின் இறப்பிற்குப் பின்னர் முகமத் பிக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது. சுல்தான் கடந்த வருடம் மார்ச் மாதம் கொல்லப்பட்டார்.
முகமத் பி 600 இலிருந்து 700 இந்திய இளைஞர்களின் மனதைக் கவர்ந்துள்ளார். பேஸ்புக் மூலமாக, வேறு சமூக வலைத் தளங்களினூடாக அவர்களுடன் அவர் தொடர்பில் இருந்தார். அத்துடன் இவர்கள் மூலமாக ஐ.எஸ். அமைப்புக்குத் தேவையான நிதியையும் திரட்டி வந்தார். தற்போது முகமத் பியின் இறப்பு இந்திய ஐ.எஸ். இலக்கைத் தலையில்லாமல் ஆக்கியுள்ளது என அதிகாரிகள்தெரிவித்தனர். (து-ரி4)

# கட்டுப்பாட்டு அறையை தாக்கிய போர் விமானம்

ஒஸ்லோ, ஏப்.26
நோர்வேயின் போர் விமானம் வெள்ளோட்டத்தின்போது தவறுதலாக கட்டுப்பாட்டு அறையைத் தாக்கியது என நேற்று முன்தினம் அதிகாரிகள் தெரிவித்தனர்.
நோர்வேயின் மேற்குக் கடற்கரைப் பகுதியில், எப்-16 ரக போர் விமானம் நோர்வேக்குச் சொந்தமான ரார்வா தீவில் சோதனை ஓட்டம் நடத்தியது. இதன்போது, செக்கனுக்கு 100 தோட்டாக்களைப் பாய்ச்சும் இயந்திரத் துப்பாக்கி இயங்கு நிலையில் இருந்ததை விமானி அறியவில்லை. இவர் கட்டுப்பாட்டு அறையை நோக்கித் தவறுதலாகத் தாக்குதல் நடத்தினார். அங்கிருந்த 3 அதிகாரிகளும் இலக்குகளில் இருந்து தப்பித்துத் தம்மைக் காத்துக் கொண்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (து-ரி4)



# ஐ.எஸ்ஸுக்… போராடச் சி… தொடர்ந்தும்…

## நேற்று முன் தினம் 250 பன…

வொஷிங்டன், ஏப்.26
ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராட, மேலும் 250 அமெரிக்கப் படையினரைச் சிரியாவுக்கு அனுப்பத்திட்டமிட்டிருப்பதாக அமெரிக்கத் தலைமையகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.
ஐ.எஸ். அமைப்பை முற்றாக அழிப்பதற்காக அமெரிக்க இராணுவத்தினர் தொடர்ந்தும் சிரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சிரியா, ஈராக்கில் வேறு போராளிக் குழுக்களும் நிலப் பகுதிகளை தம் வசப்படுத்தியுள்ளனர். இவற்றை மீட்பதற்கு இந்தப் படைகள் அனுப்பப்பட்டுள்ளன. ஒபாமாவின் உத்தரவில் படைகள் அனுப்பப்பட்டன என ஊடகங்களுக்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.
மேலும், ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் அங்குள்ள படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் ஆதரவு வழங்குவதற்கான அதிகாரத்தை ஒபாமா நடைமுறைப் படுத்தியுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.




ஈராக்கில் அண்மைக்காலமாக இராணுவத்தினர் பல பகுதிகளை மீண்டும் கைப்பற்றியுள்ளனர். நேற்றைய தினம் அமெ. அதிபர் ஒபாமா, ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மேர்கல், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பிரான்ஸ் அதிபர் பிராங்கோயிஸ் ஹொலான்டே, இத்தாலியப் பிரதமர் மற்றோ றென்சி ஆகியோர் சிரியா நெருக்கடி குறித்து கலந்து ஆலோசித்தனர்.

# 800 அல் குவைதாப் போராளிகளை கொன்ற ஏமன்-சவூதி கூட்டுப்படை

சனா, ஏப்.26
ஏமன் அரசுப் படைகளும், கூட்டு அரபுப் படைகளும் இணைந்து 800 அல்-குவைதா போராளிகளைக் கொன்று குவித்துள்ளன.
ஹட்ராட்முட் மாகாணத்தில், கோட்டை நகரான முகல்லாவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகச் சவூதி கூட்டுப்படையினர் தெரிவித்தனர். மேலும், முகல்லா நகரம் அல்குவைதாவின் அரணாக விளங்கியது. இந்தத் தாக்குதல் [illegible] ள்ளனர் எனவும் [illegible] நேற்று முன்தினம் இந்தத் தகவல் ஊடகங்களில் வெளியானது. (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...பியா பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் இந்தத் தாக்குதல் நடத்தப் ...ன்படிக்கை நடைமுறையில் இருக்கும்போது இவ்வாறான தாக்குதல்

(த-ரி4)

# ...க்கு எதிராக ...சிரியாவுக்கு ...ும் அமெ. படை

## ... படையினர் அனுப்பி வைப்பு



...திகளை ...அதிபர் ...பிரதமர் ...ாண்டே, ...நெருக்

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிக்கையில், சிரியாவில் இடம்பெறும் வன்முறை தொடர்பான ஆழ்ந்த கரிசனை எனக்குண்டு. அங்கு இடம்பெறும் தாக்குதல்களில் கவனம் செலுத்துகிறேன். சிரியாவில் பாதுகாப்பான பகுதி என்று எதுவும் இல்லை. இந்த நிலையை மாற்ற இராணுவத்தினரின் உதவி அவசியம். சிரியாவையும், சிரியப்பகுதிகளையும் பாதுகாப்பது தொடர்பில் எனது பங்கை வகிப்பேன்-என்றார்.

(த-ரி4)

# திமிங்கிலத்தை விடுவிக்குமாறு உயிரியலாளர்கள் போராட்டம்

## அமெரிக்கக் கேளிக்கைப் பூங்காவில்

புளோரிடா, ஏப்.26

அமெரிக்க புளோரிடா மாகாணத்தில் இயங்கும் கேளிக்கைப் பூங்காவில் உள்ள திமிங்கிலத்தை விடுவிக்கக்கோரி உயிரியலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

லொலிற்றா எனும் பெயர் கொண்ட திமிங்கிலம் 1970 ஆம் ஆண்டில் இருந்து 50 அடி நீளமும், 20 அடி ஆழமும் உடைய தொட்டியில் 46 வருடங்களாக வசித்து வருகின்றது. 1970 ஆம் ஆண்டு லண்டன் கேளிக்கைப் பூங்காவினரால் கடலில் திமிங்கிலக் குட்டிகள் பிடிக்கப்பட்டன. இந்த முயற்சியின்போது 5 திமிங்கிலங்கள் கொல்லப்பட்டன. லண்டன் கேளிக்கைப் பூங்காவில் பல வருடங்கள் இந்தத் திமிங்கிலத்தை வைத்துக் கேளிக்கை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வந்தனர். பின்னர் அமெரிக்காவின் பூங்கா ஒன்றுக்கு அது இடம்மாற்றப்பட்டது.

குறித்த கேளிக்கைப் பூங்கா வருடத்துக்கு 750 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்டுகள் திமிங்கிலத்தின் மூலம் வருமானமாகக் கிடைக்கின்றது. ஒவ்வொரு வருடமும் 85 ஆயிரம் பாடசாலை மாணவர்களும், 6 லட்சம் சுற்றுலாப் பயணிகளும் லொலிற்றாவைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். ஆனாலும், இது மிகவும் கவலைக்குரிய விடயம். திமிங்கிலம் அதற்கான வாழ்வை வாழவில்லை.



46 வருடங்களாகத் தனிமையில் இருக்கின்றது. இதனை விடுவிக்கவேண்டும் என மிருக வதை அமைப்பினர் போர்க் கொடி தூக்கியுள்ளனர். லொலிற் றாவின் சுகாதாரம், உடல்நிலை என்பன மருத்துவரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(த-ரி4)

# சூரிய ஒளியால் இயங்கும் விமானம் வெற்றிகரமாக 62 மணிநேரம் ஓட்டம்

வொஷிங்டன், ஏப்.26

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் முதல் முறையாக சூரிய ஒளியினால் இயங்கும் விமானம் நீண்ட பயணத்தை மேற்கொண்டு வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.



62 மணிநேரப் பயணத்தின் பின்னர் கடந்த சனிக்கிழமை விமானம் தரையிறங்கியது. சான் பிரான்சிஸ்கோவில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த இந்த விமானம், உலகம் முழுவதையும் சுற்றி வெற்றிகரமான சோதனை ஓட்டத்தை நடத்தியுள் ளது.

பயணம் தொடர்பில் விமானி கருத்துத் தெரிவிக்கையில்,

மிகவும் பரவசமாக உணருகிறேன். இரவுபகலாக அமைந்த பயணம் வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது. பூமியை வேறு பரிமாணத்தில் பார்த்தோம் எனத் தெரிவித்தார். 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்துக்கு 100 மில்லியன் டொலருக்கும் மேலான நிதி செலவிடப்பட்டது. இது சக்தி மூலத்தை மாற்றும் திட்டத்துக்காகப் பரிசோதிக்கப்பட்டது.

(த-ரி4)

# நீர்மூழ்கியில் இருந்து ஏவுகணை சோதனை

## வடகொரிய அதிபர் கிம் ஜாங் - உன் பாராட்டு

பியொங்யாங், ஏப் 26

வடகொரியாவில் நீருக்கடியில் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து நடத்திய ஏவுகணைச் சோதனை வெற்றி பெற்றதற்கு அந்த நாட்டு அதிபர் கிம் ஜாங்-உன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தென்கொரியா, அமெரிக்காவைத் தாக்குவதற்கான திறன் தங்களுக்கு இருப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

அதேநேரம் வடகொரியாவின் இந்த ஏவுகணைச் சோதனை என்பது ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை மீறிய செயல் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்துள்ளன. மேலும் மேற்கொண்டு இது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் வடகொரியாவை வலியுறுத்தி உள்ளன.

ஜப்பான் கடல் பகுதியிலிருந்தபடி ஏவப்பட்ட அந்த ஏவுகணை வெறும் 30 கி.மீ. தூரம் மட்டுமே பறந்து சென்றதால், அது தோல்வியடைந்திருக்கும் என்று தென்கொரியா பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வடகொரிய அரசினால் நடத்தப்படும் கே.சி.என்.ஏ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைச் சோதனையை அதிபர் கிம் நேரில்



பார்வையிட்டு உறுதி செய்தார். மேலும் தென்கொரியாவும் அமெரிக்காவும் தங்களுக்கு எதிராக செயல்பட்டால், அவற்றைத் தாக்கும் திறன் வடகொரியாவுக்கு இருக்கிறது என்றும் கிம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரங்கட்டுவதும் ஓரம்போவதும்

செல்வவேலாயுதம்



புத்தாண்டு தினத்துக்கு இரு தினங்களுக்கு முன்னர் இரவு 8.30 மணியளவில் வைத்தீஸ்வரா சந்தியிலிருந்து சிவன் பண்ணை வீதியும் அபூபக்கர் வீதியும் இணையும் மூலையிலுள்ள மதில் சுவரில் இரண்டு இளைஞர்கள், புத்தாண்டையொட்டி ஒரு திரையரங்கில் காட்சியிட இருக்கும் திரைப் படத்தின் கலர் போஸ்டர்களை ஒட்டிக் கொண்டிருந்தனர். இரவு 10.30 மணிக்கு அந்த வழியாகத் திரும்பிவரும்போது போஸ்டர்கள் கிழித்து அலங்கோலப்படுத்தப்பட்டிருந்தன. பொலிஸ் சீருடையில் கதாநாயகனது கிழிந்த கலர் போஸ்டர் அநாதரவாகக் கீழே கிடந்தது. மறுநாள் காலை 9 மணியிருக்கும், ஏற்கனவே ஒட்டப்பட்டு சேதமாக்கப் பட்ட போஸ்டர்களை மூடி அதே திரைப் படத்தின் போஸ்டர்களை, கிழித்து கீழே போடப்பட்டிருந்த போஸ்டர்களுக்கு மேல் நின்றபடி இரு இளைஞர்கள் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தப் போஸ்டர்கள் வேறு ஒரு திரையரங்கினதாகும். புத்தாண்டுக்கு மறுதினம் குறித்த இடத்தில் ஒட்டப்பட்டிருந்த இரண்டாவது திரையரங்கின் கலர் போஸ்டரும் கிழித்தெறியப்பட்டு அதே இடத்தில் முதலில் ஒட்டியிருந்த திரையரங்கின் சேதமாக்கப்பட்ட கலர் போஸ்டர் அரைகுறையாகத் தெரிந்தது. ஆக ஒரே திரைப்படம், ஒரே கலர் போஸ்டர்கள், ஆனால் திரையரங்குகள் தான் வேறு வேறு. ஆள் சேர்ப்புக்குப் பெரும் எடுப்பில் போட்டிக்கு போஸ்டர் ஒட்டுகிறார்கள். ஒவ்வொரு கலர் போஸ்டரினதும் பெறுமதி கொஞ்ச நஞ்சமாக இராது. சந்தனம் மெத்தினால் என்று ஆரம்பிக்கும் கிராமிய சொலவடைதான் இங்கு ஞாபகத்துக்கு வருகிறது.

வெளிநாட்டுத் திரைப்படங்களைக் கொள்வனவு செய்து இலங்கைத் திரையரங்குகளுக்கு விநியோகிக்கும் உரிமையை 1972 க்கு முன்னர் சில தனியார் நிறுவனங்கள் (பெரும்பான்மைச் சமூகத்தினர் அல்லாதாரது) கொண்டிருந்தன. புறநகர்ப் பகுதிகளில் அமைக்கப்பட்ட திரையரங்குகள் தகரக் கொட்டகைகளாக இருப்பினும் கூட இந்த நிறுவனங்கள் ஏற்கனவே வெளியீடு செய்து தமது களஞ்சியங்களில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பழைய திரைப்படங்களைத் திரையிட்டு பணம் பண்ணிக்கொண்டமை வரலாறாகும். எம்மவர்கள் அனேகமானோருக்கு முழு நேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்களும் கிடைத்ததுடன் பிரதேச உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் களியாட்டவரி நிரந்தர வருமானமாக நிறையவே கிடைத்தது. எப்படிப் பார்த்தாலும் சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லையில் என்பதுபோல், பணமும் எம்மவர்களின் கைகளுக்கிடையேதான் சுழன்றது.

உள்ளூரில் தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டும். தமிழ்க் கலைஞர் களை ஊக்குவிக்க வேண்டும் என்றும், இலங்கையின் பெருமளவு நிதி இந்தியாவுக்குப் போகிறது, இலங்கையில் தமிழ்த் திரைப்பட உலகு வளர்ச்சி காணவேண்டும் என்றும் - தேசியவாதம் பேசுவதாக தம்மைக் காட்டிக் கொண்டு, தமது பிரதேசங்களில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படுவதை சகித்துக் கொள்ளமாட்டாதவர்கள் இதற்காகத் தென்னிந்தியத் திரைப்படங்களைத் தடை செய்ய வேண்டும் எனும் இனவாத வெப்பியாரத்தின் வெளிப்பாடாகவே தனியார் நிறுவனங்களின் வெளிநாட்டுத் திரைப்பட இறக்குமதி உரிமங்கள், கூட்டுத்தாபனம் என்ற பெயரில் இல்லாமற் செய்யப்பட்டன. கூட்டுத்தாபனமே இனி அவற்றை இறக்குமதி செய்து விநியோகிக்கும் என்பதுடன், வெளியிடப்படும் தமிழ்த் திரைப்படம் ஒன்று ஒரே சமயத்தில் மூன்று திரையரங்குகளில் மாத்திரமே திரையிடப்படலாம் எனும் கட்டுப்பாடும் வந்தது. இதன்படி கொழும்பில் இரண்டு அரங்குகளிலும் யாழ்ப்பாணத்தில் ஓர் அரங்கிலுமாக புதிய தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இங்கு அச்சிடப்பட்டு வந்த திரைப்பட விளம்பரப் போஸ்டர்கள்கூட கொழும்பில் இருந்தே அச்சிடப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டன.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இதே கட்டுப்பாடுதான் நிலவியது. இந்த மூன்று பிரதிகளும் பின்னர் கண்டி, திருமலை, மட்டக்களப்பு என்று சுற்றிச் சுழன்று தொடர்ந்து புறநகர்ப் பகுதிகளிலும் திரையிடப்பட்டமையும் ஓடிக்களைத்த பிலிம் சுருள்கள் சிறு நகரங்களிலும் நகர்ப்புறங்களிலும் ஓடிஓடி மேலும் சேதமடைந்து படம் பார்ப்பவர்களைச் சலிப்படைய, வெறுப்படைய வைத்து அவர்களது தலையெழுத்தாக இருந்ததும் மறக்க முடியாததாகும். இன்று தென்னிந்தியத் திரைப்படம் ஒன்று (இதன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட) 37 இலங்கைத் திரையரங்குகளில் வெளியாகி உள்ளது என்பதுடன், யாழ்.மாவட்டத்தில் மட்டும் இது நான்கு திரையரங்குகளில் காட்சியளிக்கின்றது.

உள்ளூரில் தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டும். தமிழ்க் கலைஞர்களை உருவாக்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்றெல்லாம் பசப்பியவர்கள் என்னவானார்களோ? எங்கிருக்கிறார்களோ? கூட்டுத்தாபனத்துக்குத்தான் வெளிச்சம். ஆனால் ஒன்றை மட்டும் இங்கு தெளிவாகச் சொல்லி வைக்க முடியும். ஈழத்தில் சிறந்த தமிழ்க் கலைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். சிறந்த தமிழ்த் திரைப்படங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். வர்த்தக ரீதியில் அல்லாத, மிகைப்படுத்தப்பட்ட மசாலாக் கலப்பு அல்லாத, யதார்த்தபூர்வமான, எம்மவர்க்கே உரித்தான தனித்துவம் நிறைந்ததான சிறந்த படைப்புக்கள் வெளிவரும் காலம் மட்டும் அதிக தூரத்தைக் கொண்டதாக இல்லை என்பதுதான் அது.

# புதுவருடமும் ராசி பலனும்




## மிதுனம்

(மிருகசீரிடம்,திருவாதிரை, புனர்பூசம்;)

(புதுவருடமும் ராசி பலனும் என்ற தலைப்பில் ரிஷப ராசி பற்றிப் பார்த்தோம். இன்று மிதுன ராசி பற்றிப் பார்ப்போம்)

எதிலும் யதார்த்தத்தை விரும்புபவர் நீங்கள்! சூரியன், புதன் மற்றும் சுக்கிரன் சாதகமாக இருக்கும் நேரத்தில் இந்த வருடம் பிறப்பதால், உங்களுடைய நிர்வாகத் திறமை அதிகரிக்கும். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். கடினமான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். பணப் புழக்கம் அதிகமாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்குப் புதிய வேலை கிடைக்கும்.

உங்கள் ராசியிலேயே வருடம் பிறப்பதால், ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அவ்வப்போது வீண் பதற்றம், தலைச்சுற்றல், மன அமைதியின்மை, முன்கோபம் வந்து நீங்கும். தோலில் நமைச்சல், தேமல், நரம்புச் சுளுக்கு வரக்கூடும்.

வருடம் முழுவதும் சனி ராசிக்கு 6-ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால், புதிய திட்டங்கள் நிறைவேறும். எதிரிகளும் நண்பர்களாவார்கள். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் உண்டாகும். புது பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். சொந்த ஊரில் மதிப்புக்கூடும். வீடு, வாகனம் வாங்க வங்கிக்கடன் உதவி கிடைக்கும். வழக்கில் தீர்ப்பு சாதகமாகும்.

செவ்வாய் 6-ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருக்கும் போது வருடம் பிறப்பதால், அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் ஆதாயம் அடைவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

ராகு 3-ஆம் வீட்டிலேயே தொடர்வதால், உங்கள் உழைப்புக்கு உரிய பயன் கிடைக்கும். பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண்பீர்கள். தடைப்பட்ட காரியங்கள் நல்லபடியாக முடியும். ஆனால், கேது 9-இல் இருப்பதால், தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அவருடன் கருத்து வேறுபாடுகளும் ஏற்படக்கூடும். பிதுர்வழிச் சொத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். 26.10.16 முதல் 2.12.16 வரை செவ்வாய் உங்கள் ராசிக்கு 8-இல் அமர்வதால், சொத்துப் பிரச்சினைகள், சகோதர வகையில் மனத்தாங்கல், பழைய கடனை நினைத்த கவலைகள் வந்து செல்லும்.

14.10.16 முதல் 7.11.16 வரை சுக்கிரன் 6-இல் மறைவதால், கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபங்கள், பிள்ளை களால் செலவுகள் வந்து போகும்.

1.8.16 வரை குருபகவான் உங்களுடைய ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் இளைய சகோதர வகையில் பிணக்குகள் வரும். எவருக்காகவும் பிணைக் கையெழுத்திட வேண்டாம். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு ராசிக்கு 4-இல் அமர்வதால், உங்களைப் பற்றிய வதந்திகள் அதிகமாகும். அவ்வப்போது மன இறுக்கம் உண்டாகும். தாயாரின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். வழக்கில் வழக்கறிஞரை மாற்ற நேரிடும். ஆனால் 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்கிரகதியிலும் ராசிக்கு 5-இல் அமர்வதால், மனத் தெளிவு உண்டாகும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் தொடர்பான முயற்சிகள் நல்லபடி முடியும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

வியாபாரத்தில், புது முதலீடுகள் செய்து விரிவுபடுத்துவீர்கள். பங்குதாரர்கள் உங்களுக்குக் கட்டுப்படுவர். சந்தை நிலவரத்தை அறிந்து முக்கிய முடிவு எடுப்பீர்கள். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பர்.

வருடம் முழுவதும் குரு சாதகமாக இல்லாததால், உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் ஒதுக்கப்படுகிறோமோ என்ற ஒரு சந்தேகம் உண்டாகும். சக ஊழியர்களின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொள்வீர்கள். மூத்த அதிகாரிகளைப் பற்றிய இரகசியங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டாம். சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும். பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. மாணவ-மாணவிகள் கடினமாக உழைத்து உயர்கல்வியில் வெற்றி பெறுவர். கலைத்துறையினருக்கு, புகழ் பெற்ற நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரும். மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, உங்களைக் கடினமாக உழைக்க வைப்பதாக இருந்தாலும், தன்னம்பிக்கையால் தலை நிமிரச் செய்வதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.வி.விவேகானந்தன்
- சட்டத்தரணி

# பண்டா - செல்வா உடன்படிக்கையும் தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனமும்

## தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவு இன்று

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலேசியாவின் ஈப்போ நகரில் 1898ம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அவதரித்தார். 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி எம்மை விட்டு பிரிந்தார்.

அவரை தமிழ் மக்கள் அன்போடு தந்தை செல்வா என அழைத்தனர். தமிழர்களின் நல்லதோர் இடையனாக அவர் அவதரித்தார்.

### தமிழரசுக் கட்சி

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆந் திகதி சமஷ்டி கட்சி தமிழில் தமிழரசுக்கட்சி உதயமானது. என்றாலும், தமிழ் மக்கள் சமஷ்டி அரசமைப்பை ஆதரிக்கவில்லை. 1952ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரு தொகுதிகளில் வெற்றி பெற்றனர். கோப்பாய்த் தொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கால் அமரர் கு.வன்னியசிங்கம் வெற்றி பெற்றார் அவ்வாறே திருகோணமலையில் அமரர் இராசவரோதயம் வெற்றி பெற்றார். திருக்கோணேஸ்வரக் கோயிலின் தர்மகர்த்தாவாக அவர் இருந்தார். அன்னவர்தான் தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்தை உருவாக்கி, அதற்கான வடிவமைப்பையும் கொடுத்தவர்.

### தனிச்சிங்களச் சட்டமும் கலவரமும்

தனிச்சிங்களச் சட்டம் ஒரே இலங்கையாக ஒற்றுமைப்படுத்தும் எனப் பிரதமர் பண்டாரநாயக்க விளம்பினார். 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி தனிச்சிங்களச் சட்ட மூலத்தை நாடாளுமன்றின் அங்கீகாரத்துக்காக முன் வைக்கப்பட்டது.

### காலி முகத்திடலில்

அன்றைய நாடாளுமன்றம் காலி முகத்திடலிற்கருகாமையில் இருந்தது. தமிழரசுக்கட்சியினரும், தமிழ்மொழி உரிமையில் கரிசனை கொண்டவர்களும் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். சிங்கள இன வாதிகளும், அடாவடித்தனத்தில் ஈடுபடுபவர்களும், காடையர்களும், ஒன்று கூடினர். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களை மிகக் கொடூரமாகத் தாக்கினர். அந்த நேரத்தில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சத்தியாக்கிரகிகளை காப்பாற்ற முனைந்தார். அவ்வேளை மழை தூறிக்கொண்டிருந்தது. அருகில் நின்ற பிரதமர், தூறலில் அவர்கள் நனையட்டும் எனக் கூறி, பொலிஸ் அதிகாரி செய்ய முனைந்த கடமையைத் தடுத்துவிட்டார்.


1956 ஜூன் 5 ஆம் திகதி தொடக்கம் தமிழர்கள் இரத்தத்தில் உறைந்துள்ளனர். பயத்தில் வாழ்கின்றனர்.

### தனிச்சிங்களச் சட்டமும் பண்டா - செல்வா உடன்படிக்கையும்

1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பலவித உணவுதவிர்ப்பு, சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஆரம்பிக்கப் போவதாக தமிழரசுக் கட்சி அறிவித்தது. அதற்கான காலக்கெடு ஒன்றினையும் அறிவித்தது. இதன் காரணமாக பிரதமர் பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சி தலைவர்களைப் பேசித் தீர்ப்போம் வாரீர் என அழைத்தார். தந்தை செல்வாவும், அவரது குழுவினரும் சென்றனர். பிரதமர் பண்டாரநாயக்க, அவர்களை வரவேற்றார். அவ்வேளையில் டெயிலி நியூஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் அங்கு நின்றனர். சேகரா எனும் ஊடகவியலாளர் பின்பு பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார். காரின் கதவடியில் வந்த பிரதமர் பண்டாரநாயக்கவின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

தந்தை செல்வா, பண்டாவைப் பார்த்து

> " தமிழ் தலைவர்கள் எல்லோரும் கட்சி பேதம் அற்று ஒன்றிணைய வேண்டும். பிரிந்து நின்று குரல் கொடுத்தால், சுண்டங்காய் தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என தமிழ்த் தேசிய இனத்தில் அக்கறை கொண்டோர் எல்லோரும் உணர்ந்து தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.



கவனமாக சிந்தனை செய்த பின்பு தான் உங்களைச் சந்திக்க நான் ஒத்துக் கொண்டேன். இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நீங்கள் ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும். நாங்கள் இப்பிரச்சினையை இப்பொழுது தீர்க்காவிட்டால், நாம் இறந்த பின்பு, இப்பிரச்சினை நாட்டிற்கு பெரும் பேரழிவை உண்டாக்கும் என்று கூறினார். தந்தை செல்வா அன்று உதிர்த்த தீர்க்க தரிசன வார்த்தைகளின் தாற்பரியம் இன்று எல்லோராலும் உணரப்படுகின்றது.

1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கை கைச்சாத்தானது. சுருக்கமாக பண்டா-செல்வா உடன்படிக்கை என அழைக்கப்பட்டது.

### பிரத்தியேக தீர்வு

பண்டா-செல்வா உடன்படிக்கை தமிழர்களுக்கென்றே பிரத்தியேகமானதொரு தீர்வை முன்வைத்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமென வரையறுக்கப்பட்டது. அதன் மூலம், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கை வாழ் தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாணத்தை ஒரு பிராந்தியமாகக் கணித்தது. ஒரு பிரதேச சபை அளிக்கப்பட்டது. கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேலான பிராந்தியங்களாக வகுத்தது. இதன் பிரகாரம் கிழக்கு மாகாணம் இரண்டு பிரதேச சபை களைக் கட்டாயம் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும். ஒன்று தமிழர்களுக்கான பிரதேச சபை, மற்றையது முஸ் லிம்களுக்கான பிரதேச சபை. இதன் மூலம் முஸ்லிம்களும் பிராந்தியத்திற்குரியவர்களாகவும், அவர்களுக்கென ஒரு பிரதேச சபையை ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் முஸ்லிம்களின் தாயகம் கிழக்கு மாகாணம் என்ப தை தந்தையின் செயற்பாட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிகாரங்கள்

பண்டா-செல்வா உடன்படிக்கையில் பிரதேச சபைக்கு என்னவிதமான அதிகாரங்கள் கொடுக்கப்படும் என திட்டவட்டமாகக் கூறப்பட்டது. அதிகாரங்களை பெறுவதற்கு பிரதமரிடமோ, தேசாதிபதியிடமோ, அமைச்சர்களிடமோ தங்கியிருக்கத் தேவையில்லை. நேரடியாக பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டன. எந்த அமைச்சரும் தலையிட முடியாது. அதிகாரங்களைக் குறைக்கவே முடியாது.

### மொழி

தமிழ் ஒரு தேசிய சிறுபான்மை மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி சிங்கள மொழிக்கு குந்தகம் இல்லாமல் தமிழிலும் நடைபெறும் என திட்டவட்டமாக எழுதப்பட்டது.

### குடியேற்றம்

பிரதேசசபையின் அதிகாரத்துக்குட்பட்ட காணிகள் வழங்கப்படும் உரிமை பிரதேச சபைக்கே உண்டு என திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. குடியேற்றத்திட்டங்கள் அமைத்தல், குடியேற்ற வாசிகளை தெரிவு செய்தல், பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்டது.

### நிதி

பிரதேசசபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமாக நிதியினை வழங்குமெனவும், அத்தொகை மற்றும் நிதி தொடர்பான மற்றைய விடயங்கள் பற்றி ஆராயப்படும் என ஒத்துக் கொள்ளப்பட்டது. பிரதேசசபை வரிவிதிக்கவும், கடன் பெறவும், கடன் வழங்கவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

### பிரஜாவுரிமை

இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமை பற்றி சமஷ்டி கட்சி பிரஸ்தாபித்துள்ளது. அதைப்பற்றிய கருத்துக்களை முன் வைத்துள்ளது. விரைவில் தீர்வை எட்டும்படி பிரதமருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. பிரதமர் மிக விரைவில் தீர்வு காண்பதாக ஒத்துக்கொண்டார்.

### முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால் போருடன் தமிழர்களின் உரிமைப் போராட்;டம் முற்றுப் பெற்றதாக எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.


அது ஒரு நன்னம்பிக்கை முனையே. இலங்கையின் இறமைக்குட்பட்டு, தமிழர்களின் உரிமைகளை பெற்றிடத் தோன்றிய திருப்பு முனையாகும் என தமிழ் மக்கள் திடமாக எண்ணுகின்றனர். பாதிப்புக்கு பயமின்றி முன்னேறிச் செல்கின்றனர்.

### தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும்

தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் கட்சி பேதம் அற்று ஒன்றிணைய வேண்டும். பிரிந்து நின்று குரல் கொடுத்தால், சுண்டங்காய் தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என தமிழ் தேசிய இனத்தில் அக்கறை கொண்டோர் எல்லோரும் உணர்ந்து தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

# கெட்டிக்காரன் புளுகு!

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் ஒன்று உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் சேவல் உற்சாகம்மேலிட பலதடவை கூவியது!
சேவலின் குரலைக் கேட்ட ஒரு நரி அங்கே வந்தது.



நரிக்கு நல்ல பசி! கூவிக்கொண்டிருந்த சேவலைப் பிடித்துச் சாப்பிட ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் உச்சியில் இருந்ததால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக நரி ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்து, சகோதரரே! வணக்கம்! ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப்பட்டாயா?

பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது!...இனி ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது....,அன்பாக நடந்து கொள்ள வேண்டும்...சகோதர மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன்! இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்." என்றது.
நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்துகொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப்போல தலையைத் தூக்கிப் பார்த்தது.
இதனைக் கண்ட நரி, என்ன சகோதரா! ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே! அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது.
அதற்கு சேவல், சற்றுத் தூரத்தில் வேட்டை நாய்கள் வருவது மாதிரித் தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைக் கவனிக்கிறேன்." என்றது!
அவ்வளவுதான்! நரிக்கு உடல் நடுங்கியது.
சரி...,சரி...! நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறியவாறு கிளம்பியது.
சேவல், நரியிடம், அருமைச் சகோதரா! போகாதே. நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக்கண்டுஏன்பயப்படுகிறாய்?... இப்போதுதானே நீ சொன்னாய்! எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது....என்று!" என்றது.
அதற்கு நரி அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அனேகம் பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால்....?...என் கதி என்ன ஆவது?...நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிக் காட்டுக்குள் மறைந்து விட்டது.

சேவல், யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கெட்டிக்காரப் பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறிச் சிரித்தது.



## புத்திசாலிக் காக்கா

காகம் ஒன்று காட்டிலே
தாகத்தாலே தவித்ததாம்
அங்குமிங்கும் தேடியே
வீடு நோக்கிச் சென்றதாம்
அங்கு சிறிய ஜாடியில்
கொஞ்சம் தண்ணீர் இருந்ததாம்
எட்டி எட்டி பார்த்ததாம்
எட்டாமல் போனதாம்
சிறிய சிறிய கற்களை
பொறுக்கி எடுத்துப் போட்டதாம்
தண்ணீர் மேலே வந்ததாம்
தாகம் தீர குடித்ததாம்
புத்திசாலிக் காக்கா
சந்தோசமாய் பறந்ததாம்



## வரலாற்றில் இன்றைய தினம்

1564 - நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர் இங்கிலாந்து ஸ்ரபோட்டில் ஞானஸ்நானம் பெற்றார்.
1721 - ஈரானின் தப்றிஷ் நகர் நிலநடுக்கத்தில் பேரழிவை எதிர்கொண்டது.
1865 - அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைப் படுகொலை செய்த ஜோன் வில்கிஸ் பூத், வேர்ஜினியாவில் யூனியன் குதிரைப் படைத் துருப்புக்களால் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.
1933 - நாஷி ஜேர்மனியின் உத்தியோகபூர்வஇரகசிய பொலிஸ் படை 'கெஸ்டபோ' உருவாக்கப்பட்டது.
1937 - ஸ்பெயினின் குவர்னிகா, ஜேர்மனிய லுப்ற்வேவின் குண்டுத் தாக்குதலுக்கு உட்பட்டது.
1942 - சீனாவில் மஞ்சுக்கோ பென்ஷி கொலரி விபத்தில் 1,549 சீனச் சுரங்கத் தொழிலாளர் சாவு.
1954 - இந்தோனேஷியாவிலும், கொரியாவிலும் சமாதானத்தை மீளக்கொண்டுவர ஜெனிவா மாநாட்டின் மூலம் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.
1956 - வெற்றிகரமான கொள்கலன் கப்பல் SS ஐடியல்X டெக்ஸாஸ் நியூஆர்க் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது.
1960 - தென் கொரிய ஜனாதிபதி சிங்மன் றீ ஏப்ரல் புட்சியையடுத்து பதவியை விட்டு விலகினார். 12 வருட சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.
1962 - நாஸாவின் றேஞ்சர் 4விண்ஓடம் சந்திரனில் மோதியது.
1981 - கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவர் மைக்கல் ஆர். ஹறிசனால் உலகின் முதலாவது மனித திறந்த கருப்பைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
1986 - சோவியத் யூனியனின் செர்னோபில் அணுசக்தி நிலையத்தில் உலகிலேயே மோசமான அழிவைஏற்படுத்திய அணு உலை விபத்து இடம்பெற்றது.
1989 - உலகிலேயே மோசமான சூறாவளி தாக்கம் மத்திய பங்களாதேஷில் ஏற்பட்டது. 1,300 பேர் வரை சாவு, 12,000 பேர் காயமடைய 80,000 பேர் வரை வீடுகளை இழந்தனர்.
1994 - சீன விமானசேவைக்குரிய விமானம் 140 ஜப்பான் நகோயா விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகி விமானத்திலிருந்த 271 பேரில் 264 பேர் சாவு.
2005 - சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து லெபனானில் நிலைகொண்டிருந்த 14,000 படையினரில் தனது கடைசித் துருப்பினரையும் சிரியா மீளப்பெற்றுக்கொண்டது. இதன் மூலம் லெபனானில் 29ஆண்டுகளாக நீடித்த சிரியாவின் இராணுவ ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்தில் முன்னேற்றமில்லை

பிரான்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான சர்வதேச பத்திரிகை சுதந்திர தரவரிசைப் பட்டியலில், இலங்கை 141ஆவது இடத்தைப் பிடித்துள்ளது எனக் கடந்த வாரம் தகவல் வெளிவந்துள்ளது.

கடந்த காலங்களில் எமது நாட்டில் ஊடகத்துறை எதிர்நோக்கி வந்த கெடுபிடிகள் தற்போது ஓரளவேனும் குறைந்துள்ள நிலையில், மழைவிட்டும் தூவானம் போகவில்லை என்ற ரீதியில் ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம்பெறத்தான் செய்கின்றன.

அதேநேரம், சர்வதேச கண்காணிப்புக்கள் எமது நாட்டின் ஊடக நிலைமைகள் குறித்து அவதானம் செலுத்திவருகின்றன என்பதை இதுபோன்ற பட்டியல் வெளியீடுகளும், ஆய்வுகளும், நோக்குகளும் எடுத்தியம்புகின்றன. இவை பாதிக்கப்பட்ட, தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுவரும் எமது நாட்டுத் தமிழ் ஊடகவியலாளர்களுக்குச் சற்று மனத் திருப்தியளிக்கின்றன..!

இந்தப் பட்டியலில் பின்லாந்து, அதிக பத்திரிகைச் சுதந்திரம் மிக்க நாடாகத் தொடர்ந்து 6ஆவது முறையாகவும் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. நெதர்லாந்து, நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் முறையே 2,3 மற்றும் 4 ஆவது இடங்களைப் பிடித்துள்ளன.

180 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் ஆகக்குறைந்த பத்திரிகைச் சுதந்திரமுள்ள நாடாக, கடைசி இடத்தைப் பிடித்துள்ளது எரித்ரியா.

எமது அண்டை நாடுகளான இந்தியா 133 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 147 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 120 ஆவது இடத்திலும் உள்ளன. அமெரிக்கா 44 ஆவது இடத்தைப் பிடித்துள்ள அதேவேளை, ரஷ்யா 148 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தந்த நாடுகளில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தையும், ஊடக ஒடுக்குமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மக்களுக்குத் தகவல்களை உடனுக்குடன் கொண்டு சென்று சேர்க்கவேண்டும் என்பதற்காகத் தமது உயிரைக்கூடத் துச்சமாக மதித்துச் செயற்பட்டவர்கள், செயற்படுபவர்கள் ஊடகவியலாளர்கள்.

இவ்வேளையில், போரால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் பற்றிய செய்திகளை உலகுக்குச் சொன்ன, சொல்ல முனைந்து உயிரைவிட்ட மேரி கொல்வின்தான் எமது மனங்களில் நிழலாடுகிறாள்.

இந்த உலகின் ஒரு குறிப்பிட்ட மூலை உல்லாசமாக இருக்க, இன்னொரு மூலை நரகமாக இருப்பதைக் கண்டு உணர்ச்சி கொண்டு அதனை வெளிப்படுத்த அவள் விரும்பிய தருணங்கள் அளப்பரியன.

சிரியப் படையினர் மருந்துகளோ, உணவோ, மின்சாரமோ இல்லாத அப்பாவி மக்களை வதைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற உண்மையை வெளியிட்ட அடுத்த நாளே அவள் கொல்லப்பட்டாள். அவள் கொல்லப்படும் நாளுக்கு முந்தைய நாளில் பல்வேறு சர்வதேச ஊடகங்களிலும் தோன்றி, சிரியாவில் நடக்கும் கொடூரங்களை வெளிப்படுத்தியிருந்தாள்.

மேரி கொல்வினின் முக்கியமான அடையாளம் அவளது ஒற்றைக் கண்ணில் அவள் அணிந்திருந்த கறுப்பு ஒட்டு. அதுவே அவளது தைரியத்தின் அடையாளம். அந்த அடையாளம் ஈழ இனப்படுகொலையின் முக்கிய சாட்சி என்பதும் நாம் மறக்கற்பாலது. ஆம், இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்றபோது ஏற்பட்ட காயம் அது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் இங்கு நடந்த போர் பற்றிய உண்மைச் செய்திளை வெளியிடத் தடுக்கப்பட்டு இருப்பதைப் பற்றிய செய்திகளைச் சேகரித்தாள். அவள் இன்று இருந்திருந்தால், இன்னும் எக்கச்சக்கமான போர்க் காலத்தில் நடந்த உண்மைகள் வெளிவந்திருக்கும்.

இந்தவகையில், ஊடகவியலாளர்களின் சிந்தனைகளும் எப்போதும் மக்கள் நலன் சார்ந்தவையாகவே இருக்கின்றன. அவர்களது உழைப்பு என்பது பார்ப்பவர்களுக்குப் பசுமையானதாகத் தெரியும். ஆனால், எவ்வளவு கரடுமுரணானது என்பது அவர்களுக்குத் தான் தெரியும்.





எனவே, ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களும் திறன்படச் செயற்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ள [illegible] கிறோம்.

# தந்தை செல்வா பற்றிய சில சுவாரஸ்யமான செய்திகள்

அரசியலில் நேர்மைத்திறனும் மனவுறுதியும் தியாகவுணர்வும் கொண்ட தந்தை செல்வா தனிப்பட்ட வாழ்வில் கலையுணர்வும் நகைச்சுவையும் நிரம்பப் பெற்றவர் என்பதை அவருடன் வாழ்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

1919 ஆம் ஆண்டு தந்தை செல்வா சென்.தோமஸ் கல்லூரியின் ஆசிரியர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் ஆசிரியப் பணியை மேற்கொள்ளச் சென்றார். அந்தக் கல்லூரியின் வாயிலில் நின்ற ஒரு மாணவனிடம் அதிபர் அலுவலகம் எங்கேயென்று கேட்டார். அந்த மாணவன், தந்தை செல்வாவின் வாலிபத் தோற்றத்தைப் பார்த்துவிட்டு, இவர் இந்தக் கல்லூரியில் மாணவனாகச் சேரவந்துள்ளார் என்று எண்ணி அதிபர் அலுவலகத்துக்குக் கூட்டிச் சென்றார்.

அடுத்த நாள் அந்தக் கல்லூரியின் இன்ரர் மீடியற் (விஞ்ஞானம்) வகுப்பில் கற்ற அந்த மாணவனுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. தான் மாணவன் என்றெண்ணி அதிபர் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்ற செல்வநாயகம் என்ற வாலிபரே கணிதப் போதனாசிரியராக வகுப்பை நடத்த வந்திருந்தார். செல்வ நாயகம் மாணவனைப் பார்த்துச் சிரித்தார். மாணவன் அதிர்ச்சியடைந்தான்.



தந்தை செல்வா வாலிபப் பராயத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் அழகிய பெண்ணை உள்ளத்தில் இருத்தி வைத்திருந்தார். சில காலத்துக்குப் பின்னர் அந்தப் பெண்மணி வேறொருவரைத் திருமணம் செய்து கொண்டார். நீதியரசர் சிவசுப்பிரமணியம் அந்தப் பெண்மணியின் திருமணம் முடிந்து விட்டது; நானே அந்தத் திருமணத்தின், மணமகன் தோழன் என்று கூறினார். தந்தை செல்வா கண்கலங்கினார். சிறிது நேரம் ஒன்றுமே பேசவில்லை.

தந்தை செல்வாவின் தந்தை சாமுவேல் வேலுப்பிள்ளை 1919 ஆம் ஆண்டு மலேசியாவில் தொழில்புரிந்த காலத்தில் மறைந்து விட்டார். அவர் உயிரோடு இருக்கையில் தனது மரணச்சடங்கு கிறிஸ்தவ முறைப்படியே நடத்தப்பட வேண்டுமென்று கூறியிருந்தார். அப்பொழுது முதலாவது உலகப் போர் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. கிறிஸ்தவ குருமார்கள் மட்டுமன்றி கிறிஸ்தவர்களையே அவ்வூரில் காணமுடியாதிருந்தது. சாமுவேல் வேலுப்பிள்ளையின் நெருங்கிய நண்பன் ஓர் இந்து. கிறிஸ்தவப் பாடசாலையில் படித்தவர்.

அந்த நண்பர், சாமுவேல் வேலுப்பிள்ளை விரும்பியபடி மரணச்சடங்கை நடத்தத் திட்டமிட்டார். இறந்த உடலை அங்கிருந்த கிறிஸ்தவ தேவாலயத்துக்கு எடுத்துச் சென்றார். பேழையைச் சுற்றிலும் மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி வைத்தார். கிறிஸ்தவப் பாடசாலையில் கற்றுக் கொண்ட கிறிஸ்தவப் பாடல்களைப் பாடினார். பின்னர் அலுமாரியில் இருந்த வழிபாட்டு முறைகள் பற்றிய நூலை எடுத்தார். அடக்க ஆராதனை என்ற பகுதியைத் தெரிந்து அதில் காணப்பட்ட ஜெபங்களை வாசித்தார். பின்னர் பேழையை மூடிவிட்டு உடலை அடக்கம் பண்ணினார். (இந்தச் செய்தியை பலத்த சிரிப்பின் மத்தியில் பேராயர் சபாபதி குலேந்திரன் எனக்குக் கூறினார்)

தந்தை செல்வநாயகம் இருபது வயதாக இருந்த பொழுது தம்முடைய நண்பர் ஒருவருக்கு உதவி புரியும் வண்ணமாக அவருடைய சாதகக் குறிப்பை எடுத்துக் கொண்டு ஒரு சோதிடரைச் சந்திக்கச் சென்றார். அந்தச் சோதிடர் தந்தை செல்வநாயகத்தின் சாதகத்தையும் பார்க்க விரும்பி அதனைக் காட்டும்படி கேட்டார். செல்வநாயகம் மிகுந்த தயக்கத்துடன் சோதிடரிடம் அதைக் காட்டினார். சோதிடர் அதைப் பார்த்துவிட்டு, நீர் ஒரு காலத்தில் உமது நாட்டின் ஒரு தலைவராக விளங்குவீர். உமது மக்களின் நாயகனாக இருப்பீர். உமது பெயர் பிறநாடுகளிலும் பிரகாசிக்கும் என்று கூறினார்.

வெஸ்லிக் கல்லூரியில் கற்பித்த காலத்தில் தந்தை செல்வநாயகம் இயல், இசை, நாடகம் என்பவற்றில் ஆர்வமுடையவராக இருந்தார். ஒருமுறை வெனிஸ் வணிகன் (MERCHANT OF VENICE) என்ற நாடகம் அரங்கேற்றப்பட்ட பொழுது செல்வநாயகம் போஷியா (PORTIA) என்ற கதாநாயகியின் பாத்திரத்தை ஏற்று பார்வையாளரின் மனம் குளிரும் வண்ணம் நடித்துக் காட்டினார். அந்தக் காலத்தில் பெண்கள் நடிப்பதில்லை.

தந்தை செல்வநாயகம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் படித்த காலத்தில் அங்கு ஒரு போலிக் கொலைவழக்கை மாணவர்கள் நடப்பித்தனர். தெல்லிப்பழையில் ஒருவரைக் கொன்றதாக வழக்கு நடைபெற்றது. வழக்குத் தொடுநராக (Prosecation) பங்கேற்றவர் செல்வநாயகம். எதிரியின் சட்டத்தரணியாக (Defence Counsel) விளங்கியவர் யாழ்ப்பாணத்தின் முதலாவது மேயராகப் பணியாற்றிய சாம். ஏ.சபாபதி. தந்தை செல்வா வெஸ்லிக் கல்லூரியில் கற்பித்த காலத்தில் தேசிய உணர்ச்சி நாட்டில் பரவியிருந்தது. அவர் வெள்ளைக்காரர் நடத்திய அந்தக் கல்லூரியில் வேட்டிசால்வை அணிந்தே பணிபுரியச் சென்றார். இது சக ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி அவருடைய உறவினர்களுக்கும் வேடிக்கையாக இருந்தது. அவர் கர்நாடக இசையில் மிகுந்த ஆர்வமுடையவர். நாதஸ்வர இசை அவருக்கு இன்பமூட்டியது. இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் எவற்றையும் அவர் விட்டுவிடுவதில்லை. இந்துக் கோயில்களில் நடைபெற்ற நாதஸ்வரக் கச்சேரிகளையும் முன்னின்று கேட்டு, கையாலும் காலாலும் தாளம் போடுவது அவர் வழக்கம். அவர் மரணப்படுக்கையில் இருந்த பொழுதும், அவரைப் பார்வையிட்ட இந்திய வைத்திய நிபுணர், நாதஸ்வர இசையை அவர் கேட்கும்படி செய்யுங்கள். சுய நினைவு திரும்பும் என்று கூறினார்.

முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன்
தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 5 | 1 | 8 | 9 | | | 4 |
| 3 | 2 | | | | | | | |
| | | | | | | | | |
| 9 | | | | 2 | | 4 | | |
| | | 1 | | | | 8 | | |
| | | 7 | | 5 | | | | 3 |
| | | | | | | | | |
| | | | | | | | 5 | 7 |
| 8 | | | 6 | 7 | 4 | 1 | 9 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 5 | 2 | 4 | 7 | 6 | 8 | 3 |
| 2 | 3 | 8 | 6 | 1 | 5 | 9 | 4 | 7 |
| 7 | 4 | 6 | 9 | 8 | 3 | 2 | 1 | 5 |
| 6 | 8 | 7 | 3 | 9 | 1 | 4 | 5 | 2 |
| 4 | 5 | 2 | 7 | 6 | 8 | 1 | 3 | 9 |
| 3 | 9 | 1 | 5 | 2 | 4 | 7 | 6 | 8 |
| 8 | 2 | 9 | 1 | 5 | 6 | 3 | 7 | 4 |
| 1 | 7 | 4 | 8 | 3 | 2 | 5 | 9 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 7 | 9 | 8 | 2 | 1 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**காலை வேளை அமெரிக்க நகரில், கந்தசாமி காரில் தனது மனைவி, அம்மா எல்லோருடனும் சென்று கொண்டிருந்தார். நீண்ட நேரமாக அவர்களை ஒரு பொலிஸ் வாகனம் தொடர்ந்து கொண்டிருந்தது. கந்தசாமி அதைக் கவனித்துக் கொண்டே தொடர்ந்து காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.**

**சிறிது நேரத்துக்குப் பிறகு பொலிஸ் வாகனம், கந்தசாமியின் காரை முந்திக்கொண்டு சென்று, அவர்களது காரை இடைமறித்து முன் நின்றது. இறங்கி வந்த பொலிஸ், கந்தசாமியிடம் "குட் மோர்னிங் சார்.." என்றிட பதிலுக்கு கந்தசாமியும் "குட் மோர்னிங், ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டான். பொலிஸ், "நாங்கள் இருவரும், உங்கள் காரை அரை மணி நேரமாக கவனித்து வருகிறோம். ஆனால் நீங்கள் போக்குவரத்து விதிகளை மீறாமல், வேகக் கட்டுப்பாட்டை ஒரு மைல் கூட அதிகரிக்காமல், சக சாரதிகளை மதித்து காரை ஓட்டிய விதத்தை நாங்கள் பாராட்டுகின்றோம். அதனால், சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, உங்களைச் சிறந்த சாரதியாகத் தெரிவு செய்து, 10 ஆயிரம் டொலருக்கான இந்த காசோலையை அன்பளிப்பாகக் கொடுக்கிறோம் பெற்றுக் கொள்ளுங்கள்"–என்றனர்.**

**கந்தசாமி சந்தோசமாக ஒரு பெருமூச்சுவிட்டு விட்டுச் சொன்னார், "இந்த பணத்தை வைத்து எப்படியாவது லைசன்ஸ் கட்டாயம் எடுத்துடனும்" என்று. பொலி ஸார் ஒருமாதிரிப் பார்க்க, உடனே கந்தசாமியின் மனைவி "மன் னிச்சுங்க சார் தப்பா நினைக்க வேண்டாம். அவர் குடிச்சால் இப்படி உளறுவார்"–என்றார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமியின் காது கேட்காத அம்மா சொன்னார், "நான் அப்பவே சொன்னேன் கேட்டியா, திருட்டுக் காரை எடுத்து கிட்டு வராதை என்டு கேட்டியா, இப்ப எல்லோரும் பொலிஸில் மாட்டிகிட்டோம்.." அப்புறம் என்ன கந்தசாமிக்கு ஒரே திண்டாட்டம் தான்.**

படித்ததில் பிடித்தது



# வில்லியாக த்ரிஷா

தனக்கொன ஓர் இடத்தை தக்கவைத்து 11 வருடங்கள் கடந்தும் இன்றும் முன்னணி நாயகர்களுடன் நடித்து வருகிறார் த்ரிஷா. இந்த நிலையில் இவர் தற்போது தனுஷுடன் கொடி படத்தில் நடிப்பது அனைவரும் அறிந்ததே. படத்தில் அரசியல்வாதியாக நடிப்பதால் இதுவரை இல்லாத ஆக்ரோசமான கதாபாத்திரத்தை வெளிப்படுத்தி உள்ளாராம். கிட்டத்தட்ட ஒரு லேடி ரவுடியாகவே நடித்துள்ளாராம். இந்த தகவலைக் கேள்விப்பட்ட கோடம்பாக்கமே ஆச்சரியத்தில் உள்ளது. இத்தனை நாள்கள் அப்பாவிப் பெண்ணாக நடித்து வந்த த்ரிஷா அண்மைக் காலமாக அரண்மனை–2, நாயகி தற்போது கொடி என தொடர்ந்து அதிரடியான படங்களாகத் தெரிவு செய்து நடித்து வருகிறார்.

## செருப்பு தைப்பவரிடம் காட்ட வேண்டிய மரியாதை



1. செருப்பை கழட்டி உங்கள் கையால் எடுத்துக் கொடுங்கள். பிய்ந்த செருப்பை அவரை நோக்கி கழட்டி காலால் தள்ளுவது அவமரியாதை.
2. பேரம் பேசாதீர். தினமும் எத்தனை பிய்ந்த செருப்பு கிடைத்துவிடப் போகிறது என்று நினைக்கிறீர்கள்?
3. அவசியம் "நன்றி" தெரிவித்துவிட்டு வாருங்கள். அவர் செய்யும் தொழிலை எல்லாராலும் செய்ய முடியாது.

முகப்புத்தகத்தில் படித்ததில் பிடித்தது.

டேய் மச்சி என் கூட படிக்கும் போது கருங்காலி மாதிரி இருந்தவர்கள் எல்லாம் கிறீம் போட்டு பப்பாளி மாதிரி இப்ப இருக்கிறாங்களடா...




editing பண்ணத் தெரியாதவன் 4to edit பண்ண எப்படி இருக்கும். அது போல இருக்காளுங்க.. முகம் மட்டும் அமெரிக்கன் பிள்ளை மாதிரி பளபள என்று இருக்கும். கொஞ்சம் கீழ பார்த்தா இலங்கை பிள்ளைகள் மாதிரி இருக்கு.

LOL

ஒரே நேரத்தில்
ஒன்பது ரியாக்சன் கொடுப்பது
பெண்களின் குணம்..
ஒன்பதில், ஒன்னுமே புரியாமல்
தவிப்பது..
ஆண்களின் மனம்..

பாப்பா பாட்டு பாடுவோமா
தனித்துவ ...
"Online" ல் விளையாடு பாப்பா—நீ
"Offline" இருத்தல் ஆகாது பாப்பா
"Phone" ல் விளையாடு பாப்பா—ஒரு
"Tab" ஐயும் விடாதே பாப்பா !!

காலை எழுந்தவுடன் "Facebook"—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல "Status"
மாலை முழுதும் பல "Photos"—என்று
பழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா !!

"Like" பண்ணி உசுப்பேத்து பாப்பா-நல்லா
"Comment" பண்ணி கடுப்பேத்து பாப்பா
"Wifi" நமக்கு துணை பாப்பா-வேறு
செலவு வர மாட்டாது பாப்பா !!

**திருமணம் முடிந்த சிறிது காலத்தில் மனைவி தோசை சுடவா? என்று கேட்டாங்க... இன்று தோசை சுட வா! என்று அழைக்கிறாங்க. என்ன பண்றது.**



**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சி படிப்படியாக நிறைவேறும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** சாதுரியமாகச் செயற்பட்டு வளர்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**மிதுனம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பிள்ளைகளின் வழியில் ஆடம்பரச் செலவு செய்வீர்கள். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**சிங்கம்:** மறைமுக எதிரிகளால் தொல்லை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் ஆதரவு மனதில் நம்பிக்கை வளர்க்கும்.

**கன்னி:** திகைப்பு தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். புதிதாக வீடு, வாகனம் வாங்க யோகமுண்டாகும். போட்டி, பந்தயத்தில் வெற்றி பெற வாய்ப்புண்டு.

**துலாம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் [illegible] வாகனப் பயணத்தின் மூலம், இனிய அனுபவம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**தனுசு:** பின் விளைவு உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவு மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக் கனத்தைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். உறவினர் பாசமுடன் நடந்து கொள்வர்.

**கும்பம்:** திறமையைப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவு கிடைக்கும். கூடுதல் சொத்து சேர்க்கை பெற யோகம் உண்டு.

**மீனம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடின உழைப்பால் தொழில், வியாபாரத்தை சீர்படுத்துவீர்கள். பணத்தேவை அதிகரிக்கும். நண்பர்களுடன் பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 400 | 250 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 600 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | 600 | 650 |
| சீலா | 300 | 450 | 400 | 450 | 450 | 600 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 450 | – | – |
| கிளாக்கன் | 800 | 900 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 350 | 100 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 400 | 200 | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 250 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 200 | 250 | 300 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 350 | – | – |

## இது புதுசு



### சாறி புரோச்

பல வர்ண சாறி புரோச்சுகள் அறிமுகமாகியுள்ளன. விதவிதமான வடிவமைப்புகளில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 150 ரூபாவில் இருந்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## நாளை

**சித்திரை-14**

புதன்கிழமை 27.04.2016
திதி: பஞ்சமி மா.05.37 வரை
நட்சத்திரம்: மூலம்
பி.ப.05.06 வரை
ராகுகாலம்:
11.59-01.29 வரை
சுபநேரம்:
04.29-05.59 வரை

## முந்திரி பர்பி

**தேவையான பொருள்கள்:**


நெய்
– தேவையான அளவு
முந்திரி – 1 கப்
சோள மா – 1 கரண்டி
சீனி அரைக் கப்
தண்ணீர் – கால் கப்

**செய்முறை:**

முதலில் முந்திரி மற்றும் சோள மா சேர்த்து நன்கு பொடி செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஒரு சட்டியில் சீனி மற்றும் தண்ணீர் ஊற்றி, பாகு ஆகும் வரை நன்கு கொதிக்க விட வேண்டும். பின்பு அதில் அரைத்த முந்திரி பொடியைப் போட்டு, மித சுவாலையில் குறை வில் வைத்து 3-4 நிமிடம் தொடர்ந்து கிளறி விட வேண்டும்.

அவ்வாறு கிளறும்போது கலவையானது பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்போது, அடுப்பில் இருந்து இறக்கி, நன்கு மென்மையாகவும் வரை கரண்டி கொண்டு பிசைய வேண்டும். பின் ஒரு தட்டில் நெய்யைத் தடவி, அதில் அந்தக் கலவையை ஊற்றி பரப்பி, வேண்டிய வடிவில் வெட்டினால், சூப்பராக முந்திரி பர்பி ரெடி. விரும்பினால் வெட்டிய துண்டுகளின் நடுவில் முந்திரிகளை வைத்து அலங்கரிக்கலாம். இதனை காற்றுப்புகாத டப்பாவில் போட்டு ஒரு வாரம் வரை வைத்து சாப்பிடலாம்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 50 | 80 | 50 | 80 | 20 | 40 |
| கத்தரி | 60 | 60 | 60 | 60 | 80 | 50 | 60 | 20 |
| கரட் | 80 | 160 | 120 | 100 | 80 | 140 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 60 | 40 | 40 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 80 | 100 | 80 | 180 | 120 | 70 | 60 |
| பாகல் | 120 | 120 | 120 | 100 | 140 | 120 | 80 | 40 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 80 | 100 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 120 | 70 | 130 | 100 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 40 | 13 | 20 |
| தக்காளி | 80 | 120 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| புடோல் | 50 | 80 | 60 | 60 | 60 | 60 | 20 | 40 |
| கோவா | 60 | 80 | 70 | 80 | 60 | 100 | 60 | 45 |
| வெண்டி | 100 | 80 | 80 | 80 | 80 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 140 | – | 120 | 160 | 160 | 120 | – | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 160 | 120 | 140 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 40 | 30 | 40 | 10–20 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80–120 | 90 | 80 | 100 | 65 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 350 | 400 | 400 | 350 | 350 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 35 | 15 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 140 | 80 | 50 | 50 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 160 | 160 | 160 | – | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 250 | 350 | 400 | 250 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

# அழகிய முட்டை பொம்மை

முன் ஆயத்தம்.
2 முட்டையை அவித்து கொள்ளவும்.
கரட்டை வட்ட வடிவமாக வெட்டி கொள்ளவும்.
5 மிளகு.
மூக்கு வைக்க சிறிய கரட் துண்டை கூர்மையாக வெட்டிக் கொள்ளவும்.
செய்முறை.
அவித்த இரண்டு முட்டைகளையும் சிறிய குச்சி மூலம் ஒன்றாக சேர்க்கவும்.
தலை பகுதியில் பெரிய வட்டத்தை கீழும் சிறிய வட்டத்தை மேலும் வைத்து கரட் தொப்பி, மூக்கு என்பவற்றை வைக்கவும். பின்பு மிளகைக் கொண்டு கண், சட்டை பட்டன் என்பவற்றை வைக்கவும். வித்தியாசமான அழகிய முட்டை பொம்மை தயார்.
சாப்பாட்டு மேசையில் இது போன்றை அழகிய பொம்மையை செய்து வைத்தால் அழகாகவும் வரும் விருந்தினருக்கு வித்தியாசமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை மேற்கில் இளைஞர் கோஷ்டி அடாவடி

யாழ்ப்பாணம், ஏப்.26
கொழும்புத்துறை மேற்கில் இளைஞர் கோஷ்டி ஒன்று மேற்கொண்ட அடாவடியின்போது வீடு ஒன்றின் ஜன்னல் கண்ணாடிகள் கற்களால் எறிந்து உடைக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தால் அந்தப்பகுதி மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 12 மணியளவில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் சிலர் கணக்கர் சந்திப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குக் கற்களால் எறிந்துள்ளனர்.

வீட்டுக்காரர் கூக்குரலிட்டதும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். இளைஞர்கள் கல்லெறிந்ததால் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் சேதப் பட்டு நொறுங்கின.

அத்துடன் வீட்டில் முன்பாகவுள்ள கண்ணாடி மீன் தொட்டியும் உடைந்து சேதமடைந்தது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்புத்துறை மேற்கில் உள்ள மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

இது குறித்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-17)

## மரண அறிவித்தல்

### இளையவி சின்னவி



அளவெட்டி, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட இளையவி சின்னவி நேற்று (25.04.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோமதியின் அன்புக் கணவரும், வைத்தியநாதன், மனோகரன் (பொறியியலாளர்), சகுந்தலாதேவி, ஜெகதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தம்பிமுத்து (சட்டத்தரணி), காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கஜன் மற்றும் ஜெனி, கீதன், மலரவன், இந்துகா, வைராவிடன், இசானி ஆகியோரின் அன்புப் பேரனும், மேதாத்கிறிஸின் அன்புப் பூட்டனாரும், காலஞ்சென்ற வர்களான நாகமுத்து, இரத்தினம், அப்புத்துரை மற்றும் தர்மலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.
(ஜே/692)(11,17)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தையா

பிறப்பு 14 . 04 . 1934



இறப்பு 24 . 04 . 2016

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும், இல.56, அம்மன் கோயில் வீதி பண்டாரிகுளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா 24.04.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, கணபதிப்பிள்ளை ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பத்மலோஜினியின் அன்புக் கணவரும், செந்தூர் முருகன் (ஆசிரியர்), சேதுலிங்கம் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதேவி, உமாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகன், அபிலாஷ், அபிராமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.56, அம்மன் கோவில் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா
(V/16)
(11)
தகவல்:
குடும்பத்தினர்.

024 222 1715

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் இரத்தினவேலு (சின்ராசா)



வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரத்தினவேலு 23.04.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சொர்ணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகையாவின் அன்புச் சகோதரனும், இராசரட்ணம், பாலசுப்பிரமணியம், செல்வராஜா, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோமதி (சுவிஸ்), யோகச்சந்திரன் (சுவிஸ்), திலகவதி (பிரான்ஸ்), கலாவதி (ஆசிரியை - யாழ்./முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), புஸ்பமாலா (காணி சுவீகரிப்பு உதவியாளர் - நல்லூர் பிரதேச செயலகம்), Dr. விமலன் (றாகம வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (சுவிஸ்), இந்திரகுமாரி (சுவிஸ்), முரளிதரன் (பிரான்ஸ்), கோணலிங்கம் (அக்ஷா நகைக் கடை - யாழ்ப்பாணம்), Dr. சுதர்சினி (றாகம வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுஷா, அனுநிதன், அட்சயா, அபினேஷ், அபிஷேக், அஸ்மிகா, தாருகேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ஜே/658)
(11,18)

61, காரைக்காட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள்



### சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்

(பிரதமகுரு யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், நம்பிக்கை பொறுப்பாளர் - செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் , போஷகர் - கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை, ஆலோசகர் - ஸ்ரீ நாகேந்திரபீடம், பரம்பரைக்குருக்கள் - காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் )

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நகேந்திரக்குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள் (நா.பா) என்பவரும் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் (சாந்தன்) ஆகிய இருவரும் கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமாகினார்கள்.

பாலசுப்பிரமணியக்குருக்கள் காலஞ்சென்ற நாகேந்திரக்குருக்கள் அமிர்தாம்பிகை அம்மாவின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சங்கானை நாகேஸ்வர ஐயர் சுலோஷனா அம்மாவின் மூத்த மருமகனும் கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தஸ்வரூபக் குருக்கள், பாலசுப்பிரமணியக்குருக்கள் கௌரீஸ்வரியின் அன்பு மகனும் சண்டிலிப்பாய் ரஞ்சிதானந்தக் குருக்கள் கல்யாணியின் அன்பு மருமகனும் தபஸ்வினியின் அன்புக் கணவரும் சிவஸ்ரீ நல்லூர் தாசக்குருக்கள்(கொக்குவில்),சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக்குருக்கள் (மட்டக்களப்பு), சிவஸ்ரீ நா.பாலேந்திரக்குருக்கள்(கொழும்பு), மீனாம்பாள் காலஞ்சென்ற நாகேஸ்வரி அம்பாளின் பாசமிகு சகோதரரும், பெறாமகனும் , மருமகனும், சிவஸ்ரீ வல்லவேஸ்வரக் குருக்களின் சகலனும், சீதாலட்சுமி காலஞ்சென்ற வசந்தலட்சுமி மற்றும் மலர்ராஜினி, ஜெகதீஸ்வரி காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா ஆகியோரின் மைத்துனி, மைத்துனரும், பெறாமகன், மருமகனும் சிவஸ்ரீ ஸ்கந்தரூபக்குருக்கள்(காரைநகர்), சிவஸ்ரீ திருமதி சாந்தஸ்வரூபி, சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்(மலேசியா), அஜந்தரூபி, ஜெயந்தரூபி, காலஞ்சென்ற சாந்தஸ்வரூபன், பிரம்மஸ்ரீ பாலகணேசன், பாலமயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவசாமி ஐயர் மற்றும் பவளமல்லிகா (அரியாலை), காலஞ்சென்ற ராதா கிருஷ்ணசர்மா மற்றும் மீனாம்பாள் காலஞ்சென்ற ராமநாதசர்மா மற்றும் நாகேஸ்வரி (நல்லூர்), சிவஸ்ரீதாமோதரக்குருக்கள் - வல்லவாம்பிகை (நீராவியடி), சிவஸ்ரீரஞ்சிதானந்தக் குருக்கள் - கல்யாணி ஆகியோரின் சம்பந்தியும் சிவஸ்ரீ மங்களேஸ்வரக்குருக்கள் (அரியாலை), யசோதா, கிருஷ்ணவேணி, ஜெயபாலக் குருக்கள் (புத்தளம்), பிரம்மஸ்ரீ மாரிஸ்வர சர்மா(நீராவியடி), தபஸ்வினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மைத்துனரும் நாகேந்திரசர்மா, பாலேஸ்வரி, சிவசங்கரி, பிரகதீஸ்வர சர்மா, பிரதாபசர்மா, பாலகௌரி, கஜலக்ஷி, சுந்தரேச மணிகண்ட சர்மா, சபரீ கீர்த்தனா, சபரீகீர்த்திகா, சபரீசசர்மா, சதுஸ்டிகா ஆகியோரின் ஆசைமிகு பேரனும்,சிறிய பெரிய தந்தை,மாமனும் சிவஸ்ரீ கீர்த்திவாசக்குருக்கள் (ஒட்டு சுட்டான்), சிவஸ்ரீஜெயராஜக் குருக்கள்(சண்டிலிப்பாய்), சிவஸ்ரீசெல்வானந்தக் குருக்கள் (பருத்தித்துறை), கஸ்தூரி திவ்வியஸ்வரூபி, பிரம்மஸ்ரீ சனாதனசர்மா ஆகியோர் சாந்தஸ்வரூபனின் மைத்துனர், மைத்துனி ஆவார்கள்.

அன்னார்களது இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்,ஆலயநிர்வாக சபையினர், சுவாமிமார்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல.48,2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியரடி, யாழ்ப்பாணம்.
தகவல்:
021 222 1123
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளக்கஞ்சா கடத்தல் தலைமன்னாரில் பிடிபட்டது

யாழ்ப்பாணம், ஏப்.26

இந்தியாவில் இருந்து கடல் ஊடாகத் தலைமன்னாருக்குக் கடத்திவரப்பட்ட ஒரு தொகுதி கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட விசேட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகள் அடங்கிய குழுவினர், குறித்த கஞ்சாவை நேற்றுக் காலை கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.


இது தொடர்பில் பொலிஸார் கூறுகையில், 8 கிலோ 320 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா, பொதிகளாக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

தலைமன்னார் கடற்படையினரின் உதவியுடன் குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மன்னார் பொலிஸ் நிலையத்தின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப விசாரனைகளின் பின், கைது செய்யப்பட்ட நபர் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் கடற்பகுதியூடாகவே அதிகளவில் கஞ்சாப் போதைப் பொருள்கள் இலங்கைக்குள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவற்றைக் கடத்துபவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.



எனினும் கஞ்சாப்போதைப் பொருள் கடத் தல் தொடர்ந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4-56)



## கண்ணீர் அஞ்சலி





யாழ்வண் வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் **சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்** அவரது புதல்வன் **சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்** ஆகியோரின் அகால மரண மடைந்த செய்தி கோட்டு ஆழ்ந் த துயர் அடைகின்றோம். அன்னார்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்வண் வடகிழக்கு கொண்டடி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.**

## கண்ணீர் அஞ்சலி







தேவஸ்தான குருபரம்பரை சுந்தரம் ஐயாவின் பேரனும் கடந்த பத்து ஆண்டுகளாக எமது ஆலய நித்திய.நைமித்திய கிரியைகளை செவ்வனே நடத்தி வந்த

**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்**

அவரது மகன்

**பா. சாந்தஸ்வரூபக்குருக்கள்**

அவர்கள் இருவரும் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்ததுயர் அடைவதுடன் அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வ துடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயப் பொறுப்புரிமையாளர் சபை, காரைநகர்.**

## K.C.C.C யின் கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் ஆயுள் கால அங்கத்தவரான வைத்திய கலாநிதி இ. விமலனின் அன்புத் தந்தையார்

**ஆறுமுகம் இரத்தினவேலு**

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும்.**
(K.C.C.C &K.C.C.C.SC)

திருமதி

## சிவபாக்கியம் (குஞ்சரம்) கணபதிப்பிள்ளை (காரைநகர்)



காரைநகர் மேற்கு, சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் இல.56, கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை கடந்த (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.வைத்தியலிங்கம்-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான திரு.திருமதி சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கணபதிப் பிள்ளையின் அன்பு மனைவியும், இந்திராணி (லண்டன்), செல்வ ராணி (ஓய்வுநிலை ஆசிரியை, மன்னார்), தியாகலிங்கம் (லிட்டில் ஏசியா, வெள்ளவத்தை), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கணேசலிங்கம் (அமெரிக்கா), சுந்தரலிங்கம் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, முன்னாள் அதிபர், தம்பாட்டி அ.த.க.பாட சாலை, அதிபர், யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்), ஜெயராணி (லண்டன்), நந்தகுமார் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அம்பல வாணர் மற்றும் பஞ்சநாதன் (ஓய்வு நிலை கணக்காளர், மன்னார்), பத்மாவதி, சிவலிங்கம் (சிவா, என்டர்பிறைசஸ், நுவரெலியா), இந்திராணி, தெய்வ மாலினி, இராஜவ ரோதயம் (லண்டன்), சந்திரகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும், சிவசக்தி, சிவ ரூபி, குணசீலன், சத்தியசீலன், கரன், காண்டீபன், கலைப்பிரியா, சுதன், சசிதரன், பிரியதர் சினி, சிவரூபன், சிவரஞ்சன், சிவகாந்தன், ஜஸ்வினி, ஷாலினி, ஷர்மிளா, யசோதரன், திருமகள், சுரேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 56, கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள இல்லத்தில் **எதிர்வரும் (28.04.2016) வியாழக் கிழமை** காலை 07.00 மணிக்கு நடைபெற்று காலை 09.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**56, கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 222 9909, 077 628 2586**

**தகவல்:**
**க. சுந்தரலிங்கம் (அதிபர், யா/ வியாவில் சைவ வித்தியாலயம்).**

## கண்ணீர் அஞ்சலிப் பூக்கள்

ஜனனம் 1954 . 10 . 28



மரணம் 2016 . 04 . 23



ஜனனம் 1990 . 12 . 27

**அமரர் நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள்**

**அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்**

கடந்த 23.04.2016 எதிர்பாராத விதமாக அகாலமரணமடைந்த எமது சம்மந்தியாகிய சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் - பாலசுப்பிரமணியக்குருக்களும் எமது மருமகனாகிய பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக்குருக்கள் ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவர்களின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**சண்டிலிப்பாய்.**

**திரு திருமதி சிவஸ்ரீ ச.ரஞ்சிதானந்தக்குருக்கள் கல்யாணி அம்மா குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி பக்தகௌரியம்மா இராதாகிருஸ்ணன்**

**தோற்றம்** 29.09.1943 — **மறைவு** 27.03.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாயக் கிழமை எமது இல் லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

54/4, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### நடராசா முருகையா

பிறப்பு: 1936 . 02 . 18



இறப்பு: 2016 . 04 . 25

திருநெல்வேலி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 19, வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முருகையா நேற்று (25.04.2016) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் பாசமிகு கணவரும், கலா, தேவி, ஸ்ரீ (லக்சன் வீடியோ), சந்திரா, ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான பாக்கியராசா, ஜீவானந்தம், ஐங்கரன் மற்றும் கீதாஞ்சலி, ராணி ஆகியோரின் அன்பு மாமனும், ஜெகன், நவநீதன், தயாளினி, கபிலன், பவித்திரா-நகுலன், லக்ஸன், கிரிஷாந்தி, யசிகா, டில்சாந், வசந்தன்-வைஷ்ணவி, ஜீவிதா-மணிதீபன், பிரசாந், சிலோஜன், சிலோஸ்னன், சிலக்ஷா, டினேஷன், சோபிகா ஆகி யோரின் பேரனும் தியாரா, பிரதீசா, ரிசானா, சபினா ஆகி யோரின் பூட்டனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016)** செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 19, வெங்கடேசன் வீதி,**
**யாழ்ப்பாணம். 076 642 7356**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி நல்லம்மா(கமலம்)குலேந்திரன்



கட்டுவன் தென்மயிலையைச் சேர்ந்தவரும் தற்போது கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமான திருமதி நல்லம்மா குலேந்திரன் 25. 04.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குலேந்திரனின் அன்பு மனைவியும் ஷகிலா (லண்டன்), சதீஸன் (பிரான்ஸ்) ஆகியோரது பாசமிகு தாயாரும் சிவகுமார் (லண்டன்), சுகன்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நாகம்மா, தருமராசா, வேலாயுதம், கந்தசாமி (Telecom-Colombo), ஜெயராசா (பிரான்ஸ்), தவராஜா (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி (கனடா), இராசேந்திரம் (கனடா), வரதராசா (ஜேர்மனி), சந்திரா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும் ஆகாஸ், அபிசா, சாய்அபினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.04.2016 வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**சு.குலேந்திரன்** (கணவர்)
**ஆ.யோகராசா** (மைத்துனர்)
செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## சாரத்தை உயர்த்திய இளைஞருக்கு எதிர்வரும் 23ஆம் திகதி தண்டனை

சிறுமிக்கும், குடும்பப் பெண் ஒருவருக்கும் முன்பாகத் தான் உடுத்தியிருந்த சாரத்தைத் தூக்கிய இளைஞன் ஒருவர் நீதிமன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். அவருக்கான தண்டனை எதிர்வரும் 23 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. பொலிஸார் குறித்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். 4 வயதுச் சிறுமிக்கும், 33 வயதுடைய தாய் ஒருவருக்கும் சுமார் 19 வயதுடைய இளைஞன் தனது சாரத்தை உயர்த்திக் காட்டியுள்ளார் என்று அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர் நீதிமன்றில் நேற்று குற்றத்தை ஒப்புக்கொண் டார். அதனையடுத்து அவர் குற்றவாளியாக நீதிமன்றால் அடையாளப்படுத்தப்பட்டார். அதற்கான தண்டனையே எதிர்வரும் 23 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. (ற-ஐ-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி சுந்தரலிங்கம்



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு விளானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சுந்தரலிங்கம் நேற்று (25.04.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செனகரத்தினம்-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் சர்வேஸ்வரியின் அன்புச் சகோதரியும் சந்திராதேவி உமாகாந்தன் (கனடா), ஈஸ்வரகாந்தன் (ஜேர்மனி), சிவரூபன் (கனடா), மதிவதனா, பாஸ்கரன் (இத்தாலி), காலஞ் சென்ற கலாநிதி ஆகியோரது பாசமிகு தாயாரும் மகேந்திரா, அருள்நிறைச்செல்வி, மல்லிகாதேவி, ஜெயந்தி, பாலச்சந்திரன், தனுஜா.தேவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் தெற்கு.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

### திருமதி நீற்றா மெற்றில்டா மரியநாயகம்



யாழ்மண் குருநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மருதானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா மெற்றில்டா மரிய நாயகம் நேற்று (25.04.2016) காலமானார்.

அன்னார் A.R.M. இராஜசிங்கம் எலிசபெத் பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு.திருமதி. சூசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மரியநாயகத்தின் நேச மனைவியும், காலஞ்சென்ற டோரஸ், காலஞ் சென்ற டொறத்தி (கனடா), காலஞ்சென்ற அன்ரன் (கனடா), மற்றும் ஜோசப்பின் பெனடிக்ரா, அருட்பணி அல்பன் இராஜசிங்கம் (மன்னார் மடு மாதா குருமடம்), யூஸ்ரஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீற்றா புவிராஜசிங்கி, காலஞ் சென்ற குருதாசன் மனவல் (கனடா) மற் றும் றாஜினி (கனடா), காலஞ் சென்ற S.A.பெனடிக்ற், காலஞ் சென்ற சந்திரா ஆகியோரின் நேச மைத்துனியும், யூலியா (கனடா), அன்ரனற் (கனடா), பெனற்ரா, ஜெமிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும், டோமினிக், சகுந்தலா (கனடா), சகாயராஜ், சாளினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 27ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலி வழிபாடு செய்து புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து புனித மரியாள் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அவரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 19, சென்ஜேம்ஸ் வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சகோதரர்கள்.**

### குமாரசாமி கலொக் விசுவநாதன்



மானிப்பாயினைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஓமான் மற்றும் இலங்கை கடற்படை அதிகாரியுமான குமாரசாமி கலொக் விசுவநாதன் நேற்று (25.04.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகியின் அன்புக் கணவரும்காலஞ்சென்ற கலொக் குமாரசாமி- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் துரைஐயா-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சண்முகநாதன் மற்றும் புவனேஸ்வரி, கணநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிரிதரன், கிருபா, யசிதரன், தபோதரன் ஆகியோரது அன்புத் தந்தையும் சுஜீவனி, ஜயானந்தன், லோஜினி, ஆரணி ஆகியோரின் மாமனும் கவிஷ், கேஷினி, ஈத்தன், ஆகாஷ், கிரிஷானா, அபினேஷ், மினோலி, அர்ஜீன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.04.2016 வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீதி,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**077 248 4381**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் நடராசா(நாடோடி)



தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நடராசா (நாடோடி) 25.04.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமைநண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோப்பு**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 175 4488**

"சர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"
சங் 116:15

### திருமதி கனகேஸ்வரி (மரியா) நவரட்ணம்

அன்னை மடியில் 25 . 03 . 1934



ஆண்டவர் அடியில் 24 . 04 . 2016

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி (மரியா) நவரட்ணம் 24.04.2016 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் நவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை - தில்லையம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்ற யோகநாதன், அழகேஸ்வரி, கயிலநாதன் (பிரான்ஸ்), இராமநாதன் (கனடா), தில்லைநாதன், காலஞ் சென்ற ஜெகநாதன், சர்வேஸ்வரி (லண்டன்), அற்புதநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சின்னமணி), காலஞ்சென்ற வசந்தா ஆகியோரின் மைத்துனியும், குகபாலன் (பென்ஜமீன்-தேவ ஊழியர். Torondo Harvest Missionary Church- Canada), சிவரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா, அமிர்த நாயகி (யூலியாடலா-கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிலானி (கனடா), வைஷ்ணவி, சுஜீவன் (பிரான்ஸ்), பிரணவன் (தரம் 11 மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத் துக்காக நீர்வேலி சீயாக்காடு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## குற்றப்புலனாய்வு

காவற்றுறை நீதிவான், வித்தியா வழக்கில் சந்தேகநபர் ஒருவரின் மனைவியுடன் தொடர்பைப்பேணுவது எதற்காக என்றும் கேட்டு அந்த அதிகாரியை எச்சரித்துள்ளதோடு விளக்கம் கோரியுள்ளார்.

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

வித்தியா வழக்கில், மேலும் ஒரு வரைக் கைது செய்யவுள்ளதாகவும், அதற்கு நீதிவான் உத்தர விட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி அனுமதி கோரியுள்ளார்.

எனினும் தாம் அது தொடர்பில் உத்தரவு எதுவும் விடுக்காத நிலையில், என்ன அடிப்படையில், எதற்காகத் தாம் கூறியதாகச் சட்டமா அதிபர் திணைக்ளத் திடம் அவ்வாறு கூறி அனுமதி கேட்கப்பட்டது என்று நீதிவான் அந்த அதிகாரியைக் கேட்டுள்ளார்.

அதற்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி பதிலளிக்கவில்லை. இதனால் திறந்த நீதிமன்றில் வைத்து அந்த அதிகாரியை நீதிவான் கேள்விகளால் துளைத்தெடுத்தார். அதற்கு அந்த அதிகாரி சமாளிக்கும் வகையில் பதிலளிக்க முற்பட்டபோதும், அதற்கும் எச்சரிக்கை விடுத்த நீதிவான், குறித்த விடயத்துக்கு உரிய விளக்கமளிக்கவேண்டும் என்றும், தவறின் பொலிஸ்மா அதிபரிடம் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டு, அவரிடம் விளக்கம் கேட்க வேண்டிவரும் என்றும் கடுமையாக எச்சரித்தார்.

அதுமாத்திரமன்றி, வித்தியா வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள, முதல் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களில் ஒருவரின் சகோதரனின் மனைவியுடன் குறித்த குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி தொடர்புகளைப் பேணுவது எதற்காக? என்ன நோக்கில் அவ்வாறான தொடர்பு பேணப்படுகின்றது என்றும் நீதிவான் கேள்வியெழுப்பியுள்ளார்.

குறித்த வழக்கில் விளக்கமறியலில் உள்ள சந்தேகநபரொருவர், கைதாக முன்னர் வங்கியில் நகை ஒன்றை அடைவு வைத்துள்ளார் என்றும், அதனை மீட்கக் குறித்த சந்தேகநபரிடம் கையெழுத்துப் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும், அந்தச் சந்தேகநபரின் உறவினர் ஒருவர் நீதிமன்றில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

எனினும் குறித்த நகை திருடப்பட்ட நகையா அல்லது அவர்களது நகைதானா என்பது பற்றி விசாரிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டு கையெழுத்துப் பெற அனுமதி மறுத்துவிட்டார்.

குறித்த சந்தேக நபர்கள் பற்றிய மரபணுப் பரிசோதனை அறிக்கை இதுவரை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற விடயம் சட்டத்தரணிகளால் கேட்கப்பட்டபோது, அந்த நிறுவனத்தின் அதிகாரியை நீதின்றில் முற்படுமாறு ஏற்கனவே கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வழக்கில் 10 சந்தேகநபர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். குறித்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான, கே.சுகாஸ், வி.மணிவண்ணன், ஏ.றஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த சம்பவம் நடந்து அடுத்த மாதம் ஒரு வருடமாகிறது. ஆனால் அதுபற்றிய விசாரணையில், மரபணுப் பரிசோதனை அறிக்கை கிடைக்காமை உட்பட விசாரணைகள் இன்னும் முடிவுறாத நிலையிலேயே காணப்படுகின்றது. சந்தேக நபர்கள் வழமைபோன்று பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-வ-4)

## தடையேதுமின்றித்

2012 ஆம் ஆண்டிலிருந்து சிறி சம்போதி மகா விகாரை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குச் சீருடையினரும் முழு ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

விகாரை அமைக்கப்பட்டு வரும் காணியின் உரிமையாளர் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் நடமாடும் சேவையில், தனது காணியில் அடாத்தாக விகாரை அமைக்கப்பட்டுவருவது தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்ட மத்திய காணி அமைச்சின் மேலதிக செயலாளரும், காணிக் கொள்கைகள் உதவிப் பணிப்பாளரும், அந்தக் காணி மணிவண்தாஸுக்கு உரியது என்று உறுதிப்படுத்தியதுடன், அடாத்தாக விகாரை அமைக்கும் பணிகளை நிறுத்துமாறும் பணித்திருந்தனர்.

ஆனால் இதன் பின்னரும் விகாராதிபதி விகாரை அமைக்கும் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, தனியார் காணியில் அடாத்தாக அமைக்கப்படும்விகாரையைநேரில்பார்வையிடவுள்ளதாகத் தெரிவித்தபோதும், அவர் இதுவரை சென்று பார்வையிடவுமில்லை. இந்த நிலையில், நடைமுறைகளுக்கு முரணாகச் செயற்படும் விகாராதிபதிக்கு எதிராக எந்தவொரு தரப்பினரும் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து-வ-5-102)

## மின்வேலியில்

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நிறைமாதக் கர்ப்பவதியின் கணவரான வில்வராசா விஜயசீலன் (வயது - 29) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு குளத்தில் மீன் பிடிப்பதற்குச் சென்ற குறித்த இளம் குடும்பஸ்தரும், அவருடைய நண்பரும், குடிதண்ணீர் எடுப்பதற்காக, குளத்துக்கு அருகிலுள்ள வயல் கிணற்றுக்குச் சென்றுள்ளனர். இதன்போது அந்தக் கிணற்றைச் சுற்றி அமைக்கப்பட்ட மின்சாரக் கம்பியில் அகப்பட்டே குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இதனை அவதானித்த உயிரிழந்தவருடன் கூடச் சென்ற அவரின் நண்பர், வயலிலும் மின்சார வேலி அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற காரணத்தினால், எங்கும் ஓடாது அங்கேயே இருந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுக் காலையே தகவல்கள் உறவினர்களுக்கும், பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கே. அமிர்தலிங்கம் ஆகியோர் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருட்டு மின்சாரம் பெற்று சட்டவிரோதமான முறையில் காட்டு பன்றிக்கு வேலி அமைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, வவுனியா பொலிஸார் ஒருவரைக் கைது செய்ததுடன் மேலும் ஒருவரை தேடி வருவதாகத் தெரிவித்தனர். (து-வ-21-402)

## மாங்குளத்தில்

பரிதாபகரமாக உயிரிழந்தார்.

குறித்த விபத்தில் முல்லைத்தீவு பனிச்சங்குளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் ஜெயமோகன் (வயது -56) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஏ-9 வீதியில் மாங்குளம் மகா வித்தியாலயம் முன்பாக நேற்றையதினம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனம் ஒன்று சைக்கிளில் பயணித்தவர் மீது மோதியது. இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் மேலதிக விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய ஹைஏஸ் சாரதியைக் கைது செய்த மாங்குளம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-வ-101)

## காணாமற்போன

நேற்று இடம்பெற்ற காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதல் நாள் அமர்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இறுதிப் போரின்போது, முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து இராணுவத்தினரிடம் தங்களுடைய [illegible] ததாகவும், [illegible] ஏற்றிக்கொண்டு செல்லும்போது, தாம் கண்ணால் கண்டதாகவும், ஆனால் அதன் பின்னர் எங்கு தேடியும் தமது உறவுகள் கிடைக்கவில்லை என்றும் நேற்றுக் கிளிநொச்சியில் பல உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும், தமக்கு எந்தவிதமான உதவிகளும் வேண்டாம், எமது உறவுகளே வேண்டும் என்றும், ஆணைக்குழுவின் தலைவர் முன்னிலையில் உறவினர்கள் கையெடுத்துக் கும்பிட்டுக் கண்ணீர் விட்டனர்.

இவ்வாறு கண்ணீர்விட்டுக் கதறிய மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, உங்களுடைய உறவினர்கள் காணாமற்போனமைக்கு காரணமானவர்கள் கட்டாயமாகத் தண்டனைக்கு உட்படுத்தப் படுவார்கள். காணாமற்போன உறவினர்கள் உயிருடன் இருக்க வேண்டும். அதற்கு உங்களுடன் நானும் இறைவனை மன்றாடுகின்றேன் - என்றார். (து-வ-ரி3-21)

## காங்கேசன்

அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேரில் சென்று பார்வை யிட்டிருந்தார்.

இதனையடுத்து இடம்பெற்ற கலந்துரையாடலில், வடக்கு மாகாண அரசினால் மூன்று நிபந்தனைகள் முக்கியமாக முன்வைக்கப்பட்டன. சுண்ணக்கல் அகழ்வு ஒருபோதும் மேற்கொள்ளப்படக்கூடாது. இங்கே அகழமாட்டோம் என்று தெரிவித்துவிட்டு, வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் அகழ்வு செய்யக் கூடும். எனவே சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறாது என்ற உறுதி மொழி வழங்கப்பட வேண்டும்.

காங்கேசன்துறை தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படும்போது, வலி.வடக்கைச் சேர்ந்த இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதற்கு அடுத்ததாக யாழ். மாவட்ட இளைஞர்-யுவதிகளுக்கு வேலை வாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு அடுத்து வடக்கு மாகாண இளைஞர் - யுவதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இதன் பின்னரே வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கொடுக்க முடியும்.

எதிர்காலத்தில் காங்கேசன்துறை தொழிற்சாலை பொதுமக்கள் தனியார் பங்களிப்புக்குக் கொடுக்கப்படுமாக இருந்தால், இது தொடர்பில் பகிரங்க விளம்பரப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் வடக்கைச் சேர்ந்த முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும், என்ற நிபந்தனைகளை முன்வைத்ததாக வடக்கு மாகாண சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் இணக்கம் தெரிவித்ததாகவும், இந்த விடயங்களை உள்ளடக்கிய எழுத்துமூல ஒப்பந்தம் மேற்கொண்ட பின்னரே, வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று தெரிவித்ததற்கும் அமைச்சர் ரிசாத் இணங்கியதாகவும் வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் குறிப்பிட்டார்.

சுண்ணாம்புக் கல்லையும், களி மண்ணையும் அதிகூடிய வெப்பநிலையில் உருக்கிப் பெறப்படும் கலவையான கிளிங்கரை காங்கேசன்துறைக்கு இறக்குமதி செய்து, அதனுடன் ஜிப்சத்தைக் கலந்து சிமெந்தாக உருவாக்கிப் பொதி செய்யும் நடவடிக்கையே, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் கேள்வி எழுப்பியபோது, அது இன்றே (நேற்றே) ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இந்தத் தொழிற்சாலைக்கான ஆலோசனை நிபுணர்கள் இருவரை (முன்னாள் அதிகாரிகள்) நியமித்துள்ளேன் - என்றார்.

மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், மாவட்டச் செயலக அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், த. சித்தார்த்தன், இ.அங்கஜன் ஆகியோரும், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜி[illegible], [illegible]கஜதீபன், வே.சிவயோகன் [illegible]ரும் கலந்துகொண்டனர். (து-வ-5-101-106)

## ரி.ஐ.டியினரின்

தலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் ராம், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலமொன்றைப் பெறுவதற்காகவே அவர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, திருக்கோவில் தம்பிலுவில் பகுதியில் வைத்து நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த பொலிஸ் சீருடையை ஒத்த சீருடை அணிந்த ஒருவரும், மேலும் இருவரும் ராமைக் கடத்திச் சென்றனர் என்று திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் அவரின் மனைவியால் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் அம்பாறை மாவட்ட தளபதி கேணல் ராம் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 2013ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (து-வ-சி)

## சிமெந்து

துக்குக் கொண்டு செல்லப் பட்டு, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறு வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

காங்கேசன்துறை தொழிற் சாலையை அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேரில் சென்று பார்வை யிட்டிருந்தார். இதன் பின்னர் நேற்று மதியம் உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்திருந் தார். இதன்போது உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக நேர் காணலிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை யிலிருந்து, அதன் இயந்திரங்கள் இரும்புக்காக வெட்டிக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. கடந்த காலங்களில், இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அத்துடன் பல இயந்தி ரங்களும் காணாமற்போயுள்ளன.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரின் கவனத் துக்குக் கொண்டு செல்லப்படும். அவர் கள் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனை யார் களவாடியிருந்தாலும், அவர் களைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு இதனைக் களவாடிய வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், இவற்றை விற்றுப் பணமாக்கியிருந்தால், அந்தப் பணம் மீளப் பெறப்பட்டு இந்தத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் - என்றார் அமைச்சர் ரிசாத். (து-வ-5)

## பெற்றோல்

தாமதம் ஏற்பட்டதால், பெற்றோலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. தற்போது கப்பல் மூலம் பெற்றோல் போதியளவு வந்து சேர்ந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து முத்து ராஜ வலவில் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்திலிருந்து நேரடியாக குடாநாட்டுக்கு பவுசர் மூலம் பெற்றோல் கொண்டு வரப்படுகின்றது. சகல பெற்றோல்விற்பனை நிலையங்களுக்கும் பெற்றோல் தாராளமாக விநியோகிக்கப்படும் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் வடபிராந்திய அலுவலக வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் இன்று முதல் நுகர்வோருக்கு கட்டுப்பாடின்றிப் பெற்றோலை வழமையாக விநியோகிக்க முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால், நேற்று ஆயிரத்து 600 லீற்றர் வீதம் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. நுகர்வோர் முண்டியடித்து பெற்றோலைப் பெற்றுக்கொண்டதால், சில பெற்றோல் விற்பனை நிலையங்களில், அவை நேற்று மாலையுடன் முடிந்து விட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (து-வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியனானது பிரதேச செயலகங்களின் கரப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 26
யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கோப்பாய் பிரதேச செயலக அணி தொடர்ந்தும் தனது ஆதிக் கத்தை வலுவாக நிலைப்படுத்தியது. இதனால் இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்கள் முறையே 25:18, 25:23 என்ற புள்ளிகள்



அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலகத்தின் வசமாக முடிவில் அந்த அணி 3:0 என நேர்செற்கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-108-422)

# அரையிறுதியில் கிண்ணியா

யாழ்ப்பாணம், ஏப். 26
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணியா லீக் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.
தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தக் காலிறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் கிண்ணியா கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் கால்பந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது. இதில் கிண்ணியா கால்பந்தாட்ட லீக் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கிண்ணம் வென்றது யங்கம்பன்ஸ் கலைவாணியின் கால்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 26
தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி சம்பியனானது.
கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது. இதில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. தொடராட்ட நாயகனுக்கான விருதை கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியின் குகரதன் தனதாக்கினார்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியலாய அதிபர் இரா.சிறிநடராசாவும் கௌரவ விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற செயலாளர் பிரசாந்தும் ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய யாழ். மாவட்ட இணைப்பாளர் சி.திருக்குமாரனும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் மா.நவநீதமணியும் வடமாரட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் வேதாபரணமும் கலந்த கொண்டனர். (ம-23)

# தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 26
யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனானது.
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதிய இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:16, 25:22, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 26
**நாமகள் வி.கழகத் தொடர்**
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.
**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து அல்இக்பால் அணி மோதவுள்ளது.
**இமையாணன் மத்தியின் தொடர்**
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் புதுத்தோட்டம் சுடரொளி வி.கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# கில்லறி வி.கழகம் காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 26
எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சாவற்கட்டு கில்லறி அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி அணியை எதிர்த்து கண்டி ரெட் லயன்ஸ் அணி தாழ்வுபாடு ஆயர் இராயப்பு ஜோசெப் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மோதுவதாக இருந்தது. ஆனால் கண்டி ரெட் லயன்ஸ் அணி ஆட்டத்தில் பங்கு பற்றாமையால் சாவற்கட்டு கில்லறி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

# றோயல் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 26
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணி வெற்றிபெற்றுள்ளது.
நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஐக்கியம், உதயசூரியன் அணிகள் இமையாணனின் தொடரில் முன்னேறின

கரணவாய், ஏப். 26
இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மற்றும் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.
**ஐக்கியம் - சரஸ்வதி**
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின. பரபரப்பாக இடம்பெற்ற முதல்பாதியாட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் அரியாலை ஐக்கிய அணியின் பின்கள வீரர் தமது கோல் பகுதிக்குள் வைத்து விதிகளுக்கு முரணாக விளையாடியமையால் எதிரணியினருக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதை யோகேஸ் கோலாக மாற்ற [illegible] யின் ஆதிக்கத்துடன் [illegible] பாதி. இரண்டாவது பாதியின் 8ஆவது 17 ஆவது நிமிடங்களில் ஐக்கியத்தின் சார்பாக அடுத்தடுத்து இரு கோல்கள் பதிவாக முடிவில் 2:1 என்று வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.



**பாரதி - உதயசூரியன்**
[illegible] இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் [illegible] பாரதி விளையாட்டுக் கழகமும் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் எவையும் பதிவாகாமலேயே இரு பாதிகளும் ஓடி மறைய சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் சென்றது வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பியனானது றோயல் அணி

யாழ்ப்பாணம், ஏப். 26
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் றோயல் அணியே சம்பியனானது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

சிறந்த வீரனாக ஊரெழு றோயல் அணியின் நிதர்சன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக பலாலி விண்மீன் அணியின் டேமியன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக மன்னார் கில்லறி அணியின் சரண் தெரிவானார்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட், கௌரவ விருந்தினரர்களாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை, வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் இளம்பிறையன், யாழ். மாவட்ட விளை யாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)



## சில்வா பாதுகாப்பாக உள்ளார் இங்கிலாந்துத் தொடர் சந்தேகமே

பந்து தலையைத் தாக்கியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கௌசால் சில்வா இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் கலந்து கொள்வாரா இல்லையா என்பது தொடர்பாக இன்னும் சில தினங்களில் தீர்மானிக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை அணி அடுத்த மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்காகத் தற்பொழுது பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. அவ்வாறு கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்ட பொழுது சந்திமல் அடித்தாடிய பந்து சில்வாவின் தலையைப் பதம் பார்த்தது. இதையடுத்து அவர் ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார். அவரது தலையில் ஸ்கான் செய்து பார்த்ததில் அவருக்கு பெரிதான காயங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. இதையடுத்து சில்வா இன்று வீடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் இங்கிலாந்துத் தொடரில் அவரை அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து இன்னும் முடிவாகவில்லை. இது தொடர்பான அறிவிப்பு சில தினங்களில் இலங்கை கிரிக்கெட் சபையிடம் இருந்து வெளிவரும். (ம)

## றொனால்டோவை முந்திய பார்சிலோனாவின் சுவாரஸ்

நடப்பு வருடத்துக்கான லா லிகா தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர்களின் பட்டியலில் றொனால்டோவை முந்தியுள்ளார் பார்சிலோனாவின் சுவாரஸ். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் ஸ்போர்டிங் டி ஜிஜோன் அணியை எதிர்கொண்டது பார்சிலோனா. இந்த ஆட்டத்தில் பார்சிலோனா 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. பார்சிலோனா சார்பாக சுவாரஸ் 4 கோல்களைப் பதிவு செய்தார். இந்த நான்கு கோல்களுடன் சேர்த்து அவர் நடப்பு வருடத் தொடரில் இதுவரை முடிந்த ஆட்டங்களில் ஒட்டுமொத்தமாக 34 கோல்களைப் பதிவு செய்து முதலிடத்தில் உள்ளார். 31 கோல்களுடன் றொனால்டோ இரண்டாவது இடத்தில் உள்ளார். (ம)






## ஜேர்மன் கிண்ணம் கெர்பரிடம்

ஜேர்மன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஏஞ்சலிக் கெர்பர் கிண்ணம் வென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஜேர்மன் வீராங்கனைகளான ஏஞ்சலிக் கெர்பர், லாரா சிஜிமண்ட் பலப்பரீட்சை நடத்தினார்கள். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர் தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 6:0 என்ற கணக்கில் கைப்பற்றியதையடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றார். இந்த ஆண்டில் கெர்பர் வென்ற 2ஆவது கிண்ணம் இதுவாகும். (ம)

## லூசியா இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 26
மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். லூசியா அணி வெற்றிபெற்றுள்ளது.

தொடர் ஜோசவ்வாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. கடந்த சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தேவன்பிட்டி சென்.சேவியர் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூசியா அணி மோதியது. இதில் பள்ளிமுனை சென்.லூசியா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வென்றது மகாத்மா

யாழ்ப்பாணம், ஏப். 26
தெல்லிப்பழை நாமகள் வி.கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டங்களில் அராலி ஏ.எல். அணியை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கிலும், அராலி பாரதி அணியை எதிர்த்து சாவற்கட்டு மாகாத்மா அணி 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றன. (ம-23)




## வீரர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பொறுப்புக்களை எடுத்துக் கொள்ள வேண்டும் —டோனி




வீரர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலும் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார் புனேயின் தலைவரான டோனி.

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் அடைந்த தோல்வியின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் - புனே அணியின் தொடர்ச்சியான தோல்விக்கு எந்த ஒரு சாக்குப் போக்கும் சொல்லத் தயாராக இல்லை. வீரர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலும் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும். சுழற்பந்தை எளிதில் எதிர்கொள்ள முடியாது என்றே நினைத்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. பவர் பிளே முடிவடைய முன்னர் ஒரு சில பவுண்டரிகளைக் குறைத்திருக்கலாம். இந்த தொடரில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால் பந்து வீச்சில் முன்னேற்றம் வேண்டும். முருகன் அஸ்வின் புதிய வீரர், அவர் சில விடயங்களைச் சிறப்பாகக் கையாள வேண்டும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டேலின் துடுப்பாட்டம், பும்ராவின் வேகம்; புரட்டிப் போட்டது பஞ்சாப்பின் படையை



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பஞ்சாப்–மும்பை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. மும்பையின் தலைவரான ரோகித் ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திரும்பினார். பார்திவ் பட்டேலுடன் இணைந்தார் ராயிடு. மேலதிக இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது மும்பை. இடது, வலது இணைப்பாட்டம் நிலைபெற பஞ்சாப்பின் பந்துவீச்சாளர்கள் தடுமாறவே செய்தனர். ராயுடுவின் ஆட்டத்தில் இருந்த விறுவிறுப்புத்தன்மை பட்டேலின் ஆட்டத்தில் ஆரம்பத்தில் இல்லையென்றாலும் ஓட்டமெதனையம் பெறாத நிலையில் முதலாவது இலக்கு இழந்ததையும் வைத்துப் பார்க்கின்றபோது அவரது இன்னிங்ஸை ஏற்கத்தான் வேண்டும். மறுமுனையில் 31 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ராயுடு. பட்டேலின் அரைச்சதம் 41 பந்துகளில் பதியப்பட்டது. இணைப்பாட்டமாக 137 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 65 ஓட்டங்களுடன் ராயுடுவை இருக்கைக்குத் திருப்பினார் அக்சர் பட்டேல். தொடர்ச்சியான பவுண்டரிகளைப் பதிவுசெய்தாலும் பட்லரால் முடிந்தது 24 ஓட்டங்களே. பத்தே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பொலார்ட். இதற்காக அவர் 9 பந்துகளை எடுத்துக் கொண்டார். 81 ஓட்டங்களுடன் பட்டேலின் இன்னிங்ஸை நிறைவுக்குக் கொண்டு வந்தார் ஜோன்சன். முடிவில் மும்பை 189-6.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக மொகிற் சர்மா 3 இலக்குகளையும், சன்டீப் சர்மா, ஜோன்சன், அக்சர் பட்டேல் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது பஞ்சாப். மும்பையைப் போன்று ஆரம்பத்திலேயே இலக்குச் சரிவு ஏற்படாவிட்டாலும் பவுண்டரிகள் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு மிகையாக இல்லை. அணியின் ஓட்டங்களின் எண்ணிக்கை 20ஆக இருந்தபொழுது ஆட்டமிழந்தார் முரளி விஜய். ஆனால் அதற்குள்ளும் 19 ஓட்டங்களைக் குவித்து விட்டார். 7 ஓட்டங்களுடன் வோக்ராவை வெளியேற்றினார் பும்ரா. இந்த ஏழு ஓட்டங்களுக்காக வோக்ரா 11 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். ஓர் முனையில் இலக்குச் சரிவு. மறுமுனையில் பந்துகள் வீணடிப்பு என இருமுனை அழுத்தங்களில் சிக்கியது பஞ்சாப். மக்ஸ்வெல், சோன் மார்ஷ் இருவரும் இணைந்து பஞ்சாப்பின் தாக்கத்தை ஏற்படுத்த படாதபாடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் வெற்றியும் கண்டனர். இணைப்பாட்டமாக 89 ஓட்டங்கள் பகிரப்பட்டன. ஐந்து ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் மார்ஷ். 33 பந்துகளில் அரைச்சதத்தை நிறைவுசெய்தார் மக்ஸ்வெல். இறுதி நான்கு பந்துப்பரிமாற்றங்களில் 57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலைமை. களத்தில் மக்ஸ்வெல், மில்லர். ஒரே பந்துப்பரிமாற்றத்தில் மக்ஸ்வெல், நைக் இருவரையும் போல்ட் செய்தார் பும்ரா. பும்ரா தான் வீசிய முதல் மூன்று பந்துப்பரிமாற்றங்களில் ஓர் பவுண்டரியைத்தானும் விட்டுக் கொடுக்கவில்லை. மக்கெலிநகனின் பந்துவீச்சும் துல்லியமாய் அமைய 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் பஞ்சாப்பால் 164 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

பந்துவீச்சில் மும்பையின் சார்பாக பும்ரா 3 இலக்குகளையும், சவுத்தி, மக்கெலிநகன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர். (ம)

# கோப்பாய் - யாழ். பிரதேச அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கோப்பாய், யாழ். பிரதேச அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்டப்பயிற்சி மைதானத்தில் பிற் பகல் 3.30மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரை யிறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியும் ஆட்ட நேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் கோப் பாய் பிரதேச செயலக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியின் வீமா தனது அணிக்கான முதலாவது கோலினைப் பதிவு செய்தார். 15ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண பிரதேச செய லக அணியின் யக்சன் பதிலடி கொடுக்க தற்பொழுது நிலைமை 1:1. 26ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய 2:1 என்ற யாழின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியின் 52 ஆவது நிமிடத்தில் நிதர்சனும், யூட் 55 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய,முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது யாழ்ப்பாண பிரதேச செயலக அணி. (23)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு**
அல்சேசியன், ஜேர்மன் சீபட் நாய்க்குட்டிகள் கோண்டாவிலில் விற்பனைக்குண்டு.
075 657 5875

## தேவை

ஆங்கில, சிங்கள மொழியில் சரளமாக உரையாற்றக்கூடிய, அறிக்கையிடக்கூடியவர்கள் தேவை.
வயதெல்லை தேவை இல்லை.
**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதி திகதி : 05.05.2016**
105, இராச வீதி, கோப்பாய்.
(பொலிஸ் நிலையம் அருகில்)
e-mail: aventhan377@gmail.com

## காணவில்லை



**சிவஞானம் சிவலோகநாதன்**

புகைப்படத்தில் உள்ளவர் கடந்த (22.04.2016) வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் இருந்து காணாமல் போயுள்ளார்.
பெயர்: சிவஞானம் சிவலோகநாதன் (சிவம்) "ஆண்டவர் போட்டோ"
முகவரி:- "சீனட்டி" வல்வெட்டி வல்வெட்டித்துறை
**இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் 077 652 8620 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது சி.சிவபாக்கியநாதன் பத்தமேனி அச்சுவேலி என்ற முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்த மருத்துவ அலகு

**2014/2015 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவ பிரிவுக்கு 2014/2015 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 02.05.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவப் பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து புகுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## களப்பணியாளர்கள் தேவை

சமூகசேவையை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றிற்கு களப்பணிகள் மேற்கொள்வதற்காக சிறந்த அர்ப்பணிப்பும் பொறுப் புடமையும் சேவை மனப்பான்மையும் உடைய பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட விருக்கின்றனர். பொருத்தமுடையோர் தங்களை சிபார்சு செய்யக்கூடிய இருவரது தொடர்பிலக்கத்தைக் குறிப்பிட்டு தங்கள் சுயவிவரக்கோவையினை கீழ் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் விண்ணப் பிக்க முடியும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 05.05.2016**

**விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்**

1) க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) வயது எல்லை 18-35 வரை
3) சமூக சேவை நோக்கும் சமூகப் பொறுப்பும் மிக்கவர்களாக இருத்தல்
4) கணினித் தட்டச்சில் தமிழ் ஆங்கில தேர்ச்சி அவசியம். சிங்களம் விரும்பத்தக்கது.
5) சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி
மின்னஞ்சல்: aventhan377@gmail.com
முகவரி:
இல. 105, இராச வீதி, கோப்பாய்.
(பொலிஸ் நிலையம் அருகில்)

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர் யுவதிகள், U/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களிடம் 3 மாதங்களில் எம்முடன் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 30.04.2016
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.